# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள் - 40
விலை - 40 ரூபா

24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

சுடர் 35 கதிர் 05 கார்த்திகை 15ஆம் நாள் ஞாயிற்றுக்கிழமை 01 டிசெம்பர் 2019 வள்ளுவர் ஆண்டு 2050

இந்திய அரசு விரும்புகின்ற

# தமிழர் வேணவாவைப் பூர்த்தி செய்ய கோத்தா நடவடிக்கை எடுக்கவேண்டும்

கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கோரிக்கை



கொழும்பு, டிசெம்பர் 1

இந்தி யத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையிலான அந்த நாட்டு அரசு விரும்புகின்ற – எதிர்பார்க்கின்ற இலங்கைத் தமிழ் மக்களின் வேணவாக்களை நிறைவேற்றும் நல்லிணக்க நடைமுறையை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான அரசு முன்னெடுக்க வேண்டும். இந்த அரசாவது இந்திய அரசின் தொடர் கோரிக்கையான அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தன் தெரிவித்தார். 37

## சிறுமிக்கு பாலியல் துன்புறுத்தல் சந்தேகத்தில் இருவர் கைது

யாழ்ப்பாணம், டிசெ. 1

வல்வெட்டித்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 9 வயதுச் சிறுமிக்கு பாலியல் ரீதியான துன்புறுத்தல் கொடுத்தார்கள் என்ற குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர். ஆலய பூசகர் ஒருவரும், அந்தச் சிறுமியின் சித்தப்பா முறையிலான ஒருவருமே கைதாகியுள்ளனர்.

கடந்த 27ஆம் திகதி 9 வயதுச் சிறுமியிடம் கைப்பேசி இருந்ததை பாடசாலை ஆசிரியர்கள் அவதா 37

## 24 கிலோ கஞ்சா மீட்பு

யாழ்ப்பாணம், டிசெ. 1

24 கிலோ கஞ்சா நேற்றுக் கைப்பற்றப்பட்டுள்ளது. அக்கரை கடற்கரைப் பகுதியில் உள்ள பற்றைக்குள் இருந்து கஞ்சாப் பொதி மீட்கப்பட்டுள்ளது. நீரில் நனைந்த நிலையில் கஞ்சாப் பொதி கைப்பற்றப்பட்டுள்ளது. இது தொடர்பில் சந் 05

கடத்தப்பட்ட பணியாளர்

## வாக்குமூலமளிக்கும் நிலையில் இல்லை

சுவிஸ் தூதரகம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 1

கொழும்பில் கடத்தப்பட்டு அச்சுறுத்தப்பட்ட தமது தூதரகத்தின் 05

யுஎன்டிபியின்

## பிராந்திய பணிப்பாளராக இலங்கைத் தமிழ்ப் பெண்




கொழும்பு, டிசெ. 1

இலங்கைத் தமிழ்ப் பெண்ணான, கன்னி விக்னராஜா ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் (யுஎன்டிபி) ஆசிய பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளராக 37

## மழை இன்றும் தொடரும்

யாழ்ப்பாணம், டிசெ. 1

வடக்கு, கிழக்கு, ஊவா, வடமேல், சப்ரகமுவ மேல் மற்றும் மத்திய மாகாணங்களிலும் அனுராதபுரம் மாவட்டத்திலும் தற்போது காணப்படும் மழையுடனான வானிலை மேலும் தொடரும் சாத்தியம் காணப்படுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. 06

## முக்கிய வழக்குகளை விசாரித்த மற்றொரு அதிகாரி இடமாற்றம்!

கொழும்பு, டிசெ. 1

புங்குடுதீவு மாணவி வித்தியா படுகொலை, ஊடகவியலாளர்கள் மீதான வன்முறைகள் பற்றிய விசாரணைகளை முன்னெடுத்து வந்த உதவிப் பொலிஸ் அத்தியட்சர் எஸ்.பி.திசேரா 05

## நீதிக்காகப் போராடுகின்ற ஒருவனாக நான் மீண்டும் அரசியலுக்கு வருவேன்

மைத்திரி அதிரடி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 1

அநீதி செய்பவர்கள் வாழலாம். ஆனால், நீதிக்காகப் போராடும் ஒருவனாக நான் மீண்டும் வருவேன். அரசியலில் எனது கதை முடியவில்லை. இவ்வாறு முன்னாள் அரச தலைவர் மைத்திரி 37

## இரணைமடு நீர்மட்டம் 21அடி

கிளிநொச்சி, டிசெ. 1

வடகிழக்கு பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பித்துள்ள போதிலும் வடக்கிலுள்ள மிகப் பெரிய குளமான இரணைமடுக் குளம் தற்போது வரையில் 21 அடிக்கே நிரம்பி 37

## தூதரக அதிகாரி கடத்தல் பக்கச்சார்பற்ற விசாரணை

வலியுறுத்துகிறது மனித உரிமைகள் ஆணைக்குழு

கொழும்பு, டிசெ. 1

சுவிஸ் தூதரக அதிகாரி இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு விடுவிக்கப்பட்ட விவகாரம் தொடர்பில் பக்கச் சார்பற்ற விசா 37

## வடக்கிலிருந்து ராணுவத்தை எப்போதும் அகற்றமாட்டோம்

புதிய பாதுகாப்பு செயலர் திட்டவட்டம்

கொழும்பு, டிசெ. 1

வடக்கு மாகாணத்திலிருந்து ஒருபோதும் இராணுவ முகாம்களையோ அல்லது இராணுவத்தினரையோ அகற்றமாட்டோம் என்று புதிய பாதுகாப்புச் செயலரான மேஜர் ஜெனரல் கமல் 37

## கடத்தல், மிரட்டல்களுக்கு சஜித் கண்டன அறிக்கை!

கோத்தபாயவுக்கு கடும் எச்சரிக்கை

கொழும்பு, டிசெ. 1

நாட்டைப் பாதுகாக்கவும், பொருளாதாரத்தை மேம்படுத்தவும் மக்கள் வழங்கிய ஆணையைக் காட்டிக் கொடுக்கும் வகையில் செயற்பட வேண்டாம் என்று அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவிடம் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் 37

## கிளிநொச்சியில் மின்சாரம் தாக்கி பல்கலைக்கழக மாணவன் சாவு

கிளிநொச்சி, டிசெ. 1

கிளிநொச்சி சிவநகர் உருத்திரபுரம் பகுதியில் மின்சாரம் தாக்கி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 37

## முல்லைத்தீவில் குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயம்

முல்லைத்தீவு, டிசெ. 1

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக தொடர்ச்சியாக பெய்துவரும் கன மழை காரணமாக, மாவட்டத்திலுள்ள குளங்கள் அனைத்தும் நீர் நிரம்பிக் காணப்படுகின்றன. இந்த நிலையில் முல் 37

## குருதிக்கொடை

யாழ்ப்பாணம், டிசெ. 1

மக்கள் வங்கியின் திருநெல்வேலி சேவை நிலையத்தில் இன்று காலை 8 மணி முதல் பி.ப. 2 மணி வரை குருதிக் கொடை இடம்பெறவுள்ளது. குருதிக் கொடையாளிகள் எவரும் இதில் பங்கேற்க முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.5)

கோத்தா - மோடி

## ஒரு மணி நேரம் தனியாகப் பேச்சு

புதுடில்லி, டிசெ. 1

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தனியாக ஒரு மணி நேரம் பேச்சு நடத்தியுள்ளார். நேற்றுமுன்தினம் மதியம் ஐதராபாத் இல்லத்தில் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

இரு நாடுகளின் தலைவர்களுடன் அதிகாரிகள் எவரும் சந்திப்பில் பங்கேற்கவில்லை. இந்தியத்தலைமை அமைச்சர் நரேந்திர மோடியுடன் அவரது உதவியாளர் ஒருவர் மாத்திரம் சந்திப்பில் பங்கேற்றிருந்தார்.

இதுகுறித்து தமது கீச்சகப் பக்கத்தில் கருத்து வெளியிட்டுள்ள கோத்தபாய ராஜபக்ச, எங்கள் நாடுகளின் இதயங்களுக்கு முக்கியமான மற்றும் நெருக்கமான பல முக்கிய அம்சங்கள் குறித்து கவனம் செலுத்தப்பட்டது. இலங்கை, இந்தியா இடையே, பரஸ்பர மரியாதை மற்றும் பகிரப்பட்ட மதிப்புகளின் அடிப்படையில் ஒரு வலுவான உறவை உருவாக்க முடியும் என்று நான் நம்புகிறேன், எனக் குறிப்பிட்டுள்ளார். (ஒ.5)

யாழ். பல்கலை துணைவேந்தர் பதவி

## விண்ணப்பங்களை மதிப்பீடு செய்ய மூவர் அடங்கிய குழு நியமனம்!

யாழ்ப்பாணம், டிசெ. 1

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தரைப் பரிந்துரை செய்வதற்கான தேர்தலை நடாத்துவதற்கான முன்னாயத்தப் பணிகளை மேற்கொள்வதற்காக மூவரடங்கிய மதிப்பீட்டு குழு ஒன்று நியமிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ண ப்பித்துள்ளவர்களின் தகுதி, தராதரங்களை மதிப்பிடுவதற்கும், தேர்தல் தினத்தை தீர்மானிப்பதற்குமான குழுவைத் தெரிவு செய்வதற்காக யாழ். பல்கலைக்கழக பேரவை நேற்றுக் கூடியது.

யாழ்ப்பாண பல்கலைக்கழக தகுதி வாய்ந்த அதிகாரி பேராசிரியர் க.கந்தசாமி தலைமையில் இடம்பெற்ற பேரவையின் சிறப்புக் கூட்டத்தில் துணைவேந்தர் பதவிக்கான விண்ணப்பங்களை மதிப்பீடு செய்து தேர்தலை நடாத்துவதற்கு வசதியான திகதியை பேரவைக்கு அறிவிப்பதற்காக யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌதிகவியல் துறைப் பேராசிரியர் பு.ரவிராஜன், பேராதனைப் பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் கலாநிதி சி.சிவலோகநாதன், மொரட்டுவ பல்கலைக்கழகத்தின் முன்னாள் பதிவாளர் ஜப்ர் சாதிக் ஆகிய மூன்று பேரவை உறுப்பினர்கள் அடங்கிய குழு நியமிக்கப்பட்டிருக்கிறது.

பேரவைக் கூட்டத்தில் நியமிக்கப்பட்ட குழுவின் மதிப்பீட்டு அறிக்கை கிடைத்ததும், குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தேர்தல் திகதி பேரவையால் தீர்மானிக்கப்படும். தேர்தல் தினத்தன்று தேர்தலைக் கண்காணிப்பதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் நியமிக்கப்படும் ஒருவர் பார்வையாளராகக் கலந்து கொள்வார். அடுத்து வரும் மூன்று மாத காலப்பகுதிக்குள் இயலுமான அளவு விரைவாக துணைவேந்தர் பதவிக்கான தேர்தலை நடாத்துவதென கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

நடந்து முடிந்த அரச தலைவர் தேர்தல் காலத்தில் யாழ்ப்பாண பல்கலைக்கழக பேரவைக்கு புதிதாக நியமனம் செய்யப்பட்டு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலுக்கமைய இதுவரை காலமும் பேரவைக் கூட்டங்களில் கலந்து கொள்ளாத புதிய உறுப்பினர் கு.சிவராம் நேற்றைய கூட்டத்தில் பங்கேற்றிருந்தார். (ஒ.5)

மூன்றிலிரண்டு பெரும்பான்மையை

# கோத்தா தரப்பு பெற்றால் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு அதை ஏன் பயன்படுத்தக் கூடாது?

## இப்படிக் கேள்வி எழுப்புகிறார் சுரேஸ் பிரேமச்சந்திரன்

*யாழ்ப்பாணம், டிசெ. 1*

மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் கோத்தபாய தரப்பு வெற்றிபெற்றால், அதைப் பன்படுத்தி இனப்பிரச்சினையை தீர்க்க ஏன் முயற்சிக்கக்கூடாது? ஏற்கனவே ஐ.தே.கவுடன் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்தும் உங்களால் தீர்க்க முடியவில்லை. இப்பொழுது இவர்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்தால், நாம் சிறிய தேசிய இனமென்ற அடிப்படையில் அவர்களுடன் பேசி தீர்வுக்கு வரமுடியுமா என்பதை பார்க்க வேண்டும். இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஸ் பிரேமசந்திரன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடத்திய செய்தியாளர்கள் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்படாது, அதற்கு யாப்பு தேவையில்லை, அதற்கு மையச் செயற்குழுக்கள் தேவையில்லையென்ற கோணத்தில்தான் செயற்பட்டார்கள். தமிழ் அரசுக் கட்சியின் தலைவர்கள் சம்பந்தன், சுமந்திரன், மாவை ஆகியோர் எடுப்பது தான் முடிவாக இருந்தது. ஏனைய கட்சிகளின் கருத்துக்கள் கணக்கிலெடுக்கப்படுவதில்லை. இதன் காரணமாகத்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிலிருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழர் விடுதலைக் கூட்டணி, நாங்கள் வெளியேறினோம். இந்த வெளியேற்றத்திற்கு அவர்கள்தான் மூலகாரணமாக இருந்தார்கள்.

எல்லோரும் ஒற்றுமையாக இருக்க வேண்டும், மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கோத்தா தரப்பு எடுக்க விடக்கூடாது என்று சுமந்திரன் சொல்கிறார். 2015ஆம் ஆண்டு தேர்தலில் சம்பந்தன், சுமந்திரன் பல வாக்குறுதிகளை கொடுத்தார்கள். பின்னர் அரசுடன் இணைந்து செயற்பட்டார்கள். ஜெனிவாவில் அரசைப் பாதுகாத்து செயற்பட்டார்கள்.

சுமந்திரன், சம்பந்தன் போன்றவர்கள், அரசமைப்புக் கொண்டு வரப்படும், அதுவரை அரசுக்கு அழுத்தம் கொடுக்கக்கூடாது என்று சொல்லி, நாலரை வருடமாகப் பேச்சு நடந்தது. ஒரு வருடத்தில் முடிகிறது, இரண்டு வருடங்களில் நடக்கிறது என்று இப்பொழுது குப்பைக்கூடை க்குள் போய்விட்டது. இதைக் கூறி, தமிழ் மக்களின் ஏனைய பிரச்சனைகளை கைவிட்டனர்.

அரசியல் கைதிகள், காணி விடயம் என்று பல விடயங்கள். அரசமைப்பு வந்தால் எல்லாம் சரியாகிவிடுமென சொன்னார்கள். இப்பொழுது அரசமைப்பும் இல்லை, அந்த விவகாரங்களும் நடக்கவில்லை.

இவர்களின் நடவடிக்கையில் தமிழ் மக்கள் விரக்தி, வெறுப்பு ஏற்பட்டு பல வழிகளில் வெளிப்படுத்தியுள்ளனர். கடந்த உள்ளூராட்சிமன்றத் தேர்தலில், 50 வீதத்திற்கும் மேலான வாக்குகள் அவர்களுக்கு விழவில்லை. அரச தலைவர் தேர்தலில் மக்கள் ஏற்கனவே தீர்மானத்தை எடுத்திருந்தனர். கடந்த காலத்தில் மக்கள் கொல்லப்படவும், காணாமல் போகவும் காரணமாக இருந்தவர் அரச தலைவராக வரக்கூடாதென உறுதியாக இருந்தார்கள். அந்த மாற்று தெரிவுக்கு வாக்களித்தனர். விக்னேஸ்வரன், நாங்கள், மக்கள் விரும்பிய வர்களுக்கு வாக்களியுங்கள் என்று கூறினோம். ஏனெனில், மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள் என்பது எமக்கு தெரியும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, சஜித்தை ஆதரிக்கும் முடிவெடுத்து, தீவிர பரப்புரை செய்து, கோத்தபாய ராஜபக்ச வெற்றியடைய காரணமாக சம்பந்தனும், சுமந்திரனும் மாறினார்கள். கடந்த நான்கரை வருட செயற்பாட்டில் நாம் தோல்வியடைந்து விட்டோம் என்பதை சுமந்திரன் தரப்பு புரிந்து கொள்ள வேண்டும்.

தாம் விட்ட தவறுகளைப் புரிந்து கொள்ளாமல் மீண்டும் ஐக்கியத்தை பற்றி பேசுவது, மக்களை ஏமாற்றி வாக்கை எடுப்பதற்கே.

நான்கரை வருடமாக மூன்றில் இரண்டு பெரும்பான்மையை வைத்துக் கொண்டு, அரசமைப்பைக் கொண்டு வர முடியாமல் இருந்தார்கள். வரப்போகும் தேர்தலில் கோத்தா தரப்பு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்றால் தமிழர்களிற்கு 'எதிராகச் செயற்படுமென சொல்கிறார்கள். நாடாளுமன்றத் தேர்தல் விகிதாசார முறைப்படி நடக்கும். அதில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்குமா என்பதெல்லாம் தெரியாது. அரச தலைவர் தேர்தல் முடிவுகளை பார்க்கும்போது கோத்தா தரப்பு மீண்டும் ஆட்சிக்கு வருமென தெரிகியது.

கோத்தபாயவைத் தோற்கடிக்க வாக்களிக்கும்படி கேட்டார்கள். கோத்தா வென்று விட்டார். மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்கக்கூடாது, நாங்கள் ஒன்று சேர வேண்டுமென்கிறார்கள். அவர்களிற்கு வாக்களிப்பது சிங்கள மக்கள், தமிழ் மக்கள் இரண்டு பிரதான கட்சிக்கும் வாக்களிப்பதில்லை. தமிழ் மக்கள் தமக்கான பிரதி நிதிகளை தெரிவு செய்ய வேண்டும். சுமந்திரன், சம்பந்தன், அவர்களின் நடவடிக்கை தொடர்பாகவும் மக்கள் தெளிவாக புரிந்து வைத்திருக்கிறார்கள். மாற்று அணி வரக்கூடாது, கோத்தா தரப்புக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்க விடக்கூடாது என சொல்வதற்கு தேவையில்லை. அதை மக்கள் தீர்மானிக்கும் காலம் வந்துள்ளது. மாற்று அணி தேவையில்லை, மூன்றில் இரண்டு பெரும்பான்மை வரவிடக்கூடாது என்று சுமந்திரன் சொல்லத் தேவையில்லை.



அரச தலைவர் தேர்தலிலும் சிங்கள மக்களின் வாக்கிலேயே வெற்றி பெற்றார்கள். அவர்களிற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கொடுக்க வேண்டுமென சிங்கள மக்கள் முடிவெடுத்தால், அது நடக்கலாம். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் வந்தால், 19ஆவது திருத்தச்சட்டத்தை சில சமயங்கள் அவர்க்ள் மாற்றலாம். அதைமாற்றினால் சுதந்திர தேர்தல் ஆணைக்குழு, உறுதிப்படுத்தப்பட்ட சில விடயங்கள் மாற்றப்படலாம். பலமுறை ஒருவர் 'அரச தலைவராகலாம். 19ஆவது திருத்தத்தால் பாதிக்கப்பட போவது பெரும்பான்மையான சிங்கள மக்களே.

தமிழ் மக்கள் ஏற்கனவே பலவிதத்திலும் பாதிக்கப்பட்டுள்ளனர். தமிழ் மக்கள் தம்மைத்தாமே நிர்வகிக்க, தமது பாதுகாப்பை பலப்படுத்த எப்படியான உபாயங்களை வகுப்பதென நாங்கள் தீர்மானிக்க வேண்டுமே தவிர, சுமந்திரன் ஒருவர் தீடிரென மூன்றில் இரண்டு பெரும்பான்மை வரக்கூடாது, மாற்று அணி வரக்கூடாது என்பது தமிழ் மக்களை முழுக்க முழுக்க ஏமாற்றும் நடவடிக்கையே - என்றார். (ஒ.5)

# பொலிஸாரின் காவலரண் விசமிகளால் உடைப்பு

## மீண்டும் அமைக்குமாறு மக்கள் கோரிக்கை

சாவகச்சேரி, டிசெ.1

சட்ட விரோதச் செயற்பாடுகளைக் கண்காணிக்கவென கனகன் புளியடிச் சந்தியில் பொலிஸாரால் அமைக்கப்பட்டிருந்த காவலரண் ஒன்று இனந் தெரியாத நபர்களால் சேதமாக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

சட்டவிரோத செயல்பாடுகளைக் கட்டுப்படுத்த சாவகச்சேரி பொலிஸாரால் சரசாலை கனகன்புளியடிச் சந்தியில் காவல் அரண் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. அந்தக் காவல் அரண் அங்கு அமைந்திருந்ததால் மணல் மற்றும் மரம் கடத்தல் கசிப்பு உற்பத்தி போன்றவை குறைவடைந்திருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது. எனினும் கடந்த புதன்கிழமை இரவு பொலிஸார் மற்றும் படையினர் இல்லாத வேளையில் இனந்தெரியாதோர் அந்தக் காவலரணை அடித்து சேதப்படுத்திவிட்டுச் சென்றுள்ளனர். இந்தச் சம்பவத்தைக் கண்டித்துள்ள அந்தப் பகுதி மக்கள் அங்கு மீண்டும் காவலரண் அமைத்து சட்டவிரோதச் செயல்பாடுகளைக் கட்டுப்படுத்துமாறு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். அந்த முறைப்பாட்டில் நூற்றுக்கு மேற்பட்டோர்கையொப்பமிட்டுள்ளனர். (ஐ-9)

## வித்தியா படுகொலைச் சம்பவத்தில்

# இரண்டாவது சந்தேகநபர் இல்லாமல் விசாரணை

## யாழ்.மேல்நீதிமன்று தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,டிசெ. 1

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மாணவி படுகொலை வழக்கின் முக்கிய சூத்திரதாரியான சுவிஸ்குமாரை விடுவிக்க உதவிய குற்றச்சாட்டு வழக்கில் இரண்டாவது சந்தேகநபரான முன்னாள் உதவிப்பொலிஸ் பரிசோத்கர் சிறிகஜன் தலைமறைவாகியுள்ள நிலையில், அவர் இல்லாமலேயே வழக்கை விளக்கத்துக்கு எடுக்க யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அதனடிப்படையில் வழக்கின் முதலாவது எதிரியான வடக்கு மாகாண முன்னாள் மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்கவுக்கு எதிரான குற்றப்பத்திரிகை நீதிமன்றில் வாசித்துக் காண்பிக்கப்பட்டது. அவர் தன்மீதான குற்றச்சாட்டை மறுத்து சுற்றவாளி என்று மன்றுரைத்தார்.

இவரும் சிறிகஜனும், புங்குடுதீவு மாணவி படுகொலைவழக்கின் முக்கிய சூத்திரதாரியாக கூறப்படும் சுவிஸ்குமார் என அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரை விடுவித்து உதவினார்கள் என்று குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இருவருக்கும் எதிராக யாழ்ப்பாண மேல் நீதிமன்றில் சட்ட மா அதிபர் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்துள்ளார்.

அதில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா உட்பட 30 பேர் வரையில் சாட்சிகளாக இணைக்கப்பட்டுள்ளனர்.

“இந்த வழக்கின் ஆவணங்கள் உரியவாறு வழக்குத் தொடுநரிடமிருந்து கிடைக்கவில்லை. அத்துடன், இந்த வழக்கின் புலன் விசாரணை அதிகாரி முதன்மைப் பொலிஸ் அத்தியட்சகர் நிசாந்த சில்வா நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார். அதுதொடர்பில் சட்ட மா அதிபருடன் கலந்துரையாடப்படவேண்டும்” என்று எதிரி லலித் ஜெயசிங்க சார்பில் முன்னிலையான சட்டத்தரணி மன்றுரைத்தார்.

எதிரி தரப்பு விண்ணப்பத்தை ஆராய்ந்த யாழ்ப்பாண மேல் நீதிமன்ற நீதிபதி அ.பிரேமசங்கர், வழக்கின் ஆவணங்களை எதிரி தரப்புக்கு வழங்குவதற்காக வரும் பெப்ரவரி 18ஆம் திகதிவரை வழக்கை ஒத்திவைத்தார்.

**பின்னணி**

புங்குடுதீவு மாணவி வித்தியா சிவலோகநாதன், 2015ஆம் ஆண்டு மே 13ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். மறுநாள் அவரது சடலம் பற்றைக் காணிக்குள் எடுக்கப்பட்டது.

வழக்கின் சந்தேகநபர்களைப் பொலிஸாரும் பொதுமக்களும் பிடித்தனர். சுவிஸ் குமார் என்று அழைக்கப்படும் மகாலிங்கம் சசிக்குமார் என்பவரையும் ஊர் மக்கள் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அவரை யாழ்ப்பாணம் அழைத்து வந்த உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன், அன்றையதினம் இரவு பொலிஸ்காவலிலிருந்து அவரை விடுவித்தார் என்றும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அதில் தொடர்புபட்டுள்ளார் என்றும் குற்றஞ்சா ட்டப்பட்டது.

அதுதொடர்பில் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் ஊர்காவற்றுறை நீதிவான் மன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர். மூத்த பிரதிப் பொலிஸ் மா அதிபர் லலித் ஏ ஜெயசிங்க கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் இருந்து பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார். உப பொலிஸ் பரிசோதகர் சிறிகஜன் தலைமறைவாகி உள்ளார். அவருக்கு எதிராக நீதிமன்றால் பகிரங்கப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்கு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றில் நடைபெற்று சட்ட மா அதிபரின் நடவடிக்கைக்காக விடப்பட்டது.

இதேவேளை, மாணவி படுகொலை வழக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற தீர்ப்பாயம் முன்னிலையில் இடம்பெற்றது. சுவிஸ் குமார் உள்ளிட்ட 7 பேருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் கீழ் தூக்குத் தண்டனை விதிக்கக் கூடிய குற்ற ஞ்சாட்டப்பட்டவரை தடுப்பில் இருந்து விடுவிக்க உதவினர் என்ற குற்றம் நிரூபிக்கப்பட்டால் முன்னாள் பொலிஸ் அலுவலர்களான இருவருக்கும் தலா 5 ஆண்டுகளுக்கு விஞ்சாத சிறைத் தண்டனை விதிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (து-37)

# கம்போடியா செல்கிறார் பத்திநாதன்

யாழ்ப்பாணம், டிசெ.1

வடக்கு மாகாண பிரதம செயலாளர் அ.பத்திநாதன் உலக உணவுத் திட்டம் தொடர்பாக இடம்பெறும் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக கம்போடியா செல்கின்றார்.

உலக உணவுத் திட்டம் தொடர்பில் நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகள் பங்கு கொள்ளும் மாநாட்டிலேயே இலங்கையின் வடக்கு மாகாண பிரதம செயலாளரும் பங்கு கொள்ளவுள்ளார்.

நாளை முதல் 5 நாள்கள் இடம்பெறும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதம செயலாளர் அடுத்த வாரமே நாடு திரும்புவார் எனத் தெரிவிக்கப்படும் நிலையில் குறித்த பயணத்துக்காக அரச தலைவரின் செயலாளர் அனுமதி வழங்கியுள்ளார். (எ-105)

# வவுனியாவின் 4 வட்டாரங்களையும் வெலிஓயாவுடன் இணைத்துவிடுங்கள்

யாழ்ப்பாணம், டிசெ.-01

வவுனியா வடக்குப் பிரதேச சபையுடன் உள்ள நான்கு வட்டாரங்களை வெலிஓயா பிரதேச சபையுடன் இணைத்து இரு உள்ளூராட்சி மன்றங்களின் சிறந்த நிர்வாகத்துக்கு வலு ஏற்படுத்த வேண்டும் என்று வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் மாவட்ட தமிழ் அரசுக் கட்சியின் வவுனியா மாவட்டத் தலைவருமான ப.சத்தியலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கலாபோகஸ்வெளயை அண்டிய குடியேற்றக் கிராமங்களான 17 கிராமங்கள் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துடன் நேரடியாக நிலத்தொடர்பு அற்ற பகுதியாகும். இந்தக் கிராமங்களை உள்ளடக்கியதான 4 உள்ளூராட்சி வட்டாரங்கள் கடந்த உள்ளூராட்சித் தேர்தலின்போது வவுனியா வடக்குப் பிரதேச சபையுடன் இணைக்கப்பட்டிருந்தன.

எனினும் இந்தக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் தமது பிரதேச செயலக சேவைகளை வெலிஓயா பிரதேச-செயலகத்திலிருந்தே பெற்று வருகின்றனர்.

2019ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட தேருநர் இடாப்பிலும் இவர்களின் பெயர்கள் வவுனியா வடக்குப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட பாரம்பரிய தமிழ்க் கிராம அலுவலர் பிரிவுகளான வெடிவைத்தகல்லு மற்றும் பட்டிக்குடியிருப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இந்த மக்கள் தமது சுகாதார சேவைகளை முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையிலும், சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்கான சேவைகளை வவுனியா தெற்கு சிங்கள பிரிவிலுள்ள பணிமனையிலும், மின்சார, தொலைபேசி சேவைகளை அநுராதபுர மாவட்டத்திலிருந்தும் பெற்று வருகின்றார்கள்.

வவுனியா வடக்குப் பிரதேச செயலக, பிரதேச சபை சேவைகளை பெறும்பொருட்டு 75 கிலோமீற்றர் காட்டுவழியால் பயணிக்கின்றார்கள்.


2015ஆம் ஆண்டு வவுனியா வடக்குப் பிரதேச சபையின் 47ஆவது அமர்வில் மேற்படி வட்டாரங்களைச் சேர்ந்த 4 உறுப்பினர்கள், “தாங்கள் வவுனியா வடக்குப் பிரதேச சபையின் ஆளுகையிலிருந்து விலகவுள்ளோம். விலக்குங்கள்” என்று கோரி முன்வைத்திருந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

கடந்த மாகாணசபை அமர்வில் இது தொடர்பாக நான் கொண்டுவந்த தீர்மானம் சபையால் அங்கீகரிக்கப்பட்டு மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

ஆகவே தற்போது வெலிஓயா பிரதேசத்துக்குத் தனியான பிரதேச செயலகம் நிறுவப்பட்டுள்ள நிலையில் மேற்படி நான்கு வட்டாரங்களைச் சேர்ந்த 17 கிராமங்களையும் சேர்ந்த மக்களையும் அவர்களின் விருப்பத்துக்கேற்றவாறு வெலிஓயா பிரதேச சபையுடன் இணைப்பதற்கு அல்லது வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையுடன் இணைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

குறித்த கோரிக்கை சிங்கள மக்களின் விருப்பத்துக்கு மாறான கோரிக்கையும் அல்ல. ஏனெனில் அந்த மக்களும் இதனையே விரும்புகின்றனர். இது தொடர்பில் 2018ஆம் ஆண்டு மாகாண எல்லை வரம்பு குழு வுக்கும் ஓர் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது. இதுவரை எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை - என்றார். (து-105)

# கொடிகாமம் நகரில் மாவீரர்களுக்கு அஞ்சலி



கொடிகாமம், டிசெ.01

மாவீரர் தினத்தை முன்னிட்டு கொடிகாமம் நகர் மத்திய பேருந்து நிலைய வளாகத்தில் அஞ்சலி நிகழ்வுகள் கடந்த புதன்கிழமை நடைபெற்றன.

அன்றைய தினம் மாலை 6.05 மணிக்கு மாவீரர்களின் பெற்றோர்கள் ஈகைச் சுடரேற்றி, அஞ்சலி நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ. மயூரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், சாவகச்சேரி நகரசபை தவிசாளர் சிவமங்கை இராமநாதன், மாவீரரின் பெற்றோர்கள், உறவினர்கள், நகரசபை உபதவிசாளர் அ.பாலமயூரன், மாகாண சபை முன்னாள் உறுப்பினர் கே.சயந்தன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர்கள், நகரசபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள் முச்சக்கரவண்டி சங்கத்தின, தனியார் சிற்றூர்தி சேவைச் சங்கத்தினர், பொது மக்கள் கலந்து கொண்டனர். (க-159)

# கோத்தாக்கு இன்ப அதிர்ச்சி கொடுத்த நரேந்திர மோடி



புதுடில்லி, டிசெ. 1

இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவுக்கு, இந்திய தலைமை அமைச்சர் நரேந்திர மோடி ஒளிப்படம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளார்.

இது தொடர்பில் அரச தலைவர் கோத்தபாய தெரிவித்ததாவது,

மோடியைச் சந்தித்த போது, அவர் எனக்கு அன்பளிப்புச் செய்த ஒளிப்படம் எனக்கு இன்ப அதிர்ச்சியைத் தந்தது. இலங்கை இராணுவத்தில் நான் பணியாற்றிய காலத்தில் பயிற்சியை இந்திய பாதுகாப்பு பயிற்சிக் கல்லூரியில் பெற்றுக்கொண்டிருந்த சமயத்தில் எடுக்கப்பட்ட படத்தையே மோடி அன்பு நினைவாக எனக்கு வழங்கினார்.

அந்த பயிற்சியில் என்னுடன் இணைந்திருந்த தற்போதைய இந்திய அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான ஜெனரல் வி.கே. சிங்கும் இருந்தார். தற்போதைய நைஜீரிய அரச தலைவரும் இந்த ஒளிப்படத்தில் இருப்பது இன்னொரு சிறப்பம்சம்.

'உங்களிடம் இல்லாத ஓர் அரிய ஒளிப்படம் இது' என்று கூறியபடி இதனை மோடி வழங்கியபோது, நான் மெய் சிலிர்த்து வியந்தேன். அந்த அரிய படத்தை அன்பு நினைவாக எனக்கு வழங்கிய மோடிக்கு எனது உளமார்ந்த நன்றிகள், என்று குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரச தலைவர் ஊடகப்பிரிவு நேற்று அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில், இராணுவத்தின் பணிக்குழாம் அதிகாரியாக இந்தியாவில் பயிற்சி பெற்ற சந்தர்ப்பத்தில் ஒரே முகாமில் பயிற்சி பெற்ற இரண்டு நண்பர்கள் அரசியல் நண்பர்களாக இன்று மீண்டும் சந்தித்தனர். இது அரசியல் விடயங்கள் பற்றி பேசுவதற்கான சந்திப்பு அல்ல. ஒருவர் இன்று இலங்கையின் தற்போதைய அரச தலைவர் கோத்தபாய. மற்றையவர் இந்தியாவின் பொதுப் போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் அமைச்சர் கலாநிதி ஜெனரல் வி.கே.சிங். இந்த சந்திப்பில், அவர்கள் இருவருடனும் பயிற்சி பெற்ற, இன்று ஓய்வு பெற்றிருக்கும் மேலும் 15 இராணுவ அதிகாரிகளும் கலந்துகொண்டனர். இது கடந்தகால நினைவுகளை மீட்டுகின்ற மிகவும் சுமூகமான சந்திப்பாக அமைந்திருந்தது.

இவர்களில் பெரும்பாலானவர்கள் இந்திய அமைதிகாக்கும் படையின் அதிகாரிகளாக இலங்கையில் சேவையில் ஈடுபட்டவர்களாகும். அந்த கடந்தகால நினைவுகள் மற்றும் மறக்க முடியாத நிகழ்வுகள் இந்த கலந்துரையாடலில் உள்ளடங்கி இருந்தது. அவர்கள் கடந்த காலத்தால் மீண்டும் ஒன்றிணைந்த புதிய நண்பர்களாக பிரிந்து சென்றனர்.

இந்த கடந்த கால நட்பினூடாக இரண்டு நாடுகளினதும் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான பெரிய அரண் மீண்டும் கட்டியெழுப்பப்பட்டிருப்பது இதில் முக்கியமான விடயமாகும். (ஒ.5)

# வறுமை ஒழிப்பு விடயத்தில் கவனம் செலுத்தவுள்ளோம்

## தாரக பலசூரிய தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

வறுமையை ஒழித்தல் தொடர்பில் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவின் தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களில் கவனம் செலுத்தி முன்னேற்றகரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள எதிர்பார்த்துள்ளோம் என்று சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் தாரக பலசூரிய தெரிவித்தார்.

இராஜாங்க அமைச்சர் தாரக பலசூரிய நேற்றுமுன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். அதன்பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சமுர்த்திக் கொடுப்பனவு பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையை குறைக்கும் வகையில் அவர்களுக்குரிய தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளது. சமுர்த்தி உத்தியோகத்தர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் கவனம் செலுத்தி அதனை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

ஒரு இல்ட்சம் வறிய குடும்பங்களுக்கு தொழில் பயிற்சிகளை அளிக்க தீர்மானித்துள்ளோம். அதனால் அவர்கள் சமுர்த்தி நிவாரண கொடுப்பனவுகளிலிருந்து விடுபடக் கூடியதாகவிருக்கும்.

சமுர்த்தி உத்தியோகத்தர்கள் மத்தியிலும் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அவர்களும் பல சவால்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர். அவை தொடர்பிலும் ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் - என்றார். (எ-61)

# வியாழேந்திரன் எம்.பி. கட்சியிலிருந்து நீக்கம்

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்தி ரன் கட்சியில் இருந்து முழு மையாக நீக்கப்பட்டு ள் ளார் என்று தமிழ் அரசுக் கட்சியின் செயலர் துரைராஜசிங்கம் தேர்தல் ஆணைக்குழுவுக்குக் கடிதம் மூலமாக அறிவித்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் புளொட் அமைப்பின் சார்பில் தமிழ் அரசுக் கட்சியில் 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வியாழேந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராகத் தெரிவு செய்யப்பட்டிருந்தார். 2018ஆம் தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியை அரசதலைவர் கலைத்து மகிந்த ராஜபக்சவை தலைமைஅமைச்சராக நியமித்தார். இதன்போது மகிந்த ராஜபக்சவுக்கு நாடாளுமன்றில் பெரும்பான்மை இல்லாத நிலையில் ஏனைய கட்சி உறுப்பினர்களையும் இழுக்கும் படலம் இடம்பெற்றது.

இதன்போது கூட்டமைப்பி லிருந்த வியாழேந்திரனும் மகிந்த பக்கம் தாவி பிரதி அமைச்சர் பதவியை எடுத்திருந்தார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டது. கலைத்தமைக்கு எதிராக நீதிமன்றம் சென்ற நிலையில் நாடாளுமன்றம் கலைக்கப்பட்டமை தவறு என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

இவ்வாறு கூட்டமைப்பில் புளொட் சார்பில் நிறுத்தப்பட்டவரை கட்சியின் அடிப்படை உறுப்புரிமையிலிருந்து நிறுத்துவதாக புளொட் தமிழ் அரசுக் கட்சிக்கு எழுத்தில் அறிவித்திருந்தது. தமிழ் அரசுக் கட்சி சார்பில் விளக்கம் கோரியது. விளக்கம் கோரியமைக்கு எதிராக நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்தார். குறித்த வழக்குத் தள்ளுபடி செய்யப்பட்டது. இந்த நிலையில் தற்போது உடலாலும் உள்ளத்தாலும் தாங்கள் முழு மையாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பி லி ருந்து விலகியிருப்ப தனால் புளொட் கட்சியிலிருந்து முழுமையாக அவர் நீக்கப்படுகின்றார் என்று எழுத்தில் அறிவிக்கப்பட்டு தேர்தல் ஆணைக்குழுவுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. (து-105)

# அரச தலைவர் தேர்தலில் மக்களுக்குத் தோல்வியே

## சிறிமத் சிறி அப்பு ஆராச்சி தெரிவிப்பு

கொழும்பு, டிசெ.1

அரச தலைவர் தேர்தலில் மக்கள் வெற்றி பெற்றுள்ளதாக கூறப்பட்டாலும் உண்மையில் மக்கள் தோல்வியடைந்தே உள்ளனர் என்று தெரிவித்துள்ளார் ஐக்கிய மக்கள் முன்னணியின் தலைவர் ஆச்சாரியர் சிறிமத் சிறி அப்பு ஆராச்சி.

கிருலப்பனையில் அமைந் துள்ள ஜனநாயக தேசிய அமைப்பு அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் கருத்துத் தெரிவித்தபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

கூட்டு அரசில் நாட்டின் சொத்துகள் விற்கப்பட் டுள்ளன என்றும், நாடு பிளவுப்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டு நாட்டைப்பாதுகாக்ககோத்த பாயவை வெற்றி பெறச் செய்யுமாறு மகாநாயக்க தேர்தர்களும், புத்திஜீவிகளும் தொடர்ந்தும் தெரிவித்து வந்தனர். அவ்வாறான செயற்பாடுகள்எமதுஆட்சியில்முன்னெடுக்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் மக்களுக்கு தெரியபடுத்துங்கள். இதுபோன்ற செயற்பாடுகளை முன்னெடுத்த அதிகாரிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுங்கள். எம்மைப் பொறுத்தமட்டில் ராஜபக்சவின் ஆட்சிகாலங்களின் போதே நாட்டின் பெரும் பகுதிகள் வெளிநாடுகளுக்கு விற்கப்பட்டிருந்தன.

கோத்தபாயவின் தேர்தல் அறிக்கையில் சிறிய அமைச்சரவையை உருவாக்குவதாகவும் , ஊழல், மோசடிகள் அற்ற உறுப்பினர்களுக்கே அமைச்சுப் பதவிகளை வழங்குவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் தற்போது 54 அமைச்சர்கள் நிய மிக்கப்பட்டுள்ளனர். அமைச்சு பதவிகளை பொறுப்பேற்றுள்ளவர்களில் பெரும்பாலானோர் யார்? கடந்த அரசுகளில் செயற்பட்டு பல குற்றச்சாட்டுகளுக்கு பாத்திரமானவர்கள் தானே. மகிந்த ராஜபக்சவின் ஆட்சியில் செயற்பட்ட மோசடிகாரர்களே தற்போது புதிய போர்வையொன்றை போர்த்திக் கொண்டு பொறுப்பேற்று வந்துள்ளனர். இவர்களிட மிருந்து நாட்டு மக்கள் எவ்வாறு நல்ல சேவையை எதிர்பார்க்க முடியும்?

கூட்டு அரசில் பேச்சு சுதந்திரம் , எழுத்துச் சுதந்திரம் , தகவல் அறியும் சுதந்திரம் என்பன காணப்பட்டன. மக்களுக்கு பல நலன்புரி சேவைகளும் வழங்கப்பட்டன. இவர்கள் ஆட்சிக்கு வந்து குறுகிய காலத்தில் மக்கள் அவர்களின் சுதந்திரத்தை இழந்துள்ளனர். மீண்டும் கடத்தல், கைது என்பன தோற்றம் பெற்றுள்ளன. சிறையில் வைக்கப்பட்டவர்களும், குற்றச்சாட்டுகளுக்கு பாத்திரமானவர்களும் தற்போது நாட்டின் முக்கிய பொறுப்புகளை வகிக்கின்றனர். (எ-61)

ஐடியலின் இதய அஞ்சலி



எமது அக்கடமியின் கணித ஆசிரியர்
S. சதானந்தன் அவர்களின் அன்புத்
தாயார்
**சதாசிவம் பாலமனோன்மணி**
அவர்கள் நேற்று **(30.11.2019)** சனிக்கிழமை காலமானார். அவர்களின் மறைவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இல.485, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

ஐடியல் சமூகம்

ராசி அதிர்ஷ்டம்

| திகதி | வெற்றி வாரம் | வர்ணம் |
|---|---|---|
| 30.11.2019 | 2693 | இளம் நீலம் |

கடகம்
வெற்றி இலக்கங்கள்: 24 43 49 59
ஞாயிற்றுக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 3, 218, 814/=
01.12.2019 ம் திகதி ஞாயிற்றுக் கிழமை ........ஊதா........ நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

அத கோடிபதி
ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 807
வர்ணம் : மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 2019.11.30
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 69,069,185/-
வெற்றி இலக்கங்கள்: 01 10 32 60
ஆங்கில எழுத்து: M
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47 துரித அழைப்புக்கு: 0114 824 824, 0112 333 778 or 1919
தமிழ் தொலைபேசி: 0114 825 825

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
சீட்டிழுப்பு இல.: 3268 திகதி: 2019.11.30
பச்சை சனிக்கிழமை
சுப்பிரி தனஸ்
விசேட இலக்கம்: 6386
வெற்றி இலக்கங்கள்: 22 28 68 74
ஆங்கில எழுத்து: P
அடுத்த திங்கட்கிழமை ஜக்பொட்
30,373,970/-
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 0114 824 824, 0112 333 778

## Vacancy at "Thinnai Organic" Chunnakam

**Supervisor - Agricultural and Poultry Sector**

Requirements

Knowledge on Poultry (பண்ணை வளர்ப்பு)
Knowledge on Agricultural Sector
Knowledge on Food Processing(உணவு பதனிடல்)
Age between 35 - 50

**விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய மின்னஞ்சல்**
**hr@thethinnai.com**
**No - 86, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.**
**Tel : 021 203 0400**

(N 11840)(04.17)

## மரண அறிவித்தல்



### திருமதி கமலாவதி சதானந்தன்

அரியாலையை பிறப்பிடமாகவும் கச்சேரியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கமலாவதி சதானந்தன் 30.11.2019 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா முத்தாச்சி தம்பதியரின் இளைய மகளும்.காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் ஆச்சிமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற தம்பிப்பிள்ளை சதானந்தனின் (ஓய்வுபெற்ற தபாலதிபர்) அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான தங்கலஷ்மி. லிங்கசாமி. யோகராசா. சேனாதிராஜா. கமலாம்பிகை மற்றும் இ.இரத்தினேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும். வரதன். பகீரதன். வாசுகி. பவானி ஆகியோரின் அன்புத் தாயாரும். ஸ்ரீரஞ்சனி. கேதீஸ்வரி. அருணன். அகிலன் ஆகியோரின் மாமியாரும். றேவந். அபிராம். ஏரகன். ரம்மியன். கீர்த்தன். ஹறிணி. ஆதிரை. ஆயிழை ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2019) திங்கட்கிழமை 71/2. கச்சேரி நல்லூர் வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல் : அ.பவானி (மகள்)**

## மரண அறிவித்தல்



### முருகேசு இராஜகுலேந்திரம்

குளத்தடி வீதி. சங்கானையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு இராஜகுலேந்திரம் 30.11.2019 (சனிக்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு செல்லமுத்து தம்பதியரின் மகனும். காலஞ்சென்றவர்களான தம்பிப்பிள்ளை தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும். மனோகராதேவியின் பாசமிகு கணவரும். காலஞ்சென்றவர்களான மனோன்மணி. செந்தமிழ்செல்வன் மற்றும் சந்திரகுமார். ஜெயனாந்தசிங்கம். தயாநிதி (ஓய்வுபெற்ற சிரேஷ்ட தாதிய உத்தியோகத்தர். ஆதார வைத்தியசாலை. சங்கானை) ஆகியோரின் பாசமிகு சகோதரரும். சிவசுப்பிரமணியம் (லீலா வெதுப்பகம். சங்கானை). கோவிந்தசாமி. தனலக்சுமி. அருந்தவதேவி. பாலசுப்பிரமணியம் (கனடா) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும். றஜிதா (ஆசிரியை. யா/ஸ்தான அ.மி.த.க. பாடசாலை). றஜீவன் (களஞ்சியக் காப்பாளர். அபான்ஸ். கொழும்பு). சரிதா (ஆசிரியை. யா/அராலி வள்ளியம்மை வித்தியாசாலை). அனித்தா (ஆசிரியை. யா/மெய்கண்டான் ம.வி). சுவித்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும். பாலகாசன் (தேர்தல் திணைக்களம். யாழ். கச்சேரி). நக்கீரன் (வீரகேசரி உதவி முகாமையாளர். யாழ்ப்பாணம்). மகிந்தன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும். அக்ஷயன். இதழிகா ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை மதியம் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைக்காக கரச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 184 8730, 077 3657 303**

## வாக்குமூல...

பெண் பணியாளர், உடல் நிலை மோசமாக இருப்பதால், தற்போது வாக்குமூலம் அளிக்கும் நிலையில் இல்லை என்று கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் பெண் பணியாளர் ஒருவர் வாகனத்தில் கடத்திச் செல்லப்பட்டு அச்சுறுத்தப்பட்ட சம்பவம் தொடர்பாக, கொழும்பில் உள்ள சுவிஸ் தூதரகம் நேற்றுமுன்தினம் அறிக்கை வெளியிட்டுள்ளது.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

2019ஆம் ஆண்டு நவம்பர் 25 ஆம் திகதி சுவிஸ் தூதரகத்தின் இலங்கைப் பணியாளர் தொடர்பில் பாரதூரமான சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. தூதரக பணியாளர் பலவந்தமாக கொழும்பு வீதியில் தடுத்து நிறுத்தப்பட்டார், காரில் ஏறுமாறு மிரட்டப்பட்டார்.

அதன் பின்னர் இனந்தெரியாத நபர்களால் கடுமையாக அச்சுறுத்தப்பட்டதுடன் தூதரகம் தொடர்பான தகவல்களை வெளியிடுமாறு மிரட்டப்பட்டார். இந்தச் சம்பவம் தொடர்பில் பல பிழையான தகவல்கள் பரவுகின்றன. இதனால், சுவிஸ் தூதரகம் பின்வரும் தெளிவுபடுத்தல்களை வெளியிட விரும்புகிறது.

சுவிஸ் தூதரகம் உடனடியாக அதிகாரபூர்வமான முறைப்பாட்டை தாக்கல் செய்ததுடன் பொலிஸ் விசாரணைக்கு ஆதரவாகவும், விசாரணையை ஆரம்பிப்பதற்காகவும் முழுமையான ஒத்துழைப்பை வழங்குகின்றது.

மோசமடைந்து வரும் உடல்நிலை காரணமாக பாதிக்கப்பட்டவர் தற்போது வாக்குமூலம் அளிக்கும் நிலையில் இல்லை, என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

(ஒ,5)

## Florance Nightingale School of Nursing
## புளோரன்ஸ் நைற்றிங்கேல்
### தாதியர் பயிற்சிப் பாடசாலை



தாதியர்களுக்கான பயிற்சிகள் அளிக்கப்பட்டு வைத்தியசாலையில் வேலைவாய்ப்புக்கள் பெற்றுத் தரப்படும்.

**2020 ஆம் ஆண்டுக்கான புதிய வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.**

**தகைமைகள்:**
வயது : 17-35 வரை O/L,A/L
உயரம்: 125 CM மேற்பட்டவர்கள்
நிறை : 38kg - 75 kg உட்பட்டவர்கள்

முற்பதிவுகளுக்கு முந்திக் கொள்ளுங்கள்

பாட முடிவில் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

தொடர்புகளுக்கு:-
**0777186438, 0214928916, 0214338919**

முகவரி:-
குஞ்சர் கடையடி. நெல்லியடி.
(சுபாஸ் பேக்கரி மேல்தளம்)

கே.கே.எஸ்.றோட்.
மருதனார்மடம்.
(ஆஞ்சநேயர் கோவில் முன்பாக)

## முக்கிய...

வுக்கு உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அதற்கான உத்தரவை பதில் பொலிஸ்மா அதிபர் நேற்று வெளியிட்டுள்ளார். தேசிய பொலிஸ் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழுவின் அனுமதியும் அதற்காக பெறப்பட்டுள்ளதென கூறப்படுகிறது.

ரத்துபஸ்வல பகுதியில் தண்ணீர் கோரி ஆர்ப்பாட்டம் நடத்தியவர்கள் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டமை, லசந்த விக்கிரமதுங்க கொலை, ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தல், ரிவிர பத்திரிகை ஆசிரியர் கடத்தி தாக்கப்பட்ட விவகாரம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான விசாரணைகளும் இவராலேயே முன்னெடுக்கப்பட்டு வந்தது. ரதுபஸ்வல சம்பவம் தொடர்பாக நான்கு இராணுவ அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ,5)


## 24 கிலோ...

தேக நபர்கள் கைதாகவில்லை. அச்சுவேலி மற்றும் வல்வெட்டித்துறைப் பொலிஸார் இணைந்து இதனை மீட்டுள்ளனர்.

(ஒ,5,26)

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 10.11.2019 ஞாயிற்றுக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் அன்புத் தந்தை

**அமரர்**
**சண்முகநாதன் கருணாகரன்**

அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் நாளை 02.12.2019 திங்கட்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**தாமோதரம்பிள்ளை வீதி,**
**அரசடி, சாவகச்சேரி.**

**குடும்பத்தினர்.**

## விழிநீரில் ஈராறு மாதங்கள்....

மலராக மலர்ந்தது
09 . 01 . 1947



மலராக உதிர்ந்தது
12 . 12 . 2018

திதி:-
பஞ்சமி (01.12.2019)

### அமரர் ரஞ்சிதமலர் சுப்பிரமணியம்

ஓராண்டு சென்றதம்மா ஓயவில்லை எம் துயரம் ஓர் நிமிடம் கூட மறக்கவில்லை நாங்களம்மா
என்ன நினைத்து சென்றாயம்மா எம்மை விட்டு
ஏங்கி ஏங்கி நித்தமுமே தவிக்கின்றோம் நாங்களம்மா
உங்கள் அருமைக் கணவருடனும் ஆசை
மகள் பிறேமாக் குட்டியுடனும் இணைந்து கொண்ட மர்மம் என்னம்மா
உங்கள் ஆத்மா சாந்தி அடைந்திடவே அனுதினமும் வேண்டுகின்றோம்.

103/23, முருகமூர்த்தி வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## பணியாளர் தேவை

யாழ்.நகரில் இருக்கும் எமது புத்தக நிறுவனத்துக்கு நல்ல திறமையுள்ள பணியாளர் தேவை. புதிய சவால்களை எதிர் கொள்ளக் கூடியவராகவும் இருக்க வேண்டும். கணிதத்தில் நல்ல தேர்ச்சி, கம்பியூட்டர் பயன்பாடு மற்றும் ஆங்கில மொழிப் பரீட்சயம் இருக்க வேண்டும். நல்ல புத்தக வாசிப்பும், புத்தகங்கள் குறித்து விருப்பமுள்ளவராகவும் இருப்பது மேலதிக தகுதியாகும். தகுதிக்கும் திறமைக்கும் ஏற்றபடி ஊதியம் அமையும்.

**076 762 2100/ 077 222 2616**

## தொழில்சார் கற்கைகள் நிறுவனம் திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

தொலை தொடர்கல்வி நிலையம்
பட்ட, பட்ட மேற்படிப்பு கற்கைகளுக்கான
புதிய அனுமதிக்கு விண்ணப்பம் கோரல் - 2019

| பட்டக்கற்கை நெறிகள் | (Top up, 03 வருடங்கள்) |
|---|---|
| B.A in English | B.Ed in Education |
| B.A in History | B.Sc in Computer Science |
| B.A in Political Science | B.Sc in ICT |
| B.B.A in Management (Online) | B.Sc in Nursing |
| | BSMS |
| B.Sc in MLT/ MLS | B.Sc in Psychology |

**பட்ட மேற்படிப்பு கற்கை நெறிகள்**

MA
MSc
MBA
M.Ed

UGC Approved

**முது தத்துவமாணி கற்கை நெறிகள்**

M.Phill, Ph.D *(நிபந்தனைக்குட்பட்டது)*

**குறிப்பு:-**
1. கற்கைகள் யாவும் பல்கலை. மானிய ஆணைக்குழுவின் அங்கீகார முடையது
2.க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளை எதிர்பார்க்கும் மாண வர்கள். **HND, NVQ** மாணவர்கள் உத்தியோகத்தர்கள் விண்ணப்பிக்க முடியும்.
3. ஆய்வுச் சுருக்கம். ஆய்வுக்கட்டுரை . ஆய்வுத்தாள்கள் கற்கைகளுக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுதிகதி : 15.12.2019**

கற்கைத்துறைகளில் ஆர்வமுடைய விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவம். சுயவிபரம் என்பவற்றுடன் அடையாள அட்டைப்பிரதி. பிறப்புச் சான்றிதழ்பிரதி. புகைப்படம்**(03)**. தகைமை ஆவணங்கள் என்பவற்றினை **15.12.2019** இனுள் அலுவலகத்தில் அல்லது **degreeinfo08@gmail.com** என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**IPS**
கலாநிதி .N.தணிகாசலம்பிள்ளை
முன்னாள் கல்விப்பணிப்பாளர்.
பட்ட, பட்ட மேற்படிப்பு நிகழ்ச்சித்திட்டம்
யாழ் பல்கலைக்கழகத்திற்கு
அண்மையில், திருநெல்வேலி.
TP:- 021 434 0229, 077 602 1794
CS10040(16/17)


## மரண அறிவித்தல்



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 23 | 29 |
| 10 | 11 |
| 1993 | 2019 |

### செல்வி மகேந்திரன் கோபினா

கிளிநொச்சி பரந்தன், குமரபுரத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிட மாகவும் கொண்ட செல்வி மகேந்திரன் கோபினா 29.11.2019 அன்று காலமானார்.

அன்னார் நாகலிங்கம் மகேந்திரன், மகேந்திரன் திலகவதி ஆகியோரின் ஏக புத்திரியும், காலஞ்சென்ற கனகரத்தினம் (கிளாக்கர்) யோகம்மா, காலம்சென்றவர்களான நாகலிங்கம், பவளம் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், மகேந்திரரத்தினம், சிவாயினிதேவி யோகரத்தினம், விக்கினேஸ்வரி, அமிர்தலிங் கம், விஜயலட்சுமி ஆகியோரின் அன்பு மருமகளும், குமுதினி, ரகு நாதன், சுபாசினி, குகனேந்திரன், இராயேஸ்வரி ரவீந்திரன், பவானி ஆகியோரின் பெறாமகளும், வேணுதன், தனுசா, டிலானி, கபிலன், சுகன்யா, விக்ரர், லக்சன், அரிஸ்ரன் ஆகியோரின் உடன்பிறவா சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10:00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோரக்கன்கட்டு. பரந்தன் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் : **குடும்பத்தினர்**

**077 5213022**


## காணவில்லை

சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பட்டதாரிப் பயிலுனர் ஒருவரின் கைப்பை **29.11.2019** வெள்ளிக்கிழமை அன்று சீரணிச்சந்தியிலிருந்து பண்டத்தரிப்பு சந்தி வரையான பகுதியில் தவறவிடப்பட்டுள்ளது. பையிலுள்ள ஆவணங்கள் யாரிடமாவது கிடைத்திருந்தால் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத் தில் ஒப்படைக்குமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

**தொடர்பு:- 076 031 2762**

## உடல் எடை குறைய வேண்டுமா?

◎ எடை கூடுகிறதா?
◎ வயிறு, மார்பு குறைய வேண்டுமா?
◎ உடல் எடை குறைகிறதேயில்லை என்கின்ற கவலையா?

**பால்மா குளிசை** - வயிறு, மார்பு குறைக்கும் கிறீம்
15 நாள்களில் அற்புத மாற்றத்தை உணர்வீர்கள்.

## தலைமுடி நீளமாக வளர வேண்டுமா?

தலைமுடி வளரவேண்டுமா? பேன், பொடுகு தொல்லையா?
➤முடிகொட்டுகிறதா? ➤இளநரையா? ➤தலையிடியா? முடி அடர்த்தி இல்லையா?➤புதிதாக முடி முளைக்க வேண்டுமா?
➤பொன்னாங்காணி? கரிசலாங்காணி, இலாமிச்சை வேர், கருவேப்பிலை, வல்லாரை, நெல்லி சேர்த்துக்காய்ச்சிய எண்ணைய் குளிசை
இந்த எண்ணையைப்பாவித்து பயனடைய

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.
(c.11756)


## மணிவிழா வாழ்த்து



**திருமதி செல்வராணி தர்மலிங்கம்**
(Commerce Trained, BA, PGDE, SLTS I)

Best Wishes

**சேவை விவரம்**

ஆசிரியர்
யா/எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
21.09.1988 - 27.04.1993
ஆசிரியப் பயிற்சி கலாசாலை திருநெல்வேலி
28.04.1993 - 31.12.1994
யா/விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம்
01.01.1995 - 09.02.1997
யா/எழுதுமட்டுவாழ் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை
10.02.1997 - 31.07.2008
யா/மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்
01.08.2008 - 31.12.2012
யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்
01.01.2013 - 30.11.2019

**சேவைக்காலம்**

எமது பாடசாலைச் சேவை 11 வருடங்கள்
மொத்தச் சேவைக்காலம் 31 வருடம்

Best Wishes

**பாடசாலைச் சமூகம்**
**யா/மீசாலை வீரசிங்கம் ஆரம்ப வித்தியாலயம்**
**மீசாலை**

## மரண அறிவித்தல்

### கணேசமூர்த்தி இராணிமலர்



உரும்பிராய் வடக்கைப் பிறப்பிடமா கவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணேசமூர்த்தி இராணிமலர் 29.11.2019 வெள்ளிக்கிழமை இறை பதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை அன்னம்மா தம்பதி யரின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான அப்பாத்துரை கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும், கணேசமூர்த்தியின் அன்பு மனைவியும், கோகுலராஜன் (வெளிக்கள உத்தி யோகத்தர்-ஜெய்ப்பூர் நிறுவனம்), டுனேஸ் ஆகியோரின் பாசமிகு தாயாரும், நிவேதிதாவின் (ஆசிரியை- கோட்டைகட்டியகுளம் ம.வி) மாமியும், காலஞ்சென்றவர்களான தங்கமலர், திலகவதி, விக்கினேஸ்வரி, திருநாவுக்கரசு, மற்றும் விக்கினேஸ்வரன் நடேசலிங்கம், மகேந்திரவர்ணன், காலஞ்சென்ற சற்குணவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற குருநாதர் மற்றும் ரவீந்திரன், காலஞ்சென்ற உமாதேவி மற்றும் இராச நாயகி, மங்கையற்கரசி, பரமேஸ்வரி ஆகியோரின் மைத்துனி யும், ஜெயந்தன், சாளினி ஆகியோரின் மாமியும், ஹரிணி திவானா, மித்தனா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடை பெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக எருளன் இந்து மயானத் துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

**உரும்பிராய் வடக்கு,**
**உரும்பிராய்.**

தகவல் :
**க.கோகுலராஜன் (மகன்)**

**077 830 3722**

# அமெரிக்காவுக்கு செல்கிறார் பசில்

சிறிலங்கா பொதுமக்கள் முன்னணியின் நிறுவனரும் முன்னாள் அமைச்சருமான பசில் ராஜபக்ச மீண்டும் அமெரிக்க செல்ல தயாராகி வருகிறார். எதிர்வரும் 5ஆம் திகதி அமெரிக்கா செல்லும் பசில் ராஜ பக்ச அங்கு மூன்று மாதம் தங்கவுள்ளார்.

அரச தலைவர் தேர்தலில் கோத்தபாய வெற்றி பெற்று அவரது தலைமையின் கீழ் தற்போது புதிய அரசு ஆட்சியமைத் துள்ளது. எதிர்வரும் மார்ச் முதலாம் திகதி பொதுத் தேர்தலுக்கு செல்ல வேண்டும் என்ற பின்னணியில் பசில் ராஜபக்ச மூன்று மாதங்கள் அமெரிக்காவில் தங் கியிருக்க உள்ளார்.

தேர்தல் நடக்க உள்ள பின்னணியில் பசில் மூன்று மாத காலம் அமெரிக்கா வில் தங்கியிருக்கப் போவது பொதுமக் கள் முன்னணியில் பலருக்கு பிரச்சினை யாக மாறியுள்ளதாக கூறப்படுகிறது.

பசில் ராஜபக்ச வெளிநாடு செல்லும் முன் னர் அவரை அரச தலைவரின் மூத்த ஆலோசகராக நியமித்து அவருக்கான அலுவலகத்தை திறக்குமாறு மகிந்த ராஜ பக்ச ஆலோசனை வழங்கியிருந்தார். எனினும் பசில் ராஜபக்ச தற்போது மிக வும் அமைதியாக இருந்து வருகிறார். அரச தலைவர் செயலகத்தில் நடை பெற்ற அமைச்சர்கள் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வில் கூட பசில் ராஜபக்ச பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. (ஒ,5)

## மழை...

வடக்கு, வடமேல், மத்திய, சப்ரகமுவ, மேல், ஊவா, மாகாணங்களிலும் திரு கோணமலை மற்றும் அனுராதபுரம் மாவட்டங்களின் சில இடங்களில், குறிப் பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல் லைத்தீவு, மன்னார், புத்தளம், குருநா கல், இரத்தினபுரி, கேகாலை, கண்டி, நுவரெலியா, மாத்தளை, பதுளை, மொணராகலை, அநுராதபுரம் மாவட்டங் களில் 100 தொடக்கம் 150 மி.மீ அள வான பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப் படுகின்றது. (ஒ,5,21)


## விற்பனைக்கு

NISSAN B310 Car(Petrol 390/=), WOLKSWAGEN Car (Diesel 540/=), Auto (320/=) Scooty Pept மோட்டார் சைக்கிள் ( 60/=). வீட்டுப் பாவனை பொருட்கள்
தொடர்பு 181, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 077 174 6101



## விற்பனைக்கு

NISSAN B310 Car(Petrol 390/=), WOLKSWAGEN Car (Diesel 540/=), Auto (320/=) Scooty Pept மோட்டார் சைக்கிள் ( 60/=). வீட்டுப் பாவனை பொருட்கள்
தொடர்பு 181, சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு:- 077 174 6101



## வீடு விற்பனைக்கு

மனோகரா சந்திக்கு மிக அருகாமையில் மாடி வீட்டுடன் 2 1/2 பரப்பு காணி விற்பனைக்கு.

**தொடர்பு:- 077 394 6826**

## காணி விற்பனைக்கு

பொற்பதி வீதி, கொக்குவில் கிழக்கு, உடையார் ஒழுங்கையில் இரண்டு பரப்பு காணி விற்பனைக்கு

**தொடர்புகளுக்கு:- 077 300 2075**

## வீடு வாடகைக்கு தேவை

கொக்குவில், இணுவில், மருதனார்மடம், உரும்பிராய் ஆகிய பிரதேசத்தில் இருவர் கொண்ட குடும்பத்திற்கு வீடு வாடகைக்கு தேவையாக உள்ளது.

**தொடர்புகளுக்கு:- 077 797 3802**

## பணிப்பெண் தேவை

வவுனியாவில் இரு பிள்ளைகளை பராமரிப்பதற்கு ஒழுக்கமுள்ள வீட்டுப் பணிப்பெண் தேவை.

சம்பளம் **25000/-** ரூபாய் வழங்கப்படும்

**தொடர்புகளுக்கு:- 077 725 2091**




**வீடு வாடகைக்குத் தேவை**

சிறிய குடும்பத்துக்குப் பலாலி வீதியை அண்டிய பிரதேசத்தில் வீடு வாடகைக்குத் தேவை.

**077 012 3075**

**பணிப்பெண் தேவை**

யாழ். நகரை அண்டிய பகுதியில் தங்கி நின்று கடமைபுரிய பணிபெண் தேவை.

**077 033 2994**

**காணி விற்பனைக்கு**

15 பரப்பு தோட்டக்காணி சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கும், மின்சார உற்பத்தி நிலையத்திற்கும் மிக அருகாமையில் புத்தூர் பிரதான வீதியில் அமைந்துள்ளது. தரகர் தேவையில்லை.

**077 217 6534**

**பணிப்பெண் தேவை**

வெள்ளவத்தையில் குழந்தையைப் பராமரிக்க வீட்டுப்பணிப்பெண் தேவை. மாத சம்பளம் 30,000/=

(CS 29587)(4.17)

**077 360 8771**

**பணிப்பெண் தேவை**

உரும்பிராயில் வசிக்கும் சிறிய குடும்பத்திற்கு நிரந்தரமாக தங்கியிருந்து பணிபுரிவதற்கு பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

**077 609 5604**

**மணமகள் தேவை**

யாழ் கத்தோலிக்க உயர்குல குடும்பத்தைச் சேர்ந்த 34 வயதுடைய கொழும்பில் வசிக்கும் தனியார் துறையில் போதிய சம்பளம் பெறும் 5'10" உயரமுடைய மணமகனுக்கு பொருத்தமான மணமகள் தேவை. (CS 29612)(4.17)

**077 310 3205**

**தேவை**

வெளிநாட்டில் வேலைவாய்ப்பு மலேசியாவில் கப்பல் துறைமுகத்துக்குப் பணிபுரிய உதவியாள்கள் (கார்கோ) தேவை.
மாதாந்தம் ஒரு லட்சத்துக்கும் அதிகமான சம்பளம்.
ஆண்கள் (18 - 40 வரை) (ACO/486)(11.17)

**077 571 2577/ 076 289 6258**

யாழில் முதன் முறையாக UTE இடமிருந்து

# Cat® Service Clinic 2019

டிசம்பர் 2 முதல் 4 ஆம் திகதி வரை அச்சுவேலி பிரதேசத்திலும்
டிசம்பர் 5 முதல் 6 ஆம் திகதி வரை யாழ் நகரிலும்






அனுபவமும் நிபுணத்துவமும் உடைய தொழில்நுட்பவியலாளர்களினால் உங்கள் Cat® இயந்திரங்கள் பரிசோதிக்கப்படும்




பதிவுகளுக்கு முந்துங்கள்
076 3582389 செந்துாரன்

UTE CAT
www.ute.lk

யுனைட்டட் டிரெக்டர் அன்ட் இக்குவிப்மன்ட் (பிரைவட்) லிமிட்டட்
683, நீர்கொழும்பு வீதி, மாபோல, வத்தளை

**Cat® சேர்விஸ் முகாம் 2019 - வட மாகாணம்**
**Cat® Service Clinic 2019 – Northern Province**

## உங்கள் எதிர்காலத்தை கட்டியெழுப்புவோம்!

இலங்கையின் முன்னணி பொறியியல் தீர்வுகள் வழங்குனர், UTE யுனைடட் ட்ரக்டர் என்ட் இகுயூப்மன்ட் (பிரைவட்) லிமிடட், கெட்டபில்லர் கட்டுமான இயந்திர சாதனங்களை இலங்கை பொறியியல் துறையில் அறிமுகம் செய்ததில் முன்னோடியான நிறுவனமாகும். இந் நிறுவனம் சுமார் 72 ஆண்டு கால வெற்றிகரமான பயணத்தை முன்னெடுத்து வருகின்றது.




சிறந்த தரத்தையுடைய உற்பத்திகளை வழங்குவதில் அசைக்க முடியா அர்ப்பணிப்புடனும், கரிசனையுடனும் சேவைகளை வழங்கி வரும் UTE எதிர்கால பிரதான சந்தையில் சிக்கல் மிகுந்த பல்வகைமையான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்காக தனது உலகளாவிய ரீதியில் முன்னணி பண்டக்குறிகளை (brand portfolio) தொடர்ந்து விரிவுபடுத்துகின்றது.

கெட்டபில்லரின் அங்கீகரிக்கப்பட்ட இலங்கை விநியோகஸ்தரான UTE நிறுவனம், CAT இயந்திரங்களுக்கான அதி சிறந்த தரமுடைய பழுதுபார்த்தல் மற்றும் பராமரிப்புச் சேவைகளை வழங்கி வருகின்றது. அனைத்து சேவை மற்றும் பெரிய பழுதுபார்ப்புகளும் UTE யின் CAT 4நட்சத்திர பட்டறையில் (CAT 4-star workshop) செய்யப்படுகின்றது. இது பிராந்தியத்தில் மிகச் சிறந்த பட்டறைகளில் ஒன்றாகும். இந்த பட்டறை மேம்பட்ட கருவிகள், பணிநிலையங்கள், மாசு கட்டுப்பாடு (contamination control) மற்றும் இன்ஜெக்டர் பம்ப் அறைகள் (injector pump rooms), உதிரிபாகங்களுடன் 100 க்கும் மேற்பட்ட CAT பயிற்சி பெற்ற தொழில்நுட்ப வல்லுநர்களைக் கொண்டு இயங்குகின்றது.

**Cat® சேர்விஸ் முகாம் 2019 - வட மாகாணம்**

வட மாகாணத்தில் தனிமைப்படுத்தப்பட்ட CAT இயந்திரங்களுக்கு தொழில்நுட்ப ஆலோசனை வழங்குதல் மற்றும் UTE சேவையின் ஆற்றல்கள் தொடர்பில் தெளிவூட்டும் நோக்கில் Cat® சேர்விஸ் முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Cat® சேர்விஸ் முகாம், 2019 டிசம்பர் 2ஆம் திகதி முதல் டிசம்பர் 4ஆம் திகதி வரையில் அச்சுவேலியிலும் டிசம்பர் 5ஆம் திகதி முதல் டிசம்பர் 6ஆம் திகதி வரையில் யாழ் நகரிலும் நடைபெறவுள்ளது.

உங்களது இயந்திரங்கள் அனுபவமும் நிபுணத்துவமும் உடைய தொழில்நுட்பவியலாளர்களினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும்.

**சேவை முகாமில் என்ன நடைபெறும் ?**

சேவை முகாமின் போது அனுபவம் வாய்ந்த தொழில்நுட்ப வல்லுநர்களால் TA-2 (தொழில்நுட்ப பகுப்பாய்வு நிலை 2) ஆய்வுகள் செய்யப்படும். இயந்திரங்களின் வாழ்க்கையை அதிகரிப்பதற்கும், உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும், திட்டமிடப்படாத வேலையில்லா நேரத்தைத் தவிர்ப்பதற்கும் இந்த ஆய்வுகள் செய்யப்படும்.

TA-2 பரிசோதனையானது (TA-2 Inspection) இயந்திரத்தின் அமைப்புகள் மற்றும் கூறுகள் தொடர்பில் மிகவும் விரிவான பரிசோதனை ஆய்வு நடத்தப்படுவதனை குறிக்கின்றது. தொழில்நுட்பவியலாளர்கள் பின்வரும் அனைத்து விடயங்களையும் மேற்கொள்வர்:

- முழுமையான காட்சி மேற்பார்வை (full visual inspection)
- விரிவான அளவுரு கண்காணிப்பு (detailed parameters inspection)
- பழுதுபார்த்தல் மற்றும் பரிந்துரைகள்

பரிந்துரைக்கப்படும் பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்கு விசேட விலைக்கழிவுகள் வழங்கப்படும். Cat அசல் உதிரிப் பாகங்கள் (Cat® Genuine Spare Parts) மட்டுமே பழுதுபார்தல்கள் மற்றும் பதிலீடுகளுக்கு பயன்படுத்தப்படும்.

**விரைந்து பதிவு செய்து கொள்ளுங்கள்.**
**தொடர்புகளுக்கு - செந்துாரன் 0763582389**

HONDA மீண்டும் மானிப்பாயில் ரஞ்சிற் மோட்டோர்ஸ்

யாழ் மக்களுக்காக
ரஞ்சிற் மோட்டோர்ஸ்
HONDA இணைந்து
வழங்கும் பண்டிகைக்கால
மாபெரும் சலுகைகள்

(ரஞ்சிற் றிப்பியறிங் & சேவிஸ் சென்டர்)

01.12.2019 – 15.01.2020 வரை எம்மிடம் மோட்டார் சைக்கிளினை கொள்வனவு செய்து குலுக்கல் முறையில் சோபா செற்றினை பெற்றிடும் வாய்ப்பினை பெற்றிடுங்கள்

01.12.2012 முதல் கொண்டாவுடன் சேவை முகவராக இணைகின்றார்கள்
ரஞ்சிற் மோட்டார்ஸ் நிறுவனத்தினர்

எமது சேவைகள்
- HONDA மோட்டார் சைக்கிள் விற்பனை
- HONDA அசல் உதிரிப்பாக விற்பனை
- HONDA சேவிஸ் & மெக்கானிக்

[மோட்டார் சைக்கிள் விற்பனைக்குப் பிந்திய சிறப்பு சேவைகள், இலவச சேவைகள் மற்றும் உத்தரவாத சேவைகள்]



பண்டிகைக் கால சலுகைகள்

விலைக்கழிவு
தெரிவு செய்யப்பட்ட மோட்டார் சைக்கிள்களுக்கு 15000/- வரை

காசு மூலமான சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- காப்புறுதி (3ம் நபர் காப்புறுதி)
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்
- சிறப்பு பரிசில்கள்

லீசிங் மூலம் விசேட சலுகைகள்
- SLS தலைக்கவசம்
- ஜக்கெற்
- காப்புறுதி
- பதிவுக் கட்டணம்
- இலவச சேவைகள் 05
- இரண்டு வருட உத்தரவாதம்

சிறப்பு சலுகைகள்
எம்மிடம் பழைய மோட்டார் சைக்கிளைக் கொடுத்து புதிய மோட்டார் சைக்கிளினைப் பெற்றிடும் வசதி
(நிபந்தனைக்குட்பட்டது)

**Ranjit Motors**
(RRSC Motors Engineers)

**Sales & Parts**
No- 311/A, Jaffna Road, Manipay.
இல- 311/A. யாழ் வீதி. மானிப்பாய்.
021 492 7627, 021 225 5228

**Service & Parts**
No- 14 Suthumalai Road, Manipay
இல- 14 சுதுமலை வீதி. மானிப்பாய்.
021 492 7337, 021 222 3111

Mobile: 077 310 7549, 076 833 9898
E.Mail: rrscmanipay@gmail.com
F.Book: Honda Ranjit Motors

## மரண அறிவித்தல்



பிறப்பு
06 . 04 . 1942

இறப்பு
28 . 11 . 2019

### திருமதி நகுலாம்பிகை ஜெகதீசன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும், கிறீன் மெமோறியல் வைத்தியசாலை வீதி, மானிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட நகுலாம்பிகை ஜெகதீசன் 28.11.2019 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஜெகதீசன் (முன்னாள் தலைவர்- அளவெட்டி-மல்லாகம் ப.நோ.கூ.சங்கம், அரசாங்க கட்டட ஒப்பந்தகாரர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சேனாதிராசா, செல்லம்மா ஆகியோரின் அன்பு மகளும், கணபதிப்பிள்ளை, அன்னலட்சுமி ஆகியோரின் மருமகளும், செல்வராசா, காலஞ்சென்ற புஸ்பராணி மற்றும் மங்களேஸ்வரி, பத்மினிதேவி ஆகியோரின் சகோதரியும், கலைமதி (லண்டன்), கலைச்செல்வன் (பொறியியலாளர்- தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கொழும்பு), கலைவாணி (இலண்டன்), கலைஅரசி (அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச வைத்தியசாலை மானிப்பாய், கோண்டாவில்), கலைஜெனனி (கனடா), ஆகியோரின் பாசமிகு தாயாரும், இந்திரகுமார் (இலண்டன்), தமிழினி (அபிவிருத்தி உத்தியோகத்தர், மீள்குடியேற்ற அமைச்சு- கொழும்பு), லிங்கதாஸ் (இலண்டன்), செல்வகுமார் (ஆசிரியர், யா/மானிப்பாய் விவேகானந்த வித்தியாசாலை), சத்தியரதன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், அவினாஸ், உத்ரா, மித்ரா, சாயினி, ஜிதர்ச்ன், அர்ச்சயா, சாயீசா, சாயீசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஆஸ்பத்திரி வீதி,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்.

021 225 6046

## மரண அறிவித்தல்



பிறப்பு
19 . 01 . 1937

இறப்பு
30 . 11 . 2019

### சின்னத்தம்பி சரவணமுத்து

அளவெட்டி வடக்கு புதுவளவைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி சரவணமுத்து நேற்று (30.11.2019) சனிக்கிழமை கால்மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி இளையபிள்ளை தம்பதியரின் புதல்வரும் காலஞ்சென்றவர்களான செல்லப்பா செல்லமுத்து தம்பதியரின் மருமகனும், அற்புதம்மாவின் அன்புக் கணவரும், குகதாஸ் (Saravanas Welding Works), பகீரதன் (Saravanas Timber Works), சிறிதரன் (கொழும்பு), மற்றும் மயூரதன் (நன்னடத்தை உத்தியோகத்தர்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் உதயசித்திரா, சிவநிதி (யா/ மகாஜனாக் கல்லூரி), ரேணுகா மற்றும் அனுஷா (அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் மாமனாரும், துவாரகன், சரண்ராஜ், திவ்யா, யஸ்வினி, டிரோஷன், உமையாள் மற்றும் சங்கீர்த் ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான நல்லையா கணபதிப்பிள்ளை மற்றும் கந்தையா ஆகியோரின் பாசமிகு சகோதரனும், பரிமளம், இராசம்மா, நல்லம்மா மற்றும், காலஞ்சென்றவர்களான செல்லம்மா, பாலசுந்தரம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (02.12.2019) திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அளவெட்டி மத்தி,
அளவெட்டி.

தகவல்: குடும்பத்தினர்
சிறிதரன் (077 490 9080)
குகதாஸ் (077 337 6870)
சேகர் (077 421 5101)
மயூரதன் (076 276 8880)

## மரண அறிவித்தல்



பிறப்பு
13 . 02 . 1964

இறப்பு
29 . 11 . 2019

### அல்பிரட் அனிற்றம்மா (சியாம்)

யாழ். 130/01, சொலமன் வீதியை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட அல்பிரட் அனிற்றம்மா (சியாம்) 29.11.2019 வெள்ளிக்கிழமை அன்று காலமாகிவிட்டார்.

அன்னார் போதனா வைத்தியசாலையில் பணிபுரியும் அல்பிரட்டின் மனைவியாரும், டெனிஸின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (01.12.2019) அவரது இல்லத்தில் நடைபெற்று, பி.ப. 2.00 மணியளவில் பூதவுடல் வசந்தபுரம் சீயோன் தேவாலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அல்பிரட் (கணவர்)
டெனிஸ் (மகன்)

077 9568 116



# நல்லிணக்கமும் உணர்ச்சி வசப்பட்ட தமிழர் அரசியலும்!

அருண்பாக்யா

தமிழ்த் தலைவர்களின் அரசியல் அணுகுமுறை உணர்ச்சி வசப்பட்டதே தவிர புத்திபூர்வமானது அல்ல. இந்த உணர்ச்சி வசப்பட்ட அரசியல் அணுகுமுறையில் இருந்து புத்திபூர்வமான அரசியலுக்கு மாறுவதற்கு நீண்ட காலம் எடுக்கும். அதுவும் தற்போதுள்ள தலைவர்களால் முடியாது. அதற்குள் சிங்களத் தலைவர்களின் சிந்தனையும் செயற்பாடும் வெகுதூரம் சென்றிருக்கும். ஏற்கனவே இலங்கையில் 7 மாகாணங்களுடன் ஒப்பிடும்போது 30 வருடங்களுக்கு மேல் தமிழர் அதிகம் வாழும் வடக்கு - கிழக்கு மாகாணங்கள் பின்தள்ளப்பட்டுள்ளன. தமிழ் அரசியல் தலைவர்களின் செயற்றிறன் அற்ற தன்மையே இதற்குக் காரணமாகியது. மக்களின் பிரச்சினைகள் குவிந்து கிடக்கும்போதே 2013ஆம் ஆண்டு தொடக்கம் 2018ஆம் ஆண்டு வரை வடமாகாண சபையின் ஒவ்வொரு அமர்விலும் ஏதோவொரு தலைப்புச் செய்திக்காக சண்டை பிடித்தார்கள். தமிழருக்குச் சுயமாக நிர்வாகம் நடத்தத் தெரியாது என்பதை நிரூபித்தார்கள். அதைச் சிங்களவரோ முஸ்லிம்களோ குழப்பவில்லை அல்லது எதிர்க்கட்சியோ குழப்பவில்லை. ஆளும் தகுதிபெற்ற கூட்டமைப்பே குழப்பியது.

எதிர்க்கட்சிகள் விலக்குப்பிடித்த விநோத அரசியலும் அங்குதான் நடந்தது. இவ்வாறான போக்கில் நல்லிணக்கத்தை தமிழ்த் தலைவர்களால் இலகுவாக எட்டிவிட முடியாது. முரண்படுவதே தமிழரின் வழிமுறை என்றாகிவிட்டது.

**தேர்தல் சொல்லும் பாடம்**

இறுதியாக நடந்த அரச தலைவர் தேர்தலில் தமிழரின் கோரிக்கைகள் மிகவும் குறைந்த தரத்திலேயே இருந்தன. வெள்ளைவான் வரும், இராணுவ ஆட்சி வரப்போகிறது, மாவீரர் தினம் கொண்டாட முடியாது, காணிகள் விடுவிக்கப்படாது, குருதிக் கறை படிந்தவர்கள் ஆட்சிக்கு வரவிருக்கிறார்கள்?, தமிழரின் வாக்குகள்தான் அடுத்த அரச தலைவரைத் தீர்மானிக்கப் போகின்றன என்று அளந்த கதைகள் எல்லாம் புஷ்வாணமாக மாறின. அதற்குக் கோத்தபாய ராஜபக்சவின் அணுகுமுறையே வித்திட்டது.

தமிழரும் முஸ்லிம்களும் தங்கள்தான் அரச தலைவரைத் தீர்மானிப்பவர்கள் என்று மார்தட்டியதும் தமிழ் அரசியல் ஆய்வாளர்கள் பலரும் 50 வீதத் துக்குக் குறைவான வாக்குகளை முதன்மைப் போட்டியாளர்கள் பெறுவார்கள் என்றும் இரண்டாம் விருப்பு வாக்கு எண்ணும் நிலைக்குச் செல்ல வேண்டியிருப்பதால் சஜித் அமோக வெற்றி பெறுவார் என்றும் ஆரூடம் கூறச் சிங்கள ஆதரவாளர்கள் கோத்தபாய 55 வீத வாக்குளால் வெற்றியீட்டுவார் என்று திடமாகக் கூறினார்கள். தமிழ் ஆய்வாளர்கள் இதைச் சரியாகப் புரிந்து கொள்ள முடியாமைக்குச் சிங்கள மொழி தெரியாமையே முதன்மைக் காரணமாகும்.

கோத்தபாய அரசியலுக்கு இறங்குவதற்கு முன்னரே துறைசார்ந்த வல்லுநர்களை இணைத்து ஒரு சிந்தனைக் குழாத்தை உருவாக்கியிருந்தார். 'வியத்மக' என்ற அமைப்பு என்பது சிறந்த எதிர்காலத்துக்கான நிபுணர்கள் அமைப்பு என்று அர்த்தப்படுகிறது.

இந்த அமைப்பு தொடர்பில் தமிழ்த் தலைவர்கள் எதையும் அறிந்ததாகத் தெரியவில்லை. அதன் கன காத்திரத்தைப் புரிந்து கொள்ளுமளவுக்கு அறிவுப்பலம் தமிழ்த் தலைவர்களிடம் இல்லை. அதற்கான சிந்தனைக் குழாம் ஒன்றைக்கூட அவர்கள் வைத்திருக்கவில்லை. 'ஒக்ஸ்பேர்ட்' பல்கலைக் கழகத்தின் மிகச் சிறந்த வெளியீடான லலித் அத்துலத் முதலியை அச்சுலக்கை என நக்கலடித்தார்களே தவிர லலித்துக்கு இணையாகக் கற்றறிந்த தமிழர் ஒருவரை அரசியலில் இறக்க முடியவில்லை.

தமிழர்களின் வர்க்குகள்தான் அரச தலைவரைத் தீர்மானிக்கும் என்று தமிழ்த் தலைவர்கள் நம்பியிருக்க வியத்மக அமைப்பு வடக்கு - கிழக்கு மாகாணங்களில் தமது வாக்குப்பலத்தைப் பூச்சிய நிலையில் வைத்துக் கொண்டு தமது வெற்றிக்கான வாய்ப்புகளை ஏனைய 7 மாகாணங்களிலும் சிங்களவர் மத்தியில் தேடினார்கள். யாழ்ப்பாணத்தில் பூச்சிய நிலை வாக்குகளை எதிர்பார்த்திருக்க, அளிக்கப்பட்ட வாக்குகளில் 6 வீதமானவை அவர்களுக்குக் கிடைத்தமை மிகப் பெரிய வெற்றி என்று சிங்கள ஆய்வாளர் ஒருவர் குறிப்பிடுகிறார். தமிழரின் வாக்குகள் இல்லாமலும் வெல்ல முடியும் என்று தேர்தலில் திட்டமிட்டு நிரூபித்திருந்தார்கள்.



**மாற்றப்படுகிறது 'கோத்தா' பிம்பம்**

தேர்தல் முடிந்து 10 நாள்களில் மாவீரர் தின நிகழ்வு நடந்தது அது தொடர்பில் கோத்தபாய அரசு மிகக் கடுமையாக நடந்துகொள்ளும் என்று தமிழ்த் தலைவர்களால் எதிர்பார்க்கப்பட்டது. அடக்குமுறையாளர்கள் வென்றால் மாவீரர் தினம் நடப்பது சந்தேகம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சிவமோகன் தேர்தலுக்கு முன்னர் கூறினார். மாவீரர் நினைவேந்தலைக் குழப்புவதற்குக் கோத்தபாயவால் குழு நியமிப்பு என்று கரைச்சிப் பிரதேச சபை உறுப்பினர் ஜீவராஜா குறிப்பிட்டார். ஆனால் இவ்வாறான கருத்துக்களை மாவீரர்களின் குடும்பங்கள் கூறியதாக இல்லை.

மாவீரர்கள் ஆயுதம் தாங்கி இலங்கையின் முப்படைகளுடனும் போரிட்ட மடிந்தவர்கள் என்பதும் தற்போது அரசியல் தலைவர்களாக இருப்பவர்களின் பிள்ளைகள் எவரும் மாவீரர்கள் அல்ல என்பதும் கோத்தபாயவுக்கு நன்கு தெரியும். தமது பிள்ளைகளை இழந்த குடும்பங்கள் தமது பிள்ளைகளை நினைவுகூரவே செய்வர் என்பதும் அவ்றறைத் தடுப்பதன்மூலம் போராட்டத்தில் தொடர்புபடாதவர்கள் அரசியல் செய்வதற்கு வாய்ப்பளிக்கும் என்பதும் ஏற்கனவே தமது பிள்ளைகளை இழந்து நிற்கும் குடும்பங்கள் இனிமேல் போராடுவதற்குத் தயாராக இருக்க மாட்டார்கள் என்பதும் கோத்தாவின் நிர்வாகத்துக்கு நன்கு தெரிந்திருததால், தமிழ் அரசியல்வாதிகளை ஓரம்கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. இதில் மாவீரர் குடும்பங்கள் மட்டும் திருப்தி அடைந்தனர். தமிழ்த் தலைவர்கள் கூறியதுபோல கோத்தபாய இல்லை என்பதும் மெய்ப்பிதம் செய்யப்படுகிறது.

தமிழர்களின் பிரதிநிதிகள் என்று கூட்டமைப்பினர் கூறிவரும் நிலையில் நல்லிணக்கம் தொடர்பான விடயங்களை ஏனைய தமிழ்க் கட்சிகளை இணைத்துச் செயற்படும் நிலையில் தமிழ்த் தலைவர்கள் இல்லை. எதிர்வரும் மார்ச் மாதம் நாடளுமன்றம் கலைக்கப் படவுள்ளதால் மே மாதம் நடக்கவுள்ள பொதுத்தேர்தலின் பின்பே இலங்கை அரசு நல்லிணக்கம் பற்றிச் சிந்திப்பதற்கு வாய்ப்புண்டு. இதனால் தமிழரின் தற்போதுள்ள தலைமைத்துவத்தில் பெரியளவில் மாற்றங்கள் ஏற்பட வாய்ப்புண்டு. நடந்து முடிந்த அரச தலைவர் தேர்தல் முடிவை வைத்து எவருக்குச் செல்வாக்கு உண்டு என்பதைத் தீர்மானித்துவிட முடியாது. இனி வரும் பொதுத் தேர்தல் தமிழரின் உச்சமான ஒற்றுமையின்மையின் தளத்திலேயே இடம்பெறவிருக்கிறது.

நிலமை இவ்வாறிருக்க கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் கடந்த 24ஆம் திகதி விடுத்த செய்தியில் அடுத்த பொதுத்தேர்தல் தொடர்பான அரசியல் கூட்டணியை உருவாக்குவதற்கான சிறீலங்கா பொது மக்கள் முன்னணிணியால் அழைப்பு விடுக்கப்பட்டால் இந்த விவகாரம் குறித்துப் பேச்சு நடத்தத் தயாராக உள்ளோம் என்று குறிப்பிட்டிருப்பதும் மாவீரர் நாளுக்கு மறுநாள் மாவை சேனாதிராசா அழிந்துபோன தேசத்தையும் சிதைந்து போன குடும்பங்களையும் மீளக்கட்டியெழுப்ப அரசுடன் பேசத் தயார் என்று குறிப்பிடுவதும் தமிழ் மக்கள் விடயத்தில் போர் முடிந்த பத்து ஆண்டுகளில் தாம் எதையும் செய்யவில்லை இனிமேல்தான் ஆரம்பிக்கவிருக்கிறோம் என்பதையே இது காட்டுகிறது.

**இந்தியாவால் என்ன இயலும்**

இலங்கைத் தமிழர் விவகாரத்தில் நல்லிணக்கத்தைவிட வேறு எதையும் இந்தியா முன்வைக்கப்போவதில்லை என்பது கோத்தபாயவின் வெற்றிச் செய்தியின் பின்னர் இந்தியாவின் நகர்வுகளில் தெளிவாகத் தெரிகிறது. தமிழர்கள் நல்லிணக்க விடயத்தில் ஒருமித்த செயற்பாட்டில் இல்லை. ஈழத் தமிழர் மத்தியில் உள்ள அதிகரித்த கட்சிகளும் தலைவர்கள் மத்தியில் காணப்படுகின்ற முரண்பாடுகளும் வை.கோ., சீமான் போன்ற தமிழ் நாட்டில் அரசியல் செல்வாக்கை இழந்த தலைவர்களின் செயற்பாடுகளும் உலக அரங்கில் தமிழர்கள் குழப்பக்காரர்கள் என்ற பிம்பத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இவற்றையெல்லாம் கடந்து தமக்குள் ஒருமித்த நிலைப்பாட்டை எடுக்கக் கூடிய தலைமைத்துவ ஆளுமை எந்தத் தமிழ்த் தலைவருக்கும் இல்லை. அரச தலைவர் கோத்தபாய டில்லி வானூர்தி நிலையத்தில் இறங்கியபேது வைகோ தலைமையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்புக் கொடியைக்காட்டியதுடன் 'போர்க்குற்றவாளியே கோத்தபாய ராஜபக்ச. அவர் பன்னாட்டு நீரிமன்றில் ஏற்றப்பட வேண்டும்' என்று கோசமிட்டனர். 2009ஆம் ஆண்டு மே மாதத்தில் இறுதிப்போர் நடந்தது. ஆனால் 1987-1990 காலப்பகுதியில் வடக்குக் கிழக்கில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவமும் அப்பாவித் தமிழ் மக்கள் மீது படுகொலைகளைச் செய்தது.

மருத்துவமைனைகள், கோவில்கள், சந்தைகள் எனச் சகட்டுமேனிக்கு மக்கள் கொல்லப்பட்டனர். அவற்றை நேரில் காணும் வாய்ப்பு அப்போது வைகோவுக்கும் கிடைத்தது. இதை ஒரு கணம் வைகோ நினைத்துப் பார்த்து ஓர் இந்தியன் என்ற வகையில் தனது மனச்சாட்சியிடம் கேள்வி கேட்டிருந்தால் கோத்தபாயவை எதிர்ப்பதற்குப் புதுடெல்லிக்குப் போக வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கர்து.

கோத்தபாயவின் தமிழ் மக்கள் மீதான அணுகுமுறை அறிஞர் வேணாட்சாவை ஒத்ததாகவே இருக்கப்போகிறது. ஒரு தடவை வயல் வரம்பில் வேணாட்சா போய்க்கொண்டிருந்த போது அதே வரம்பில் எதிரில் இருந்து இன்னொருவர் வந்திருக்கிறார் இருவரில் ஒருவர் சேற்றில் இறங்கினால் தான் ஒருவர் பயணிக்க முடியும். எதிரில் வந்தவர் வேணாட்சாவைப் பார்த்து முட்டாள்களுக்கு வழிவிட்டுக்கொடுத்து எனக்குப் பழக்கமில்லை என்று கூறியிருக்கிறார்.

மறுகணமே வேணாட்சா சேற்றில் இறங்கி நின்றுகொண்டு அவர்களுக்கு வழிவிட்டுத்தான் எனக்குப் பழக்கம் என்றிருக்கிறார். இந்த அணுகுமுறையைக் கோத்தபாய பின்பற்றுவதன் மூலம் அவரது தரப்பில் நல்லிணக்கம் உருவாக்கப்பட்டும். மாவீரர் தினம் போல விட்டுக்கொடுப் பின்மூலம் சாதிக்க வாய்ப்புண்டு.

அவருக்கு எதிர்வினையாக உணர்ச்சி வசப்படும் அரசியல் அணுகுமுறையால் நல்லிணக்கத்துக்கு எதிரானவர்களாகவே தமிழ்த் தலைவர்கள் இருக்கப் போகிறார்கள். இது நீண்ட காலத்தில் தமிழ் மக்களையே பாதிக்கும்.






# தாய்லாந்தில் இறந்துபோன மான் வயிற்றில் பிளாஸ்ரிக்

தாய்லாந்தில் இறந்துபோன மானொன்றின் வயிற்றில் இருந்து 7 கிலோ பிளாஸ்ரிக் மீட்கப் பட்டுள்ளது.
தாய்லாந்தின் வடக்கு பகுதியில் உள்ள நாநோய் மாவட்டத்தில் குன் சதான் தேசிய பூங்கா உள்ளது. இங்கு கடந்த 25ஆம் திகதி பூங்கா அதிகாரி ஒருவர் வழக்கமான கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தபோது, 10 வயதான காட்டு மான் இறந்து கிடந்ததை அவதானித்தார். இதையடுத்து, அந்த மானின் உடலை பரிசோதனை செய்தனர். இதன்போது அதன் வயிற்றில் 7 கிலோ பிளாஸ்ரிக் இருந்தமை கண்டறியப்பட்டுள்ளது.


**'பிளாஸ்ரின் எனும் பேரரக்கன்...'**

# ஜேர்மனி அருங்காட்சியகத்தில் கலைப்பொருள்கள் திருட்டு!



ஜேர்மனி அருங்காட்சியகத்தில் பல கோடி ரூபா மதிப்புள்ள நகைகள் திருடப்பட்டுள்ளன. இது குறித்துத் தகவல் தருப வர்களுக்கு இலங்கை மதிப்பில் சுமார் 12 கோடி ரூபா சன் மானம் வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
ஜேர்மனியின் தென்மேற்குப் பகுதியில் உள்ள சாக்சனி மாகாணத்தின் தலைநகர் டிரஸ்டனில் 'கிரீன் வாலட்' என்ற அருங்காட்சியகம் உள்ளது. இங்கு ஐரோப்பிய நாடுகளின் பழங்காலப் பொக்கிசங்கள், அரிய கலைப் பொருள்கள் உள்ளிட்டவை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கடந்த 25ஆம் திகதி பல்வேறுபட்ட வைரக் கலைப்பொருள்கள் இங்கிருந்து கொள்ளையிடப்பட்டுள்ளன.

**'ஆசைக்கு ஜேர்மனியும் விலக்கா...'**



# ஆப்கானுக்கு ட்ரம்ப் திடீர் சுற்றுப்பயணம்

ரவுண்ட் தவேள்ட்

பிரகாஸ்

மிகமிக இரகசியமான முறையில் ஆப்கானிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு திரும்பியுள்ளார் அமெரிக்க அதிபர் ட்ரம்ப்.
ஆப்கானிஸ்தானில் தலிபான்கள் அரசுக்கு எதிராகப் போராடி வருகின்றனர். ஆப்கானிஸ்தான் அரசுக்கு ஆதரவாக அமெரிக்கா அங்கு முகாமிட்டு தலிபான்களுக்கு எதிராகப் போராடி வருகின்றது. அண்மைக்காலமாக ஆப்கானிஸ்தானில் அமைதிப் பேச்சு நடத்தப்பட்டு வரும் நிலையில் ட்ரம்ப் மிகமிக இரகசியமான முறையில் ஆப்கானிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ளார்.
ஆப்கானிஸ்தானில் அமைதியை ஏற்படுத்துவது குறித்து இருவரும் கலந்துரையாடினார்கள் என்று தெரிவிக்கப் பட்டுள்ளது.

**'அமைதி திரும்பினால் சரி...'**




# ஈராக்கிய தலைமை அமைச்சர் பதவி விலகுவதாக அறிவிப்பு

ஈராக்கில் நடைபெற்று வரும் போராட்டங்களின் எதிரொலியாக, அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் அதெல் அப்துல் மஹதி பதவி விலகினார்.
ஈராக் நாடு தொடர் போர்களால் சீரழிவைச் சந்தித்து வந்த நாடு. சதாம் உசைன் ஆட்சிக்குப் பிறகு அங்கு அரசியல் நிலைத்தன்மை இல்லாமல் போனது. தொடர் போர்களால் நாட்டின் பொருளாதாரம் சீர்குலைந்து விட்டது.
வேலையில்லாத் திண்டாட்டம் தாண்டவமாடி வருகிறது. ஊழலுக்குக் குறைவில்லை. இது மக்கள் மத்தியில் அரசின்மீது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது. இதன் காரணமாகத் தலைமை அமைச்சர் அதெல் அப்துல் மஹதிக்கு எதிராக மக்கள் கிளர்ந்தெழுந்து வீதிகளில் இறங்கி போராட்டம் நடத்தி வருகின்றனர். போராட்டங்களின் எதிரொலியாக, அந்த நாட்டுத் தலைமை அமைச்சர் அதெல் அப்துல் மஹதி பதவி விலகினார்.

**'அமெரிக்காவின் நகர்வுதானோ...'**

சிலி அரசுக்கு எதிராக அங்கு தற்போது தொடர் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நபரொருவரின் ஒளிப்படமே இது.





# அறிவியலின் சூப்பர் ஸ்ரார் ஐன்ஸ்டைன்

அது 1919இன் முற்பகுதி. பிரிட்டிஷ் வானியலாளர்களை உள்ளடக்கிய இரண்டு குழுக்கள் ஒரு சூரிய கிரகணத்தைக் கண்டாய்வு செய்வதற்காகப் புவியின் தொலை தூரத்தை நோக்கிய ஒரு பயணத்தை மேற்கொண்டார்கள். கிட்டத்தட்ட எட்டு மாதங்களுக்குப் பிறகு, நவம்பர் 6, 1919 அன்று அந்தக் குழுக்கள் தங்கள் கண்டறிதல்களை லண்டனில் அறிவியலாளர்கள் நிரம்பிய அவையில் முன்வைத்தனர். அவர்களின் அறிவிப்பு இந்தப் பிரபஞ்சத்தைக் குறித்த மனிதர்களின் பார்வையை ஒட்டுமொத்தமாக மாற்றியமைத்தது.

அந்தக் குழுக்களின் அறிக்கை, முதல் உலகப் போர் நிறைவுக்கு வந்து ஓராண்டு முடிவதற்கு முன்பு வெளியானது. ஆகவே, போரினால் ஏற்பட்ட காயத்தை ஆற்றவும் அது உதவியிருக்கலாம். அந்த பிரிட்டிஷ் கிரகண ஆராய்ச்சிப் பயணமானது, ஆல்பெர்ட் ஐன்ஸ்டைன் முன்வைத்த ஈர்ப்புவிசை பற்றிய புதிய கோட்பாட்டைப் பரிசோதித்துப் பார்க்கும் வகையில் வடிவமைக்கப்பட்டது. ஜேர்மனியில் பிறந்த ஐன்ஸ்டைன் தனது அறிவியல் படைப்புகளை எதிரியின் எல்லைக்குள் இருந்துகொண்டுதான் வெளியிட்டார். பிரிட்டிஷ்காரர்கள் ஐன்ஸ்டைன் முன்வைத்தது சரியென்று நிரூபித்தால், அவருடைய கோட்பாடு நவீன அறிவியல் சிந்தனையின் தந்தையும் பிரிட்டனின் தேசியக் கதாநாயகருமான நியூட்டனின் கோட்பாட்டைத் தகர்த்துவிடும்.

வெளியில் பரவியுள்ளதும், பெரும் நிறையுள்ள பொருள்களை ஈர்த்து வைத்திருப்பதுமான ஈர்ப்பு விசையை ஒரு விசையாகவே நியூட்டன் பார்த்தார். ஈர்ப்பு விசையே வெளிதான் என்ற புரட்சிகரமான கருத்தின் மூலம் நியூட்டனின் கருத்தை இடம்மாற்றினார் ஐன்ஸ்டைன். ஒரு நாடக அரங்கத்தின் தரைப் பலகைகள்போல் இறுக்கமாகவும் மாறாததாகவும் காலமும் வெளியும் இருப்பதில்லை. மாறாக, ஜெல்லிபோல் குலுங்குவதாக அவை உள்ளன என்றார் ஐன்ஸ்டைன். பெரும் நிறை கொண்ட பொருள் ஒன்று குலுங்கக்கூடிய இந்தக் கால வெளியில் குழிவு ஏற்படுத்துகிறது, இறப்பர் விரிப்பின் மீது ஒரு ஈயக்குண்டு வைக்கப்படும்போது, அதில் குழிவு ஏற்படுவதுபோல. சூரியனால் பூமி ஏன் ஈர்க்கப்படுகிறது என்றால் அது விசையினால் அல்ல, பூமி பயணிக்கும் வழியில் உள்ள காலவெளியில் குழிவை சூரியன் ஏற்படுத்துவதால்தான்.

1911ஆம் ஆண்டிலேயே தனது விநோதமான கருதுகோளைச் சரிபார்க்க ஒரு வழிமுறையை ஐன்ஸ்டைன் பரிந்துரைத்தார். ஒரு விண்பொருளானது பெரும் நிறையுடன் சூரியனைப்போல இருந்தால், அதன் அருகில் உள்ள வெளியில் பயணிக்கும் பொருள்களின், கூடவே விண்மீன் ஒளியின் துகள்களின், வளைவான பாதையை அறிவியலாளர்களால் காண முடியும். சூரியனைக் கடக்கும்போது ஒரு விண்மீனின் ஒளி வளைவதையும் சூரியன் வேறு இடத்தில் இருக்கும்போது அதே விண்மீனின் ஒளி வளையாமல் செல்வதையும் தொலைநோக்கியின் மூலம் காணலாம் என்று பரிந்துரைத்தார் ஐன்ஸ்டைன்.

சாதாரண சூழல்களில் இதுபோன்று கண்டாய்வு செய்வது தவறாகவே முடியும். கண்ணைக் கூசச் செய்யும் சூரியத் தகடானது விண்மீன்களிடமிருந்து வரும் மங்கலான வெளிச்சத்தை மூழ்கடித்துவிடும். ஆனால், கடிகார இயக்கம் போன்ற சூரியக் குடும்பமானது சூரியனுக்கும் பூமிக்கும் சரியாக நடுவில் நிலவைக் கொண்டுவந்து வைக்கும் அரிதான அந்தத் தருணங்களிலும் இடங்களிலும் அந்த விண்மீன்கள் பார்வைக்கு வரும்.

1912ஆம் ஆண்டில் தொடங்கி, ஐன்ஸ்டைன் கூறிய, ஈர்ப்புவிசையால் ஒளி வளையும் நிகழ்வை சூரிய கிரக ணத்தின்போது தேடி நடந்த முயற்சிகள் பல மோசமான வானிலையால் தோல்வியுற்றன. இதில் முதலாம் உலகப் போரும் விளையாடிவிட்டது. ஜேர்மனிய வானியலாளர் எர்வின் பின்லே ப்ரான்லிச் ஆகஸ்ட் 21, 1914ஆம் ஆண்டில தெரியவிருந்த சூரிய கிரகணத்தைக் கண்டாய்வு செய்ய வந்தபோது போர் வெடித்தது. அவரும் அவரது உதவியாளர்களும் ஒற்றர்கள் என்று கருதப்பட்டு, உடனடியாக ரஷ்யாவில் கைதுசெய்யப்பட்டனர். அவர்களின் கருவிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. ஐன்ஸ்டைன் போரை வெறுத்தார். அக்டோபர் 1914ஆம் ஆண்டில் 93 ஜேர்மன் அறிவியலாளர்கள் ஜெர்மானிய ராணுவத்துக்கு ஆதரவு தெரிவித்து ஒரு அறிக்கையில் கையெழுத்திட்டிருந்தார்கள். ஐன்ஸ்டைன் அதில் கையெழுத்திட மறுத்துவிட்டார். அது மட்டுமல்லாமல், ஜேர்மனிய ராணுவத்தின் தாக்குதல்களைக் கண்டித்து அறிக்கையில் கையெழுத்திட்ட நான்கு அறிவியலாளர்களில் ஐன்ஸ்டைனும் ஒருவர்.




**புதிய செயல்வீரர்**

1916ஆம் ஆண்டில் ஐன்ஸ்டைனுக்கு அவருடைய பணிகளைத் தாங்கிப்பிடிக்கக் கூடிய எதிர்பாராத, ஒரு புதிய செயல்வீரர் கிடைத்தார். அவர்தான் பிரிட்டிஷ் வானியலாளர் ஆர்தர் எடிங்டன். பிரிட்டிஷ் ராணுவத்தில் சேர மறுத்ததால் அவரைக் கிட்டத்தட்ட சிறையில் இடுவதற்கு இருந்தார்கள். ஐன்ஸ்டைனின் முக்கியமான ஆய்வுக் கட்டுரைகளைப் படித்த பிறகு, ஐன்ஸ்டைனின் அறிவியல் படைப்புகளில் எடிங்டன் பெரிதும் மூழ்கிவிட்டார். அந்தக் கட்டுரைகளை அப்போது போரில் எந்தத் தரப்பும் எடுத்திராத நெதர்லாந்தின் வழியாக பிரிட்டனுக்குக் கடத்திவந்திருந்தார். தனது சகாக்களையும் ஐன்ஸ்டைனின் கருத்துகளை ஏற்றுக்கொள்ளும்படி தூண்டினார். காலவெளி வளைவு என்ற ஐன்ஸ்டைனின் புதிரான கோட்பாடு பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை வெளியிட்டார். ஐன்ஸ்டைனின் கோட்பாடுகளை யாராவது இழிவாகப் பேசினால் அவர்களை மறுத்தும் வாதிட்டார்.

ஒளியானது வளையும் என்ற ஐன்ஸ்டைனின் கண்டுபிடிப்பைப் பரிசோதிப்பதற்காக எடிங்டனும் பிரிட்டனின் அரசவை வானியலாளருமான ப்ராங்க் டைசனும் மே 29, 1919ஆம் ஆண்டில் நிகழவிருந்த சூரிய கிரகணத்தை எதிர்நோக்கியிருந்தனர்.


1919ஆம் ஆண்டின் நிகழ்வானது நிறைய வகைகளில் நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒன்று என்று, ராயல் வானியல் கழகத்தின் மாதாந்திர இதழான 'தி அப்சர்வேட்டரி'யில் டைசன் தெரிவித்திருந்தார். அந்தக் கிரகணம் ஆறு நிமிடங்களுக்கும் மேல் நிகழ்வது, 20ஆம் நூற்றாண்டின் மிக நீண்ட கிரகணங்களுள் ஒன்று.

இன்னும் வேறென்ன வேண்டும் என்பதுபோல், அந்தக் கிரகணம் பிடித்த சூரியன் பின்னணியில் பல்வகைமை கொண்ட விண்மீன்களை, அதாவது ஹயாடிஸ் விண்மீன் கொத்தைக் கடந்துசெல்லும். அப்போது ஐன்ஸ்டைனின் கோட்பாட்டைப் பரிசோதித்துப் பார்க்கும் அளவுக்கு விண்வெளி வெளிச்சம் நிறைய கிடைக்கும். அந்த விண்மீன்கள் ஓரளவுக்கு வெளிச்சமானவை, ஆகவே பார்ப்பதற்கு எளிதானவை.

**ஆய்வுக்குப் பச்சைக்கொடி**

டைசனும் எடிங்டனும் 1919 நிகழ்வைக் கண்டாய்வு செய்வதற்கான திட்டங்களில் இருந்தபோது, போரானது ஐரோப்பாவைச் சின்னாபின்னமாக்கிக் கொண்டிருந்தது. இறந்துபோன பல்லாயிரக்கணக்கான ராணுவ சிப்பாய்களுக்குப் பதிலாக ஆள்களைச் சேர்த்தாக வேண்டிய நெருக்கடியில் பிரிட்டிஷ் ராணுவம் 1918ஆம் ஆண்டில் முனைப்பாக இருந்தது. தனது பணி காரணமாக ராணுவ சேவையிலிருந்து விதிவிலக்கைப் பெற்றிருந்தவரும் திருமணமாகாதவரும் 35 வயது நிரம்பியவருமான எடிங்டனின் விதிவிலக்கை மூன்று மாதங்களில் கைவிட வேண்டும் என்று ராணுவத் தீர்ப்பாயம் வாதிட்டது. ஏப்ரலில் அவருக்கு மூன்று மாதம் நீட்டிப்பு வழங்கப்பட்டது. ஆனால், ஜூன் 14, 1918ஆம் ஆண்டில் கேம்ப்ரிட்ஜில் நடந்த விசாரணையில், அவருக்கு வழங்கப்பட்ட விதிவிலக்கைத் திரும்பப் பெறுவதில் ராணுவம் வெற்றி கண்டது.

இறுதியாக, ராயல் வானியல் கழகங்களின் கிரகணங்களுக்கான இணை நிரந்தரக் குழுவின் தலைவராக ஆகியிருந்த டைசனிடமிருந்து வந்த கடிதம், 1919 சூரிய கிரகணத்தை ஆய்வு செய்வதென்பது பிரிட்டிஷ் அறிவியலுக்கு நல்லது என்றும் அந்த ஆய்வுப் பயணத்தை எடிங்டன் மேற்கொள்ள



வேண்டும் என்றும் அதிகாரிகளை உரை வைத்தது.

ஆகவே, மார்ச் 8, 1919ஆம் ஆண்டில் இன்னும் அதிகாரபூர்வமாக போரில் ஐரோப்பா ஈடுபட்டிருக்க, இரண்டு குழுக்களும் லிவர்பூலிலிருந்து நீராவிக் கப்பலில் புறப்பட்டன. சூரியன் சற்று நேரம் இருளடைவதைக் காண்பதற்காக அமேசான், ஆப்பிரிக்கா என்று இந்தக் குழுக்கள் ஆயிரக்கணக்கான மைல்கள் பயணித்தன. எடிங்டனும் நார்த்தாம்டன் ஷையரைச் சேர்ந்த கடிகாரம் செய்பவரான எட்வின் காட்டிங்காமும் ஆப்பிரிக்காவின் மேற்குக் கடற்கரையில் இருப்பதும் போர்த்துக்கலுக்குச் சொந்தமானதுமான பிரின்ஸிப்பி தீவுக்குச் செல்கிறார்கள். ஆண்ட்ரூ கிராமெலினும் சார்லஸ் டேவிட்ஸனும் வடக்கு பிரேசிலில் உள்ள சோப்ராலுக்குச் செல்கின்றனர்.

**நியூட்டனா, ஐன்ஸ்டைனா? யார் சரி?**

மே 29, 1919ஆம் ஆண்டில் நிலவானது சூரியனுக்கும் பூமிக்கும் இடையில் 6 நிமிடங்கள் 51 நொடிகள் தன்னைச் செருகிக்கொண்டபோது, அற்புதமான பகல் திடீரென்று இரவான அந்தப் பொழுதில், சூரிய னுக்குப் பின்னால் இருந்த விண்மீன்களை எடிங்டனும் அவரது சகாக்களும் படமெடுத்துக்கொண்டனர். பிரின்சிபியில் சூழல் அவ்வளவு சாதகமாக இல்லை. கிரகணம் அதன் முழுமையை எட்டுவதற்கு இரண்டு மணி நேரத்துக்கு முன்புதான் ஒரு புயல்மழை அடித்து, ஆங்காங்கே இடைவெளி காணப்படும் மேகங்களை விட்டுச்சென்றிருந்தது. சோப்ராலில் புகைப்படத் தகடுகள் சில குவிமையம் விலகி இருப்பதைக் கண்டு வானியலாளர்கள் வருந்தினர். சூரியனின் வெப்பம் கண்ணாடியைச் சமச்சீரற்ற நிலையில் விரியச் செய்திருக்கிறது. அதை வைத்துக் கொண்டு ஐன்ஸ்டைன் சரியா, நியூட்டன் சரியா என்று தீர்மானிப்பது கடினம். கண்டாய்வு செய்தவர்கள் வீடு திரும்பியபோது, தாங்கள் எடுத்த புகைப்படங்களுடன் சூரியன் இல்லாதபோது அதே இடத்தில் அந்த விண்மீன்களை எடுத்த புகைப்படங்களை வைத்து விண்மீன் ஒளி வளைந்திருக்கிறதா என்று பார்த்தார்கள்.

நவம்பர் 6ஆம் திகதி பல மாத வேலைகளுக்குப் பிறகு, அந்த இரண்டு குழுக்களும் இறுதியாகத் தங்கள் முடிவுகளை ராயல் கழகத்திடமும் ரோயல் வானியல் கழகத்திடமும் முன்வைக்கத் தயாராகின. லண்டனிலுள்ள பார்லிங்டன் இல்லத்திலுள்ள கிரேட் ஹாலில் திரண்டிருந்த பெரும்பாலான வானியலாளர்களுக்கு என்ன அறிவிப்பு வரப்போகிறது என்பது தெரியாது. ராயல் கழகத்தின் தலைவரும் எலெக்ட்ரானைக் கண்டுபிடித்ததற்காக நோபல் பரிசைப் பெற்றவருமான ஜே.ஜே. தாம்ஸன் அந்தக் கூட்டத்துக்குத் தலைமை தாங்கினார். 'அங்கிருந்த ஒட்டுமொத்த சூழலின் நெருக்கியடித்த ஆர்வமும் கிரேக்க நாடகம் ஒன்றைப் போலவே இருந்தது' என்று எழுதினார், அந்த அறையில் நிரம்பியிருந்தவர்களில் ஒருவரான கணிதவியலாளரும் தத்துவவாதியுமான ஆல்பிரட் வைட்ஹெட்.

**விண்ணகத்தில் ஒளியெல்லாம் வளைகிறது**

சூரிய கிரகணத்தை எடுத்த அளவுகளில் நிறைய தெளிவின்மைகள் இருந்தன. அங்கு கூடியிருந்த அறிவியலாளர்களில் சிலர் அது குறித்து அவநம்பிக்கையோடு இருந்தார்கள். ஆனால், அங்கு கூடியிருந்தவர்களில், ஐன்ஸ்டைனின் கோட்பாடு சரியே என்று நம்பியவர்கள் சார்பாக தாம்ஸன் பேசினார். 'நியூட்டனின் காலத்திலிருந்து ஈர்ப்புவிசை தொடர்பாகப் பெறப்பட்ட மிக முக்கியமான ஆய்வு முடிவு இது. ஆகவே, நியூட்டனுடன் நெருக்கமான தொடர்புடைய இந்தக் கழகத்தின் கூட்டத்தில் அதை அறிவிப்பதே பொருத்தமாக இருக்கும்' என்றார் தாம்ஸன்.

மறுநாள், நவம்பர் 7ஆம் திகதி யன்று போர்நிறுத்த தினத்தின் முதலாம் ஆண்டு நிறைவு நாள். 'டைம்ஸ் ஆஃப் லண்டன்' இதழின் முதல் பக்கத்தில் முழுவதும் போரைப் பற்றியும் போர் நினைவுகளைப் பற்றியும் செய்திக் கட்டுரைகள் இடம்பெற்றிருந்தன. அந்தக் கட்டுரைகளின் வலது பக்கம் ஒரு செய்திக் கட்டுரையில் ஒரு மறுமலர்ச்சியைப் பற்றி வெளியிடப்பட்டிருந்தது. மூன்று டுக்குத் தலைப்புச் செய்தியில் டைம்ஸ் இப்படி எழுதியிருந்தது: 'அறிவியலில் புரட்சி: பிரபஞ்சத்தைப் பற்றிய புதிய கோட்பாடு. நியூட்டனின் கோட்பாடுகள் தூக்கியெறியப்பட்டன.'

இந்தச் செய்தி உலகம் முழுவதும் சங்கிலித் தொடர் விளைவுகளை ஏற்படுத்தியது. இந்தச் செய்தியைப் பின்தொடர்ந்து 'தி நியூயார்க் டைம்ஸ்' இதழும் நவம்பர் 10 அன்று செய்திக் கட்டுரையை இப்படித் தலைப்புடன் வெளியிட்டிருந்தது: 'விண்ணகத்தில் ஒளியெல்லாம் வளைகிறது... ஐன்ஸ்டைனின் கோட்பாடு வெற்றிகொள்கிறது.'

பெர்லினில் ஐன்ஸ்டைன் தனது இரண்டாவது மனைவியுடனும் அந்த மனைவிக்குப் பிறந்த இரண்டு பெண்களுடனும் பகிர்ந்துகொண்டிருந்த வீட்டில் கண்விழித்தெழுந்தார். அந்த நகரமே போராலும் போருக்குப் பிந்தைய சூழலாலும் ஏற்பட்ட தட்டுப்பாட்டால் தள்ளாடிக்கொண்டிருந்தது. உணவுக்காகவும் வெப்பத்துக்கான எரிபொருளுக்காகவும் எல்லோரும் அல்லாடிக்கொண்டிருந்தார்கள். ஆகவே, ஐன்ஸ்டைன் தனது காலைப் பொழுதை தனது குடும்பத்தின் உடனடித் தேவைகளைப் பூர்த்திசெய்வது குறித்த கவலைகளில் ஆழ்ந்திருப்பார். ஆனால், அந்தக் காலைப் பொழுதில் அவர் அறிவியலின் முதல் உச்ச நட்சத்திரமாக ஆகியிருந்தார். இந்தப் புகழ் குறித்த பரபரப்பு வெகு விரைவிலேயே அடங்கிவிடும் என்று ஐன்ஸ்டைன் தனது நண்பருக்குக் கடிதம் எழுதினார். அவர் எழுதியது தவறு. அவருடைய பிரபல்யம் வெறும் சில நாள்கள் மட்டுமோ வாரங்கள் மட்டுமோ நீடிக்கவில்லை, அவரது வாழ்நாள் முழுவதும் அதைத் தாண்டியும் நீடித்தது.

**ரீங்கரிக்கும் ஈர்ப்பலைகள்**

ஐன்ஸ்டைன் தனது சார்பியலுக்கான பொதுக் கோட்பாட்டை உருவாக்கிய போது, இந்தப் பிரபஞ்சத்தில் ஒரே ஒரு விண்மீன் மண்டலம் மட்டுமே இருப்பதாக அறியப்பட்டிருந்தது. தற்போது குறைந்தபட்சம் 10 ஆயிரம் கோடி விண்மீன் மண்டலங்கள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது. அது மட்டுமல்ல, அவை யாவும் ஒவ்வொரு நொடியும் வேகமாக விரிந்துகொண்டிருக்கின்றன, உப்பிக்கொண்டிருக்கின்றன. கடந்த சில தசாப்தங்களாக வானியலாளர்கள் நாம் தொலைநோக்கியில் பார்க்கக் கிடைப்பதைவிட, இன்னும் அதிகம் இந்தப் பிரபஞ்சத்தில் ஏதோ இருக்கிறது என்று கருதுகிறார்கள். கரும் பொருள், கரும்சக்தி என்ற கண்ணுக்குத் தெரியாத விஷயங்கள் இந்தப் பிரபஞ்சத்தில் 96 வீதம் ஆக்கிரமித்திருக்கின்றன. காலவெளியில் ஒளியை விழுங்கும் ஈர்ப்புவிசை மிக்க அகோரப் பசி கொண்ட ராட்சசக் கருந்துளைகள், ஒவ்வொரு பெரும் விண்மீன் மண்டலத்தின் நடுவிலும் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும், ஈர்ப்பலைகள் என்று அறியப்படும் காலவெளியில் ஏற்படும் அலைகள் பிரபஞ்சம் முழுவதும் ரீங்கரித்துக்கொண்டிருக்கின்றன. இந்தக் கண்டுபிடிப்புகள் குறித்து அர்த்தப்படுத்திக்கொள்ள முயலும் எவரும் ஐன்ஸ்டைனின் பொதுச்சார்பியல் கோட்பாட்டுக்குக் கடன்பட்டிருக்கிறார்கள். ஒரு நூற்றாண்டு கழிந்தும் ஐன்ஸ்டைனின் மகத்தான படைப்பு இந்தப் பிரபஞ்சத்தின் பிறப்பு, வாழ்க்கை குறித்துப் புதிய, எதிர்பாராத சாளரங்களைத் திறந்து கொண்டேதான் இருக்கிறது.

*நன்றி: இந்து தமிழ் திசை*



**காலவெளியில் ஒளியை விழுங்கும் ஈர்ப்புவிசை மிக்க அகோரப் பசி கொண்ட ராட்சசக் கருந்துளைகள், ஒவ்வொரு பெரும் விண்மீன் மண்டலத்தின் நடுவிலும் இருக்கலாம் என்று கருதப்படுகிறது. மேலும், ஈர்ப்பலைகள் என்று அறியப்படும் கால வெளியில் ஏற்படும் அலைகள் பிரபஞ்சம் முழுவதும் ரீங்கரித்துக் கொண்டிருக்கின்றன.**

# தென்னையில் செவ்வண்டும் கட்டுப்படுத்தலும்



ஜெ.சத்தியேந்திரன்

இலங்கையில் தென்னை வளரும் எல்லாப் பிரதேசங்களிலும் இந்தப் பீடை காணப்படுகின்றது. தென்னைச்செய்கையில் இது அபாயகரமான பீடை ஆகும்.

தென்னை மரத்தின் வட்டை முற்றாகத் தாக்கி, சரித்து விழுத்தி தென்னைமரத்தை இறக்கச் செய்கிறது இது. நிலமட்டத்திலிருந்து தென்னையின் அடித்தண்டு வந்த மரங்கள் முதற்கொண்டு 15 வருட வயதுள்ள தென்னைகள் வரை இது மிக பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும். முதிர் வண்டு சுமார் 36 மில்லி மீற்றர் நீளமும் 10 மில்லி மீற்றர் அகலமும் சிவப்புக் கபில நிறமுடையதாக நீண்டு வளைந்த மூக்குடனும் (உறுஞ்சி) காணப்படும். உடலின் மத்திய பாகத்திலும், மேற்பரப்பில் தலையின் நடுவிலும் கரிய புள்ளிகள் காணப்படும். 310 வயதுள்ள இளம் தென்னங்கன்றுகளின் ஓலைக்காம்புகளிலும், மரத்தண்டிலும் உண்டாகும் புதிய தென்னையின் காயங்களில் பெண் வண்டு ஏராளமான சிறிய வெள்ளை நிறமான நீள்வட்ட முட்டைகளை இடும்.

### குடம்பிப் பருவம்

முட்டைகளில் இருந்து 35 நாள்களில் குடம்பிகள் வெளிவரும். இவை தண்டிலும் முனைப்பாகத்திலும் உள்நோக்கித் துளைத்து நார்போன்ற இழையத்தை உண்ணும். இதனால் மரங்களின் வட்டுகள் சரிந்து அழிந்து போகும். 30 மில்லி மீற்றர் நீளமாய் வளரும் குடம்பி பழுப்பு நிறத்தலையுடனும், இளம் மஞ்சள் உடலுடனும் காணப்படும்.

### கூட்டுப்புழுப் பருவம்

குடம்பிகள் 55 நாள்களின் பின்னர், தென்னை நார்களைக் கொண்டு கூடுகளை அமைத்துக் கூட்டுப் புழுவாக மாறும். இந்தப் புழுக்கள் கூட்டுக்குள் 20இலிருந்து 25வரையான நாள்கள் வரை இருக்கும். இது ஓய்வுநிலையாகும். தென்னோலைத்தண்டு (மட்டை) இணையும் பகுதி அல்லது மரப்பட்டைக்கு அண்மையில் இவற்றைக் காணலாம். பின்பு இவை செவ்வண்டு முதிர்வுடலியாக வெளிவரும். இதன் முழுமையான வாழ்க்கைச் சக்கரம் 90 - 100 நாள்கள் ஆகும்.

### செவ்வண்டுத் தாக்கத்தின் அறிகுறிகள்

தாக்கத்தின் ஆரம்ப நிலையில் பீடையை இனங்காண்பது மிகவும் கடினம். மரம் மோசமாகச் சேதம் அடைந்த பின்பு தான் செவ்வண்டு இருப்பது தெரியவரும். என்றாலும் நன்றாக அவதானித்தால் பின்வரும் அறிகுறிகள் தென்படும். மரத்தின் வட்டு அல்லது மரத்தின் தண்டில் காணப்படும் சில துவாரங்கள் ஊடாக மெல்லப்பட்ட நார், வெளியே சக்கை, சக்கையாகத் தள்ளப்பட்டிருக்கும். அதே நேரம் மண்ணிறமான பிசின் துவாரத்திலிருந்து வழியும். மரத்துடன் காதை ஒட்டிவைத்துக் கேட்டால் நறநற என்ற சத்தத்தைக் கேட்கலாம் (புழுக்கள் இழையங்களை அரிக்கும் போது உண்டாகும் சத்தம்). குருத்து வாடி வதங்கிப் போய் மஞ்சள் நிறமாக ஒடுக்கமாகச் சரிந்து காணப்படும். மரத்தின் காயங்கள் அல்லது வெடிப்பு உள்ள இடங்களில் இடும் முட்டைகளிலிருந்து பொரித்து வெளிவரும் புழுக்கள் மரத்தினுள் சென்று உட்பகுதியிலுள்ள இழையங்களை உண்பதால் மரத்தின் அடிப்பகுதி அல்லது வட்டுப்பகுதி முறிந்து விழும்.

### சேதத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகள்

கிரமமாகப் பயிற்றப்பட்டவர்களைக் கொண்டு 2 கிழமைக்கு ஒரு முறை மரங்களைப் பரிசோதித்தல். மரத்தண்டின் ஓலைக்காம்பில் காயம் ஏற்பட்டிருந்தால், செவ்வண்டு முட்டையிடுவதைத் தவிர்ப்பதற்காக திரவத் தார் அல்லது கழிவு ஓயிலை மண்ணெண்ணெய் கலக்காமல் பூச வேண்டும். இளம் மரங்களின் தண்டுகளிலிருந்து கசிவு ஏற்படுவதைத் தொடர்ந்து, செவ்வண்டின் தாக்கம் நிகழக்கூடும் என அவதானிக்கபட்டுள்ளது. கருவண்டால் தாக்கப்பட்ட மரங்களில் சிலவேளையில் செவ்வண்டு தாக்கம் செலுத்தும். கருவண்டால் தாக்கப்பட்ட வட்டுப்பாகத்தில் செவ்வண்டு முட்டையிட்டு இனப் பெருக்கமடைய வட்டு முறிவடைந்து மரம் பட்டுப்போகும். மரங்களிலுள்ள துவாரங்களை ஒரு பங்கு சீமெந்து 4 பங்கு மணல் கலந்து அடைத்து விடலாம். களிமண்ணும் பாவிக்கலாம். மிக கடுமையாகப் பாதிப்படைந்த மரங்களைத் தறித்து எரிக்க வேண்டும். அத்துடன் வேருடன் பிடுங்கி அழிக்க வேண்டும். காய்ந்த ஓலைகள், அடிமட்டைகள், பன்னாடை என்பனவற்றை அவதானத்துடன் அகற்றுவதன் மூலம் காய்ந்த துவாரங்கள் மற்றும் புழுக்களைக் காணமுடியும். குடம்பி, புழு, வண்டு, கூட்டுப்புழுக்களை இரசாயன பூச்சிநாசினி கொண்டு அழிக்கமுடியும்

### செவ்வண்டைக் கட்டுப்படுத்தும் இரசாயனங்கள்

பூச்சிநாசினி பாவித்தல், பெரமோன் பொறிவைத்தல், பௌதீகவியல் கட்டுப்பாடு. செவ்வண்டைக் கட்டுப்படுத்த கடந்த காலங்களில் பரிந்துரைக்கப்பட்ட பூச்சி நாசினி மொனோகுரோபஸ் ஆகும். ஆனால் தற்சமயம் இந்தப் பூச்சிநாசினி இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. எனினும், தென்னை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மூலம் செவ்வண்டு தாக்கிய மரத்தைப் பார்வையிட்ட பின்பு இதைப் பெற முடியும்.

### பெண்தோயிட் 500 ஈ.சீ

இதில் 40 மில்லி லீற்றரைப் பங்கிட்டு ம்ரத்தின் பாதிக்கப்பட்ட இடத்தில் 6 அங்குலத்துக்கு மேலே 3 துளைகள் இட்டு (சமமான உயரத்தில்) ஊசி உட்செலுத்தி மூலம் மேலே குறிப்பிட்ட பூச்சிநாசினியை ஏற்றவும். மூன்று தினங்களின் பின்பு துளைகளை சீமெந்து கலவையிட்டு அடைக்க வேண்டும். இது தற்காலிக முறை ஆகும்.

### மொனோகு ரோடோ பொஸ் 60

20 மில்லி லீற்றர் எடுத்து தண்ணீர் கலக்காமல் செவ்வண்டால் பாதிப்படைந்த தென்னைக்கு ஊசி உட்செலுத்தல் முறை மூலம் உட்செலுத்தலாம். 10 மில்லி லீற்றர் அளவாக இரண்டு தடவைகள் எடுத்து (ஊசி செலுத்தல் மூலம்) வேட்டைக்கோ பூச்சிநாசினி (இது தென்னை ஆராய்ச்சி நிலையத்தால் அண்மையில் பரிந்துரை செய்யப்பட்ட பூச்சிநாசினி ஆகும்) ஏற்றுவது போன்று உட்செலுத்த முடியும். தாக்கம் கூடிய மரமாயின் 40 மில்லிலீற்றர் வரை தண்ணீர் கலக்காமல் உட்செலுத்தலாம்.

### காப்பு நடவடிக்கைகள்

செவ்வண்டு தாக்கத்துக்குள்ளான மரத்தின் முற்றிய காய்களைப் பறித்தெடுத்தல் வேண்டும். பென்சில் தடிப்புடைய ஆரோக்கியமான புதிய வேரை கவனமாக எடுத்தல் வேண்டும். இளங்கபில நிறமாகக் காணப்படும் வேர்களானது பூச்சிநாசினி ஏற்றுவதற்கு ஏற்ற வேர்கள் ஆகும். வேட்டைக்கோ (4கிராம்) பக்கட்டை 250 மில்லிலீற்றர் (1கீழ் 4 லீற்றர்) நீரில் கரைத்து அதில் 60 மில்லி லீற்றரை ஒரு மரத்துக்கு வேரினூடாக உட்செலுத்த முடியும். தெரிவு செய்யப்பட்ட வேர் நுனிக்கு சற்று மேலே கூர்மையான கத்திகொண்டு கவனமாக வெட்டப்பட வேண்டும். வேட்டைக்கோ கரைசலை பொலித்தீனால் உருவாக்கப்பட்ட நீண்ட குறுகிய பைகள் அல்லது குறுகிய கண்ணாடிக்குழாய் அல்லது சிறிய போத்தல்களில் விட்டு வேரை செருகுதல் வேண்டும். செருகிய வேர்களை இறுக்கமாகப் பொலித்தீன் பையுடன் சேர்த்துக் கட்ட வேண்டும். தொடர்ந்து கண்காணித்தும், தொடர்ந்து வரும் நாள்களில இந்தப் பூச்சிநாசினி முற்றாக உறிஞ்சப்படாமல் இருந்தால், இந்தக் கொள்கலன் வேறு ஒரு புதிய வேறுக்கு மாற்றப்படல் வேண்டும்.

### வேட்டைக்கோ நாசினியைப் பாவிக்கும் முறை.

4 கிராம் பக்கட் அளவில் பெற்றுக் கொள்ள முடியும். இதில் இருக்கும் 4 கிழாம் தூளை 250 மில்லிலீற்றர் நீரில் கரைத்து 60 மில்லிலீற்றர் இனை ஒரு மரத்துக்குச் செலுத்த முடியும். மரத்தின் உயரம் 5 அடி அல்லது அதற்குக் குறைந்தால் மரத்தின் உயரத்துக்கு ஏற்றவாறு செலுத்தலாம். உதாரணமாக, மரத்தின் உயரம் 5 அடி எனில் முதலாவது துளையை12 அடி உயரத்திலும் 2 ஆவது துளையை 4 அடி உயரத்திலும் இடலாம். முதலாவது துளையிட்ட எதிர்ப்பக்கத்துக்கு 2 ஆவது துளையை இடவும். 5 அடிக்கு மேல் உயரமுள்ள மரமாயின் மேற்குறித்த முறையில் துளையிட்டு 5 அடியை விட உயரத்தில் இரு புறமும் இரு துளையை மேலதிகமாக இடல் வேண்டும். 5 அடியை விட கூடிய மரத்துக்கு 4 துளைகள் இடவும்

### பூச்சிநாசினி உட்செலுத்தும் முறை

4 கிறாம் பக்கட் தூளை போத்தலில் இட்டு 1கீழ் 4 லீற்றர் நீரில் கரைக்கவும். மரத்தின் உயரத்துக்கு ஏற்ப 5 சென்றிமீற்றர் ஆழத்தில் 45 போகை கோணத்தில் துறப்பணத்தின் உதவி கொண்டு துளையை இடலாம். (இதற்கு மின்சார துளையிடு கருவியையும் பாவிக்கலாம்) இவ்வாறு துளையிடும்போது கறுப்பு அல்லது ஊதா நிறத்தில் துறப்பணம் காணப்பட்டால் அந்த இடத்தில் பூச்சிநாசினி உட்செலுத்தக் கூடாது. வெள்ளை சார்ந்த நிறமாக இருந்தால் பூச்சிநாசினி உட்செலுத்த உகந்த பிரதேசம் ஆகும். ஊசி ஒன்றைக் கொள்வனவு செய்து (5 மில்லிலீற்றர் அளவு) பூச்சிநாசினியை அளந்து எடுக்கவும். ஊசியின் அளவு 5 மில்லிலீற்றர் ஆக இருப்பின் 60 மில்லிலீற்றரை உட்செலுத்த முடியும். செலுத்திய பின்பு, தென்னை மரத்துக்கு ஏற்படுத்தப்பட்ட துளைகளைக் களிமண் அல்லது சீமெந்தால் அடைக்க வேண்டும். பூச்சிநாசினி செலுத்திய பின் மரத்திலிருந்து நீர் வடிதல் போன்ற அறிகுறிகள் தென்பட்டால் 2 கிழமைகளின் பின் மீண்டும் இதே செயன்முறையைத் தொடர வேண்டும் (ஒரு முறை). மிகவும் அவதானமாக கையுறை பாவித்து இந்தச் செயன்முறையைச் செய்யவும்.

### குறிப்பு

மேற்குறிப்பிட்ட பூச்சிநாசினிகளைத் தென்னமரத்துக்கு உட்செலுத்திய பின்பு 2 அரை மாத காலத்துக்கு தேங்காய் பறித்தல் தடை செய்யப்பட்டுள்ளது. என்பதை அறிவித்தல் மட்டை எழுதி தென்னை மரத்தில் தொங்க விட வேண்டும். பூச்சிநாசினி ஏற்றமுன்பு, மரத்திலுள்ள முற்றிய தேங்காய்களைப் பறித்து விடலாம்.

கட்டுரையாளர்: யாழ்.மாவட்ட மூத்த தென்னை அபிவிருத்தி அலுவலர்.

ஜனனீ சிவஞானசுந்தரம்

எமக்கான கல்வி 11



## சிறார்களின் உள, சமூக பிரச்சினைகளுக்கு வித்திடும்

# ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில்



ஐந்தாம் ஆண்டுபுலமைப் பரிசில் பரீட்சை தருகின்ற சாதகமான விளைவுகளை விட பாதகமான விளைவுகளே அதிகம். ஏனெனில் மிகச் சிறியளவிலான மாணவர்கள் அதில் வெற்றிபெறுகின்ற அதே வேளை 95 வீதமானவர்கள் அதில் தோல்வியடையச் செய்யப்படுகிறார்கள். இதனால் ஏற்படுகின்ற உள, சமூகப் பிரச்சினைகள் அதிகம் என்பதை உள மருத்துவர்கள் பலரும் சுட்டிக் காட்டுகிறார்கள். யாழ்ப்பாணத்தின் தரவுகளும் அதனையே வெளிப்படுத்துகின்றன.

*******

ஐந்தாண்டு புலமைப் பரிசில் பரீட்சையின் போட்டித் தன்மை காரணமாக குறித்த வயதை உடைய அனைத்து மாணவர்களும் தமது அழகிய பட்டாம் பூச்சியாக உலாவும் இளமைக் காலத்தை இழந்து விடுவதாக உள, சமூக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன. அதிக மன அழுத்தம், பிள்ளைகளின் இளமைக் காலத்தின் இழப்பு போன்ற பிரச்சினைகள் ஏற்படுவதாக அந்த அறிக்கைகள் மேலும் தெரிவிக்கின்றன.

வயதுக்குப் பொருத்தமின்றி அதிக வீட்டுவேலைகள் வழங்குதல், தாங்கிக் கொள்ள முடியாதளவு அதிகமன அழுத்தத்தை மாணவர்களுக்கு உருவாக்குகிறது. மன அழுத்தம் காரணமாக பிள்ளைகள் நோயாளியாகின்றனர். இது பிள்ளையின் உடல் இயக்கங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் குறிப்பிடப்படு கின்றது. மேலும், பிள்ளையின் ஞாபகசக்தி மற்றும் கற்றல் நடவடிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்துவதாக ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன. புலமைப் பரிசில் பரீட்சை காரணமாக விளையாடுவதற்கான சந்தர்ப்பத்தை பிள்ளைகள் இழக்கிறார்கள். இதனாலும் கெட்டித்தனமான பிள்ளைகளும் மன அழுத்தத்துக்கு உள்ளாகிறார்கள்.

அரசு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்துவது அல்லது வேறொரு வகுப்பில் நடத்துவது என்ற பல தீர்மானங்களை எடுத்தபோதும் அதனை நிறைவேற்றுவதில் எதிர்கொண்ட சவால்கள் காரணமாக கைவிட்டுள்ளது. கடந்த வருடம் கல்வி அமைச்சர் தரம் ஐந்து புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றுவது கட்டாயமில்லை. அவரவர் விருப்பத்துக்குரியது என்றும் அது தொடர்பான மேலதிக அறிவித்தல்கள் விரைவில் வரும் என்றும் குறிப்பிட்டி ருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

இந்தச் சூழ்நிலையிலும் சென்ற கட்டுரையில் குறிப்பிட்டது போன்று பாடசாலைகள் ஐந்தாமாண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திடைந்த மாணவர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வை மிகப் பிரமாண்டமான முறையில் இன்றும் நடத்துகின்றன. இங்கு எழுகின்ற கேள்வி என்னவென்றால் ஒரு முக்கியமற்ற பரீட்சைப் பெறுபேறுகளுக்குப் பாடசாலைகள் ஏன் இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கின்றன?

ஐந்தாம் ஆண்டுபுலமைப்பரிசிலில் சித்தியடைந்த மாணவர்களுக்கு கலாநிதிப் பட்டத்துக்குரிய தலைத் தொப்பியை அணிவித்து பாராட்டுவிழா நடத்தினார்கள். அதனை அணிவதற்கான காரணம் என்ன என்பது தெரியாமலே அது அணிவிக்கப்பட்டது. பின்னர், வடக்கு மாகாணக் கல்வித் திணக்களம் அதனை சுற்றறிக்கையொன்றின் மூலம் நிறுத்தியது. அது வரவேற்கத்தக்கது. அதேபோன்று ஆடம்பரமான ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் விழாக்களையும் கல்வித்திணைக்களம் நிறுத்தவேண்டும்.

அரசு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையை நிறுத்துவது அல்லது வேறொரு வகுப்பில் நடத்துவது என்ற பல தீர்மானங்களை எடுத்தபோதும் அதனை நிறைவேற்றுவதில் எதிர்கொண்ட சவால்கள் காரணமாக கைவிட்டுள்ளது. கடந்த வருடம் கல்வி அமைச்சர் தரம்ஐந்துபுலமைப்பரிசில்பரீட்சைக்குதோற்றுவது கட்டாயமில்லை. அவரவர் விருப்பத்துக்குரியது என்றும் அது தொடர்பான மேலதிக அறிவித்தல்கள் விரைவில் வரும் என்றும் குறிப்பிட்டிருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது.

தற்போது ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வந்த பின்னணியில் பாடசாலைகள் சில பரபரப்பாக இருக்கின்றன.


இதில் சித்தியெய்தியவர்களுக்கு மட்டும் பாராட்டு விழா வைப்பதா? அல்லது பரீட்சைக்கு தோற்றிய எல்லா மாணவர்களையும் பாராட்டுவதா? என்ற விவாதம் ஒரு பக்கம். எவ்வளவு பிரமாண்டமாக விழாவை நடத்துவது என்ற விவாதம் மறுபுறம் நடக்கிறது. விழாவுக்கு எவ்வாறு பெயர் வைப்பது என்ற விவாதங்களும் நடக்கின்றன. பாராட்டு விழாவா? என்று வைக்கலாமா அல்லது ஒன்று கூடல் என்று வைக்கலாமா? என்ற குழப்பங்களும் உண்டு.

*******

இங்கு, புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களைப் பாராட்டுவது என்பது முரண்நிலையானதாகும். புலமைப்பரிசில் பரீட்சையின் இரண்டு பரீட்சைகளிலும் தலா 75 புள்ளிகளைப் பெற்ற மாணவன் அதாவது மொத்தம் 150 புள்ளிகளைப் பெற்றமாணவன் பாடசாலை விழாவில் பரிசுபெறமாட்டான் பராட்டப்பட மாட்டான். தலா 75 புள்ளிகளுக்கு மேலே எடுத்தவர்கள்தான் பாராட்டப்படுவார்கள், பதக்கங்கள் அணிவிக்கப்படும், பரிசுபெறுவார்கள். 75 புள்ளிகள் என்பது முதல் தரத்திலானது. முதல் தரத்திலான பெறுபேற்றைப் பெற்றவர்கள் பராட்டப்படுவதில்லை என்பது எவ்வளவு துயரமானது?

இலங்கை முழுவதும் மூன்று இலட்சத்து அறுபதாயிரம் மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றுகிறார்கள். இவர்களில் 15 ஆயிரம் மாணவர்கள் தான் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்களாக அறிவிக்கப்படுகிறார்கள். மிகுதியாக இருப்பவர்கள் மூன்று இலட்சத்து 45 ஆயிரம் மாணவர்கள். மொத்த மாணவர்களில் ஐந்து வீதத்துக்கும் குறைவான மாணவர்கள் மட்டுமே சித்தியடைவார்கள். மிகுதி 95 வீதத்துக்கு மேலானவர்கள் சித்தியடைய மாட்டார்கள். இதனால் அவர்கள் மன அழுத்தத்துக்கு ஆளாகின்றார்கள்.

எமது தற்போதைய கல்விக் கொள்கை அதிகளவான மாணவர்களைப் பாழ்படுத்துகிறது. இதனால் எமது கல்வி முறையில் மாற்றங்கள் வேண்டும்.



# வர்த்தக சேவையாக தமிழீழ வானொலி



வானலையில் தமிழ் ஒலி- 28

தேவநாயகம் தேவானந்த்



தமிழீழ வானொலி

**இசையும் கதையும் நிகழ்ச்சி தமிழீழ வானொலியில் சுவை தரும் நிகழ்ச்சியாக அமைந்தது.அரை மணிநேர இந்த நிகழ்ச்சி போராட்டத்தின் கதையொன்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருககும்.**

புலிகளின் குரல் ஒலிபரப்பின் விரிவாக்கத்தை ஐந்து கட்டங்களாகப் பார்க்கலாம்.

1. புலிகளின்குரல் ஒலிபரப்பு
2. தமிழீழ வானொலி
3. சிங்கள ஒலிபரப்பு
4. இணைவழி ஒலிபரப்பு
5. செய்கொள்வழி ஒலிபரப்பு

புலிகளின்குரல் வானொலிச் சேவையின் வர்த்தக ஒலிபரப்பாக ஆரம்பிக்கப்பட்டது தான் தமிழீழ வானொலியாகும். இந்த வானொலி புரட்சிப் பாடல்கள் சில விடுதலை உணர்வையூட்டும் தேர்ந்தெடுக்கப்பட்ட சினிமாப் பாடல்கள் மற்றும் விடுதலைப் புலிகளின் பாடல்களை ஒலிபரப்பி வந்திருக்கிறது.

காலையில் உள்ளூர் பத்திரிகைச் செய்திகளை வாசித்தார்கள். தமிழீழ வானொலி மாணவர்களுக்கிடையில் வினாடி வினாப் போட்டிகளை நடத்தியிருக்கிறது. தொடர் நாடகங்களான, 'உயிர்குடிக்கும் பறவைகள்' மற்றும் 'சாம்பல் பறவைகள்' போன்றன வாராந்தம் ஒலிபரப்பாகியிருந்தன.

இசையும் கதையும் நிகழ்ச்சி தமிழீழ வானொலியில் சுவை தரும் நிகழ்ச்சியாக அமைந்தது. அரை மணிநேர இந்த நிகழ்ச்சி போராட்டத்தின் கதையொன்றை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருக்கும். தனியொருவர் கதை சொல்லியாகவும் கதாபாத்திரங்களாகவும் தனது குரல் வேறுபாடுகள் மூலம் நகர்த்துவார். கதையோடு தொடர்புடைய விடுதலைப் பாடல்கள் இடையிடையே ஒலிபரப்பாகும். 'விடியும் வரை' என்ற நிகழ்ச்சி நடைபெற்றது. அதில் போராளிகளின் கவிதைகள் ஒலிபரப்பாகின. இதனைவிட 'இனிய உறவுகள்' நிகழ்ச்சியில் போராளிகள் தங்கள் உறவினர்களுக்கு எழுதுகின்ற கடிதங்கள் வாசிக்கப்பட்டன.

இந்த நிகழ்ச்சிகளுக்கிடையே உள்ளூரில் வர்த்தகர்களிடமிருந்து பெறப்பட்ட விளம்பரங்களை ஒலிபரப்பியிருந்தார்கள். சமாதான காலத்தில் கொழும்பிலிருந்தும் விளம்பரங்கள் தமிழீழ வானொலிக்குக் கிடைத்திருக்கின்றன.

*******

சுவையான பல விளம்பரங்கள் தமிழீழ வானொலியில் ஒலிபரப்பாகியிருந்தன. அதில் ஒன்று படமாடம் ஒன்றுக்கான விளம்பரமாகும். இறந்து போன ஒருவர் தனது பேரனுக்கு அசரீதி வாக்காகச் சொல்கிறார், "எனது ஆத்மா இப்போதான் சாந்தியடைஞ்சிருக்கு. நீ என்ர படத்தை பொக்ஸ் பிறேம் அடிச்சு தொங்கவிட்டதால் எனது ஆத்மா இப்போ சாந்தியடைஞ்சிருக்கு" என்று அந்த விளம்பரம் ஒலிபரப்பானது. இதேபோன்று மில்க் வைற் சோப் விளம்பரமும் முக்கியமானது. யாழ்ப்பாணத்தில் தமிழீழ வானொலி இயங்கிய போது அப்போது மில்க்வைற் சவக்காரத் தொழிற்சாலை இயங்கிய காலகட்டம். யாழ்ப்பாணத்திலிருந்த தொழிற்சாலைகளில் மில்க்வைற்றும் ஒன்று. பின்னர் பொருளாதாரத் தடைகாரணமாக மூலப்பொருள்கள் கிடைக்காமல் போனதால் தொழிற்சாலை மூடவேண்டியதாயிற்று. மூடிய தொழிற்சாலையை இன்றுவரை மீளத்திறக்க முடியில்லை. யுத்தம் முடிந்த பின்னர் சந்தைக்கு வேறு சவர்க்காரங்கள் புழக்கத்துக்கு வந்ததால் மில்வைற் சோப் அறவே மறந்து போயிற்று. இந்த சவர்க்காரத்துக்கான வினம்பரம் மிகப் பிரபல்யமாக தமிழீழ வானொலியில் ஒலிபரப்பாகிவந்தது.



மில்க் வைற் திரவ சவர்க்கார விளம்பரம் மிகப் பிரபல்யமானது. ஏனெனில் அதற்கு எதிரான எதிர்விளம்பரத்தை பலாலியிலிருந்துதான் மக்கள் சேவை விளம்பரம் ஒலிபரப்பிவந்தத்ால் ஆகும். இந்தக் காலகட்டத்தில் பாலாலி இராணுவ முகாமிலிருந்து வடபகுதிக்காக மக்கள் குரல் என்ற விசேட ஒலிபரப்பு சேவை ஒன்றை ஆரம்பித்து நடத்திவந்தார்கள். அதனை இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்ச் சேவையில் பணியாற்றிய சில பிரபலமான அறிப்பாளர்களும் நிகழ்ச்சித் தயாரிப்பாளர்களும் நடத்தியிருந்தார்கள். அவர்களின் நோக்கம் தமிழீழ வானொலிக்கு எதிரான ஒலிபரப்பை மேற்கொள்வதாகும். அதாவது தமிழீழ வானொலியில் ஒலிபரப்பாகும் நிகழ்ச்சிகளுக்கு எதிரான நிகழ்ச்சிகளை ஒலிபரப்புவது ஆகும். தமிழீழ வானொலியை நையாண்டியாக கேலிபடுத்தும் வகையில் நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பினார்கள். உதாரணத்துக்கு தமிழீழ வானொலியில் ஒலிபரப்பான மிலக்வைற் திரவச் சவர்க்கார விளம்பரத்துக்குப் பதிலாக 'மில்க் வைற் தண்ணீர் சவர்காரம்' என்றதொரு போலி விளம்பரத்தை ஒலிபரப்பினார்கள். அதேபோன்று இன்னொரு போலி விளம்பரமாக 'சீறும் புலி மார்க் பனஞ்சாராயம்' என்றதொரு விளம்பரத்தையும் ஒலிபரப்பினார்கள். நையாண்டி பண்ணுவதனூடாக கொச்சைப்படுத்துவதே இதன் நோக்கமாக இருந்திருக்கிறது.

*******

போர்க் காலத்தில் எதிர்ரெதிர் தரப்பு வானொலிகள் 'எதிர் நிகழ்ச்சிகளை' தயாரித்து வழங்குவது வழக்கம். எதிரி ஒலிபரப்பும் நிகழ்ச்சிபோன்று போலியான நையாண்டித்தனமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி எதிரியைக் கொச்சைப்படுத்துவது இரண்டாம் உலகப் போர்க் காலத்தில் நடந்திருக்கிறது. இதனை உல்ரா பண்ணுவதென்று சொல்வார்கள். ஆனால் இலங்கையில் அரசு தனக்கெதிராக போராடிய இயக்கத்துக்கெதிராக உல்ரா நிகழ்ச்சிகளைத் தயாரித்து ஒலிபரப்பியது. அநாகரிகமான செயலாகவே பார்க்கப்பட வேண்டியது. அரசு பொறுப்புடன் செயற்படுவதற்கு கடப்பாடுடைய்தாகும். அது தவறிவிடப்பட்டுள்ளது. இங்கு கவனிக்க வேண்டிய விடயம் புலிகளின் குரல் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இவ்வாறான கேலியான பதில் நிகழ்ச்சிகளை ஒருபோதும் ஒலிபரப்பவில்லை என்பதுதான். அடிப்படை விழுமியம் பின்பற்றப்பட்டிருக்கிறது. இலங்கையின் போர்க்கால வானொலி அனுபவம் வித்தியாசமானதாக பதிவாகிறது. புலிகளின் நிகழ்ச்சிகளை போன்ற போலியான நையாண்டியான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பி மக்களிடம் அந்த ஒலிபரப்புக்கள் நன்மதிப்பை இழந்து தூரச்சென்றிருந்தன. மாறாகப் புலிகளின்குரல் மீதான நன்மதிப்பு அதிகரித்திருந்தது எனலாம்.

# தென்கிழக்கு திசையில் இருந்து....



அனார்கலி

## திசை மாறும் தொனி



அரச தலைவர் தேர்தலையடுத்து வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் வகையிலான மக்கள் சந்திப்புக்களை இந்த வாரம் அம்பாறை மாவட்ட முஸ்லிம் பிரதேசங்களில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நடத்தியது.

முஸ்லிம் காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் உட்பட கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பிரதேச தலைவர்கள் இந்தச் சந்திப்புக்களில் கலந்து கொண்டு உரையாற்றினர்.

தேர்தல் பரப்புரைகளில் பொதுமக்கள் முன்னணி வெற்றி பெற்றால் சிறுபான்மை சமூகங்கள் வாழ முடியாதெனவும் இனவாதம், மதவாதம் தலைதூக்கி கொடுங்கோல் ஆட்சியேற்படுமெனவும் திட்டித் தீர்த்து மக்களை உசுப்பேத்திய தலைவர் ஹக்கீம் குறித்த மக்கள் சந்திப்புகளில் தொனியை மாற்றிக் கொண்டதுடன் சகபாடிகளும் புதிய கோணத்தில் உரையாற்றினர்.

அரச தலைவர் கோத்தாவின் ஆரம்ப நடவடிக்கைகள் வரவேற்புக்குரியவை எனத் தெரிவித்த தலைவர் ஹக்கீம், சிறுபான்மை சமூகங்களையும் அரவணைத்து ஆட்சியை முன் கொண்டு செல்ல முன்வரவேண்டுமெனவும் கோரினார்.

இதேவேளை முன்னாள் தலைவர் அமைச்சர் ரணில் தொடர்பில் நகைப்புடனான கருத்துக்களையும் ஹக்கீம் வெளியிட்டார்.

கட்சிக்குள் பிரச்சினை வந்ததும் வடக்கு கிழக்கில் வேட்பாளர் சஜித்துக்கு வாக்குகள் கிடைக்க தாமே காரணமெனநாகூசாமல் ரணில் கூறுகிறார். இவர் தானா காரணம்? என நகைப்புடன் கேள்வி எழுப்பினார்.

**பல்டி, பல்டி இதுதான் அரசியலோ!**



கல்முனை, நற்பிட்டிமுனை ஸ்ரீ அம்பலத்தடி பிள்ளையார் ஆலயத்தில் முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் எம்.இராஜேஸ்வரன் தலைமையில் மாவீரர் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

## அதாவுல்லாவின் அடாவடி



தேசிய காங்கிரஸின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் தோட்டத் தொழிலாளர்களை இழிவுபடுத்தும் வகையில் கூறிய வார்த்தைப் பிரயோக விவகாரம் தென்கிழக்கின் தமிழ்ப் பிரதேசங்களில் மட்டுமன்றி முஸ்லிம் பிரதேசங்களிலும் சிலாகித்துப் பேசப்படும் நிலையைத் தோற்றுவித்துள்ளது.

அவரது கூற்று குறித்து தமிழ்ப் பிரதேசங்களில் அமைப்பு ரீதியாகவும் தனிப்படவும் கண்டனத்துக்குள்ளாகியிருக்கும் அதே வேளை முஸ்லிம் அமைப்புகள், முக்கியஸ்தர்கள், இளைஞர்களின் கண்டனத்துக்கு உள்ளாக்கியுள்ளது.

சிறுபான்மை சமூகங்கள் ஒன்றுபட்டு ஒருவருக்கொருவர் உறுதுணையாக நிற்க வேண்டிய முக்கிய காலகட்டத்திலுள்ள நிலையில் உழுத்துப் போன அரசியல்வாதிகளின் வார்த்தைப் பிரயோகங்கள் எம் சிறுபான்மை சமூகங்களிடையேயான நல்லிணக்கம் புரிந்துணர்வுகளுக்கு ஊறு விளைவிப்பதாக அமைவது கண்டனத்துக்குரியது என அம்பாறை மாவட்ட முஸ்லிம்கள் நலன் பேணும் அமைப்பு தெரிவித்துள்ளது.

## பாதீடு நிறைவேற்றம்

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் 2020ஆம் ஆண்டுக்கான பாதீடு வரவு- செலவுத் திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. சபையின் மாதாந்த அமர்வில் தவிசாளர் ஏ.எல்.அமானுவில்லாஹ், பாதீட்டை சபையில் சமர்பித்து அங்கீகாரத்துக்கு விட்டபோதே அது ஏகமனதாக நிறைவேறியது.

**மக்கள் சேவை கட்சி பேதம் மறப்போம்.**

## பொதுத்தேர்தலுக்கும்...

அரச தலைவர் தேர்தலின்போது ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு, பொதுமக்கள் முன்னணி கட்சியுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை எதிர்வரும் பொதுத் தேர்தலையும் மையப்படுத்தியதாகவே செய்யப்பட்டுள்ளதாக கூட்டமைப்பின் செயலர் நாயகமும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான எம்.ரி. ஹஸனலி தெரிவித்தார்.

முஸ்லிம்கள் தொடர்பிலான குறிப்பாக கிழக்கு முஸ்லிம்கள் தொடர்பிலான முக்கிய பதின்மூன்று அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து பொதுமக்கள் முன்னணியுடன் குறித்த ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

பொதுத் தேர்தலில் பொதுமக்கள் முன்னணியுடன் இணைந்து கிழக்கு மாகாணத்தின் மூன்று மாவட்டங்கள் உட்பட கொழும்பு, கண்டி, புத்தளம் மாவட்டங்களிலும் ஐக்கிய சமாதானக் கூட்டமைப்பு போட்டியிட உத்தேசித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

**பலே! பலே!! சரியான போட்டி தான்**

## பிரகடனம்

கல்முனைப் பிராந்தியத்தில் காலநிலை மாற்றத்தால் அடைமழை தொடர்ந்து வரும் நிலையில் கல்முனை மாநகர சபைப் பிரிவில் இடர் அவசரகால நிலை நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இயற்கை இடர் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளை முன்னெடுக்கும் பொருட்டு கல்முனை மாநகர சபைப் பிரிவில்குறித்தஅவசரகாலநிலைபிரகடனப்படுத்தப்பட்டுள்ளதாக மாநகர மேயர் மூத்த சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபையின் இடர் முகாமைத்துவ ஒழுங்கமைப்புக் கூட்டம் மேயர் றகீப் தலைமையில் நடைபெற்றபோது மேற்படி பிரகடனம் தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

**மாநகர மக்களைப் பாதுகாப்போம்**


## அடை மழையால் அவலம்

அம்பாறை, மட்டக்களப்பு மாவட்டங்களில் கால நிலை மாற்றத்தால் பெய்துவரும் அடை மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்படும் அவலம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சியான பெருமழை காரணமாகப் பல கிராமங்களின் தாழ்ந்த பிரதேசங்களில் மழை வெள்ளப் பாதிப்பு ஏற்பட்டுள்ளதுடன் அத்தியாவசியப் பொருள்களுக்கான தட்டுப்பாடும் விலை யேற்றமும் ஏற்பட்டுள்ளன.

இதேவேளை அம்பாறை மாவட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட பெரும்போக நெற்செய்கையின் இளம் நெற்பயிர்கள் மழை வெள்ளத்தில் மூழ்கி நாசமடையும் நிலையும் ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர்.

**ஓயாது பெய்யும் பெருமழை ஓயும் நாள் எப்போது?**




# பெண் பார்வை



■ நவீனா

இத்தாலியைச் சேர்ந்த மெய்யியலாளர், இலக்கிய விமர்சகர், எழுத்தாளருமான உம்பெர்த்தோ எக்கோ என்பவர் எழுதிய 'பௌடலினோ' என்கிற நாவலில் கிட்டத்தட்ட எழுபது வயதாகும் நாயகன் மீது, இருபது வயதுடைய வேற்றுக்கிரகப் பெண் காதல்வயப்பட்டுப் பல தடைகளுக்குப் பின்னர் அவனிடம் தனது காதலைச் சொல்லி, அவனை முதன் முதலாக முத்தமிடுவாள். வயது என்ற பதத்தின் அர்த்தம் தெரியாத அவள், நாயகனின் வயதைக் கேட்கும்போது, 'நான் இப்போதுதான் பிறந்திருக்கிறேன்' என்பான் அவன். நாவலின் இந்த வரிகளைக் கடந்துவரும்போது ஏற்படும் சிலிர்ப்பு, நாயகனின் வயதை மறக்கச்செய்துவிடுகிறது. 'ஆல்வ்பா ஆண்' எனும் சொல்லாடல் முதலில் மிருகங்களின் வேட்டைக் குழுத் தலைவனுக்கு வழங்கப்பட்டு, பின்னர் சமூகத்தில் தலைமைப் பண்பு மிக்க ஆணுக்கானதாய் மாறி, தற்காலத்தில் வயதில் மூத்த ஆளுமைத்திறன் கொண்டவர்களைக் குறிப்பதாகப் பொருள்கொண்டுவிட்டது. இன்று பெரும்பாலானவர்கள் சமூக வலைதளங்களில் ஆல்வ்பா ஆண்களைப் பற்றிப் புகழ்ந்து எழுதுவதாலும், திரைப்படங்களிலும் அவர்களைக் கொண்டாடும் விதமாகக் காட்சிகள் அமைக்கப்படுவதாலும் வயது முதிர்ந்த எவரையும் ஆல்வ்பா ஆண்களாக இளம் பெண்கள் சித்தரித்துக்கொள்ளும்படியான நிலை ஏற்பட்டுவிட்டது.

**அஸ்வினியின் நிலை?**

இப்படிப்பட்ட உளவியல் சிக்கல் ஒன்றில் மாட்டிக்கொண்ட அஸ்வினி, தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கல்லூரி வாசலில் தான் எதிர்கொண்ட ஐம்பது வயது மதிக்கத்தக்க ஓர் ஆண் மீது காதலில் விழுவதற்கு, ஆங்கில இலக்கியத்தில் அவள் வாசித்த ஜேன் ஆஸ்டின் நாவல்களும் ஒருவகையில் காரணம். அந்த நாவல்களில் விரவிவந்த காதலும் திருமணமும் மூத்த ஆணுக்கும் இளம்பெண்ணுக்கும் நிகழ்வதாக அமைந்துவிட, அவள் தினமும் பார்த்த அந்த நபரைத் தான் தேடிக்கொண்டிருந்த ஆல்வ்பா ஆணாக உருவகப்படுத்திக் கொண்டாள்.

திரைப்படங்களில்கூட மூத்த நாயகர்களுக்கும் இளம் பெண்களுக்குமான காதலையே அவள் சிலாகித்துப் பேசிவந்தாள். இத்தனைக்கும் அவள் நல்ல திறமைசாலி. வகுப்பில் கேட்கப்படும் கேள்விகள் அனைத்துக்கும் முதலில் அவள்தான் பதில்கூற வேண்டுமென்று நினைப்பாள். அழகான முகம், மெல்லிய தேகம், வகுப்பில் அமர்ந்திருக்கும்போது தரையில் படியவந்து விழும்படியான நீண்ட கூந்தல் எனப் பெண்களுக்கானதாய் ஊர் கூறும் இலட்சணங்கள் அனைத்தும் நிறைந்தவள். பழக ஆரம்பித்த சில நாள்களிலேயே இருவரும் இரகசியமாகத் திருமணத்தைப் பதிவுசெய்துகொண்டது இருபது வயதான அஸ்வினிக்கு ஆரம்பத்தில் சாதனையாகத் தெரிந்தது. எவரும் செய்யத் துணியாத காரியத்தைச் செய்துவிட்ட பெருமிதத்தோடு இருந்தவளுக்கு அந்த மகிழ்ச்சி சில நாள்கள்கூட நீடிக்கவில்லை. அந்த நபருக்கு ஏற்கெனவே திருமணமாகி மனைவியை விவாகரத்து செய்த நிலையில், இரு பெண் குழந்தைகள் இருப்பது பின்னர் தெரியவந்தபோது அஸ்வினிக்கு இடியிறங்கியதுபோல் இருந்தது.


உம்பெர்த்தோ

**ஆர்வக்கோளாறு வாழ்க்கையை பாழாக்கியது**

திருமண விடயத்தில் அவளுக்கிருந்த ஆர்வக்கோளாறு, அவள் வாழ்க்கையைப்புரட்டிப்போட்டுவிட்டது. மிகப்பெரிய தவறுசெய்துவிட்டதாய் உணர்ந்த அவள் முகத்தில் குற்றவுணர்வும் அப்பிக்கொண்டது. 'வயதில் மூத்தவர் என்னை அப்பா மாதிரி பாத்துப்பார்னு நினச்சுத்தான் அவரைக் கல்யாணம் செய்தேன். ஆனால், அவருடைய பிள்ளைகளை இனிமேல் நான் தான் அம்மா மாதிரிப் பாத்துக்கணும் என்று சொல்லுறார்' என்ற அஸ்வினிக்கு, இன்னொரு அதிர்ச்சியும் காத்திருந்தது. அவளது கணவனின் மூத்த மகள் அவள் பயிலும் அதே கல்லூரியில் இளங்கலை இறுதியாண்டு படித்துக்கொண்டிருக்கிறாள். அஸ்வினிக்குக் கூடுதல் மன அழுத்தம். 'அவளுக்கும் எனக்கும் ஒரே வயது. நான் எப்பிடி அவளை மகளாக நினைக்க முடியும்?' அந்தக் கேள்வி எழுவதற்கான சாத்தியம் ஏன் முன்பே அவளுக்கு வாய்க்கவில்லை?

*******

மேல்சட்டை அணியாமல், சேலையைக் கட்டி, முற்றிலும் உடல் வளைந்து முழுவதும் கூன் விழுந்த நிலையில், இரண்டு கைகளையும் தரையில் பதித்து, ஏறத்தாழ வீதிகளில் தவழ்ந்துவரும் மரியாயிப் பாட்டியை எனது கிராமத்து வீதிகளில் இன்றும் பார்க்கலாம். ஒருமுறை, 'ஏ பாட்டி, நீ என்ன ஊருக்குள்ள சட்டை போடாம செக்ஸியா சுத்திகிட்டுத் திரியிறய்?' என்று வம்பிழுக்க, தலையை மட்டும் தூக்கிப் பார்த்தபடி, 'அடியே, உன் தாத்தாவே போய்ச் சேர்ந்துட்டாரு, இனிச் சட்டை போட்டா ஊரு என்னைப் பார்த்துச் சிரிப்பா சிரிக்காது?' என்றார். 'நோ ப்றா டே' என்பது தமிழ்க் கலாச்சாரத்துக்குப் புதிதல்ல என்று நைச்சியமாகச் சொல்லிக்கொள்வதற்கு இங்கு நிறைய மரியாயி பாட்டிகள் இருக்கிறார்கள். மார்பகச் சீரமைப்பு அறுவைசிகிச்சை குறித்த விழிப்புணர்வு தினம் என்பதன் சுருக்கமே 'ப்றா' தினத்தின் நீட்சியாக ஒக்ரோபர் 13ஆம் நாள் மார்கச்சை அணியாத தினமாக அனுசரிக்கப்படுகிறது. இதன்படி, மார்கச்சை அணியாத தினமானது, இறுக்கமான ஆடைகளைத் தவிர்ப்பது மற்றும் மார்பகப் புற்றுநோய் குறித்த விழிப்பு ணர்வுப் பரப்புரை உத்தியாகவே மேலைநாடுகளில் கருதப்படுகிறது.

காலச் சுழற்சியில் வேண்டியதும் வேண்டாததாய்ப் போகும் என்பதற்கு ஏற்ப, மார்கச்சை அணிவது பெண்களுக்கு மறுக்கப்பட்ட உரிமை. சுமார் நான்கு நூற்றாண்டுகளாகத் தொடர்ந்த இந்த அடக்குமுறையை அழித்து எழுதிய தோள்சீலைப் போராட்டமும் இந்தியாவின் தமிழகத்தில் 37ஆண்டுகள் வரை நடந்தது. இதை வரலாற்றாசிரியர் சாமுவேல் மேற்றீர், குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்தவர்கள் அணிந்து வந்த 'மேல்முண்டு' எனும் மார்கச்சையை, அனைத்து இனத்தவரும் அணிவதற்கான உரிமைப் போராட்டம் என்கிறார். 'சீலை' என்பது பெண்கள் அணியக்கூடிய உடை வகைமைகளுக்குப் பொதுப் பெயராக வழங்கிவந்ததையும் சுட்டுகிறார்.

பெரும்பான்மையான சமூகங்களில் கணவனை இழந்த பெண்களின் தலைமுடியை மழித்து, அவர்கள் மேல் சட்டையும், மார்கச்சையும் அணிவதைத் தடை செய்திருந்தனர். இளம் கைம்பெண்களுக்குக்கூட இதிலிருந்து விதிவிலக்கில்லை. 1856ஆம் ஆண்டில் விதவைகள் மறுமணச் சட்டம் நடைமுறைக்கு வந்த பின்னரே கைம்பெண்கள் உடைரீதியாக ஒடுக்கப்படும் அபத்தங்கள் குறையத் தொடங்கின. முன்பு, எதன்பொருட்டு பெண்கள் உரிமை கோரினார்களோ, அதன் சிறப்புகளையே இப்போது மறுதலிக்கின்றனர். மார்கச்சை அணியா தினம் கொண்டாடும் அதேவேளையில், கட்டாயம் மார்கச்சை அணிய வேண்டிய தருணங்களையும் தெரிந்துவைத்திருப்பது அவசியம். பெண்கள் உடற்பயிற்சியில் ஈடுபடும்போது மார்பகங்களில் காயம் ஏற்படாமல் பாதுகாக்கவும், குழந்தைகளுக்குப் பாலூட்டும் காலங்களில் பால்கட்டு மற்றும் பால் வெளியேறி வீணாவதைத் தடுப்பதற்காகவும் கட்டாயம் மார்கச்சை அணிய அறிவுறுத்தப்படுகின்றனர்.

பெரும் போராட்டப் பின்னணியிலிருந்து வந்த மார்கச்சை இன்று வெறும் அழகு சாதனப் பொருளாகச் சுருங்கிவிட்டமை வேதனைதான். சௌகரியம், பயன்பாடு, உடலமைப்பு சார்ந்த வகைகளைவிட மூச்சுமுட்ட வைக்கும் மார்கச்சைகளையே இன்றைய தலைமுறையினர் அதிகம் பயன்படுத்துகின்றனர்.

மேலும், இத்தகைய தினங்களைக் கொண்டாடுவது சார்ந்த புரிதல்களும் பெரும்பாலானவர்களிடம் இல்லாததால், அந்தத் தினங்களின் குறிக்கோள்களும் திசைதிருப்பப்படுகின்றன. தவறு எங்கு நிகழ்கிறது என்கிற தெளிவுதான் இப்போது பெண்களுக்கு அவசியம். அந்தத் தெளிவு சார்ந்து இத்தகைய தினங்கள் கொண்டாடப்படும்போதுதான் அதன் நோக்கங்களும் வெற்றியடையும். ■

# தி வ்ஸாங் றிடெம்ன்



பிரபல எழுத்தாளரான ஸ்ரீபன் கிங் என்பவர் எழுதிய 'றிற்ற ஹெய்வோர்த் அன்ட் ஷவ் ஸாங் றிடெம்ஷன்' என்ற நாவலை அடிப்படையாகக் கொண்டு எடுக்கப்பட்டது 'தி ஷவ்ஸாங் றிடெம்ஷன்' என்ற திரைப்படம். இதை இயக்கியவர் வ்ப்ராங்க் டெரபாண்ட். இதுவரை உலகம் முழுவதும் வெளியான படங்களில் அதிக முறை பார்க்கப்பட்ட படம் இது. வெளியானவுடன் தோல்விப் படமாக அறிவிக்கப்பட்டது. படத்தில் நாயகி இல்லாதது, சிறையைச் சுற்றி மட்டுமே நடக்கும் திரைக்கதை, வாயில் நுழையாத பெயர் என்று தோல்விக்கான பல காரணங்களை பத்திரிகைகள் எழுதின. ஆனால் அடுத்த ஆண்டே அதாவது 1995 ஆம் ஆண்டில் அதிக பிரதிகள் விற்பனையான ஒரே திரைப்படமாக ம்றிப்போனது. பார்த்தவர்கள் திரும்பத் திரும்பப் பார்த்தார்கள். அதற்கு முன்பு வரை சிறந்த படமாகக் கொண்டாடப்பட்டு வந்த 'தி கோட் பாதர்' படத்தை பின்னுக்குத் தள்ளி இன்று வரை தலை சிறந்த உலக சினிமாக்களில் ஒன்றாகக் கொண்டாடப்பட்டு வருகிறது.

**கதை**

தனது மனைவியையும் மனைவியுடன் தொடர்பிலிருந்த நபரையும் கொன்றதாக வங்கி ஊழியரான ஆண்டி டுவ்ப்ரேனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படுகிறது. அவர் ஷஷாங்க் சிறையில் அடைக்கப்படுகிறார். தனது 20 வருடங்களை அந்தச் சிறைக்குள் கழித்து விடுதலைக்காகக் காத்திருக்கும் றெட் என்பவர் ஆன்டிக்கு நண்பனாகிறார். சிறைக்கு வெளியேயுள்ள அனைத்து விதமான பொருள்களையும் றெட்டால் சிறைக்கு உள்ளே கொண்டு வரமுடியும். அது சிகரெட், பீர், பிராந்தி உட்பட எதுவாக இருந்தாலும் சரி. தனக்கு ஒரு 6 அல்லது 7 இன்ச் நீளமுள்ள ஒரு சிறிய சுத்தியல் வேண்டுமென றெட்டிடம் ஆன்டி சொல்கிறார். மாட்டிக்கொண்டால் என்னைப் பற்றி எதையும் சொல்லிவிடக்கூடாது என்ற நிபந்தனையுடன் அதற்கு ஒப்புக் கொள்கிறார் றெட்.

**2 ஆண்டுகள் கழிந்தன.**

சிறைக்கு அருகில் இருக்கும் ஒரு தொழிற்சாலையின் மேற்கூரையைச் சரிசெய்யும் பணிக்கு ஆன்டி, றெட் உள்ளிட்ட சில கைதிகள் தெரிவுசெய்யப்படுகிறார்கள். இறந்துபோன தனது தம்பி விட்டுச் சென்ற 35ஆயிரம் டொலர்களைச் செலவு செய்வதில் உள்ள சிக்கல்களைப் பற்றி அப்போது தனது சக காவலர்களிடம் பேசிக் கொண்டிருக்கிறார் தலைமைக் காவலர் ஒருவர். அதைத் தூரத்திலிருந்து கேட்கும் ஆன்டி அவரிடம் சென்று எந்த வரியும் செலுத்தாமல் அந்த டொலர்களை செலவு செய்ய முடியும் என்று அதற்கான வழிகளைக் கூறுகிறார். அதற்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வதற்குத் தான் உதவுவதாகவும் அதற்குப் பதிலாகத் தன்னோடு பணிபுரியும் சக கைதிகளுக்கு ஆளுக்கு 3 பீர் போத்தல்கள் வாங்கித்தர வேண்டும் என்றும் கேட்கிறார். அடுத்த காட்சியில் கைதிகள் அனைவரும் தொழிற்சாலையின் மொட்டைமாடியில் சூரிய ஒளியில் அமர்ந்து பீர் குடித்துக் கொண்டிருக்கின்றனர்.

* * * * * * *

ஒருநாள் இரவு கைதிகள் அனைவரும் சிறையில் திரைப்படம் ஒன்றைப் பார்த்துக் கொண்டிருக்கும்போது ஆன்டி தனது அறையில் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறார். திடீரென்று ஏதோ யோசனை வந்தவராகப் படம் பார்த்துக் கொண்டிருக்கும் றெட்டிடம் சென்று தனக்கு 40களில் மிகப்பிரபலாக இருந்த நடிகையான ரீட்டா ஹேவொர்த்தின் போஸ்டர் ஒன்று வேண்டும் எனக் கூறுகிறார். கைதிகளின் அறைகளில் ஆய்வு நடத்தப்படுகிறது. சிறை அதிகாரி நார்டன் தலைமையில் காவலர்கள் எல்லா அறைகளையும் சோதனை செய்கின்றனர். அவ்வாறு சோதனை செய்யும்போது ஆன்டியின் கையில் பைபிள் இருப்பதைக் கவனிக்கும் நார்டனுக்கு ஆன்டியின் மீது நல்ல அபிப்ராயம் ஏற்படுகிறது. அவரது அறையில் ஒட்டப்பட்டிருக்கும் ரீட்டா ஹேவொர்த்



போஸ்டருக்கு அனுமதி அளிக்கிறார். சிறையில் நூலகராக இருக்கும் முதியவர் ப்ரூக்ஸுக்கு உதவியாளராக ஆன்டி நியமிக்கப்படுகிறார். இது தவிர சிறை அதிகாரிகளுக்கு வங்கிக் கடன் சிக்கல்களுக்கு உதவுவது, வருமான வரிக்கான விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்வது உள்ளிட்ட வேலைகளையும் செய்து அதிகாரிகள் மத்தியில் நல்ல பெயரையும் சம்பாதிக்கிறார். சிறை நூலகத்தைச் செப்பனிட நிதி வேண்டி அரசுக்கு நார்டானின் அனுமதியுடன் தொடர்ந்து கடிதங்கள் எழுதுகிறார். நார்டன் உட்பட அனைத்து சிறை அதிகாரிகளுக்கும் வரி சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆன்டி ஆலோசனை கூறுகிறார். கிட்டத்தட்ட அங்கு ஒரு சிறை ஊழியராகவே ஆகிறார் ஆன்டி.

* * * * * * *

சிறையில் நூலகராக இருந்த ப்ரூக்ஸ் 50 ஆண்டுகள் கழித்துவிட்டதால் விடுதலையாகிறார். சிறைக்கு வரும்போது ஓரிரண்டு மகிழுந்துகளை மட்டுமே வீதியில் பார்த்தவருக்கு ஒரே நேரத்தில் பல மகிழுந்துகளைப் பார்ப்பது விநோதமாக இருக்கிறது. அரசு ஏற்பாடு செய்திருந்த ஒரு பலசரக்குக் கடைக்கு வேலைக்குச் செல்கிறார். இரவுகளில் தூங்க முடியாமல் கஸ்ரப்படுகிறார். ஒருகட்டத்தில் தாக்குப் பிடிக்க முடியாத சக கைதிகளுக்குக் கடிதம் எழுதி வைத்து விட்டு தூக்கிட்டு உயிர்மாய்த்துக் கொள்கிறார்.

* * * * * * *

ஆன்டியின் தொடர் கடிதங்களுக்குப் பதிலளிக்கும் அரசு சிறை நூலகத் துக்காகச் சிறிது தொகைப் பணமும் சில பொருள்களையும் அனுப்பி வைக்கிறது. அதில் மொசார்ட்டின் 'மேரேஜ் ஆவ்ப் பிகாரா' இசைத்தட்டு ஒன்றும் வருகிறது. அதை எடுத்துக் கொண்டு சிறைக் கைதிகளுக்கு அறிவிப்புச் செய்யும் இடத்துக்கு செல்லும் ஆன்டி அந்த இசைத்தட்டை ஒலிக்க விடுகிறார். சிறை முழுதும் மொசார்ட்டின் இசையால் நிரம்புகிறது. கோபமடையும் சிறை அதிகாரி நார்டன் இரண்டு வாரங்களுக்கு ஆன்டியை இருட்டு அறையில் அடைக்கிறார்.

* * * * * * *

நாள்கள் உருண்டோடுகின்றன. சிறைக்கு வெளியே நடக்கும் அரச பொதுப்பணித்துறைப் பணிகளுக்காகக் கைதிகளை வெளியே அனுப்பி வேலை செய்வித்து அதன் மூலம் ஒரு பெரும் தொகையை ஒப்பந்ததாரர்களிடமிருந்து இலஞ்சமாகப் பெற்று வருகிறார் நார்டன். அந்தத் தொகையை ராண்டல் ஸ்ரீபன் என்ற இல்லாத ஒரு நபருக்கு அனுப்பி வரி ஏய்ப்புச் செய்கிறார். இதற்கு ஆன்டியை பயன்படுத்திக் கொள்கிறார்.

**1965ஆம் ஆண்டு**

ஷஷாங்க் சிறைக்கு அழைத்து வரப்படும் டாமி வில்லியம்ஸ் என்ற இளைஞன் றெட் மற்றும் ஆன்டிக்கு நண்பனாகிறான். அவனது மேற்படிப்புக்கு ஆன்டி உதவுகிறார். இதற்கு முன்னர் தன்னோடு வேறு சிறையிலிருந்த சக கைதி ஒருவனைப் பற்றியும் அவன் ஒரு வங்கி ஊழியரின் மனைவியையும் அவரது காதலனையும் கொன்றதைப் பற்றி தன்னிடம் கூறியதாக ஆன்டியிடம் கூறுகிறான். அதிர்ச்சியின் உச்சிக்குச் செல்லும் ஆன்டி நேராக நார்டனிடம் சென்று முறையிடுகிறார். அதை நம்ப மறுக்கும் நார்டன், ஆன்டியை ஒரு மாத காலம் இருட்டு அறையில் அடைக்குமாறு காவலர்களுக்கு உத்தரவிடுகிறார். ஆன்டி நிரபராதி என்பதற்கு ஒரே சாட்சியான டாமி வில்லியம்ஸையும் சிறைக்கு வெளியே அழைத்துக் கொல்கிறார்.

ஒருமாதம் கழித்து இருட்டு அறையிலிருந்து வெளியே வரும் ஆன்டி, றெட்டிடம் ஓர் இடத்தின் பெயரைச் சொல்லி இங்கிருந்து விடுதலையானால் அந்த இடத்துக்குச் செல்லுமாறும் அங்கு அவருக்காக ஒரு விடயம் புதைக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறுகிறார். அங்கு என்ன புதைக்கப்பட்டிருக்கிறது என்று கேட்கும் றெட்டிடம் எதுவும் கூறாமல் சென்று விடுகிறார் ஆன்டி. மறுநாள் காலையில் காவலர்களுக்கு அதிர்ச்சி. சிறையிலிருந்த ஆன்டியைக் காணவில்லை. சிறை அறையில் நின்று ஆவேசமாகக் கத்திக் கொண்டிருக்கும் நார்டன் சிறிய கல்லை எடுத்து கோபத்தில் ரீட்டா ஹேவொர்த்தின் போஸ்டர் மீது வீசுகிறார். அது போஸ்டரைத் துளைத்துக் கொண்டு உள்ளே செல்கிறது. திகைத்துப் போகும் நார்டன் போஸ்டரைக் கிழித்துப் பார்க்கிறார். போஸ்டருக்குப் பின்னால் சுவரில் ஆள் நுழையும் அளவுக்கு மிகப்பெரிய துளை இருக்கிறது. நார்டனின் பாதணி மற்றும் உடைகள், வங்கிக் கணக்கு ஆவணங்கள் அனைத்தையும் எடுத்துக்கொண்டு 19 ஆண்டுகளாகச் சிறிது சிறிதாக போடப்பட்ட அந்த துளையின் வழியே தப்பித்துச் சென்றிருக்கிறார் ஆண்டி.

வெளியே சென்ற ஆன்டி, நார்டன் பணம் அனுப்பிய வங்கிகளுக்குச் சென்று ராண்டல் ஸ்டீபன் என்ற பெயரில் பணத்தை எடுத்துக் கொள்கிறார். நார்டன் பண மோசடி செய்ததற்கான ஆதாரங்களை அரசுக்கும், பத்திரிகைகளுக்கும், அனுப்பி வைக்கிறார். நார்டனைத் தேடிப் பொலிஸார் வருகின்றனர். தான் அவமானப்படுவதை விரும்பாத நார்டன் துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டு இறந்து போகிறார்.

40 ஆண்டு தண்டனைக் காலம் முடிந்து விடுதலையாகும் றெட், ஆன்டி கூறிய இடத்துக்குச் சென்று தோண்டிப் பார்க்கிறார். அங்கே ஆன்டியால் எழுதப்பட்ட ஒரு கடிதமும், சிறிதளவு பணமும் இருக்கிறது. கடிதத்தில் குறிப்பிடப்பட்ட இடத்துக்கு செல்லும் றெட் ஆண்டியோடு நண்பனோடு இணைகிறார்.

**பாத்திரங்கள்**

ஆன்டியாக டிம் ராபின்ஸும், றெட் ஆக மோர்கன் வ்ப்ரீமேனும் நடிப்பில் உச்சம் தொட்டிருக்கிறார்கள். மோர்கன் வ்ப்ரீமேனின் பார்வையில்தான் முழுக் கதையும் சொல்லப்படுகிறது. படத்தின் ஒவ்வொரு வசனமும் இன்றளவும் சமூக வலைதளங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருப்பவை. அதிலும் இறுதிக் காட்சிக்கு முன்பான காட்சியில் றெட்டிடம் ஆன்டி பேசும் வசனங்கள் காலத்தால் அழியாதவை. ப்ரூக்ஸ், றெட், நார்டன், டாமி என படத்தில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும் ஒரு சிறு கதை போன்றவை. ஆர்ப்பாட்டமில்லாத மனதை வருடும் இசை, நாமும் சிறையிலேயே இருப்பது போன்ற ஒளிப்பதிவு, நடிகர்களின் அற்புதமான நடிப்பு, சண்டைக் காட்சி ஒன்று கூட இல்லையென்றாலும் விறுவிறுப்பாக எழுதப்பட்ட திரைக்கதை, இவை அனைத்தும் படத்துக்கு மிகப்பெரும் பலமாக அமைந்தன.




# கே.டி



**கதை**

மூப்பின் உச்சத்தால் படுத்த படுக்கையாக இருக்கிறார் கறுப்பு துரை. அவரைப் பராமரிப்பது ஒருகட்டத்தில் வீட்டில் உள்ளவர்களுக்கு சுமையாகத் தோன்ற, அவருக்கு நன்றாக எண்ணெய் தேய்த்துக் முழுக வைத்துப் பின்னர் 10க்கும் மேற்பட்ட இளநீரைக் குடிக்க வைப்பதற்கு முற்படுகின்றனர். இதன் மூலம் சாவின் விளிம்பில் உள்ள அவர் இறந்துவிடுவார் என்று முடிவெடுக்கின்றனர். அந்த நேரத்தில் கறுப்பு துரை விழித்து விடுகிறார். சொந்தங்களின் முடிவைக் கண்டு மனம் வெதும்பி வீட்டைவிட்டு யாருக்கும் தெரியாமல் வெளியேறுகிறார். எங்கு போவது என்று தெரியாமல் தவிப்பவருக்கு, பிறந்தவுடனேயே கோயிலில் தூக்கி வீசப்பட்டு, அங்கேயே வளர்ந்துவரும் குட்டி என்ற சிறுவனின் நட்பு கிடைக்கிறது. இருவருக்கும் இடையிலான நட்பு எப்படிப் பயணிக்கிறது? கறுப்பு துரையின் குடும்பத்தினர் அவரைக் கண்டுபிடித்தார்களா? என்பது மீதிக்கதை.



**பாத்திரங்கள்**

கறுப்பு துரைதான் படத்தின் நாயகன். அவரைச் சுற்றித்தான் முழுக்கதையும் நகர்கிறது. கறுப்பு துரையாக பேராசிரியர் மு. இராமசாமி. 'மருது', 'சண்டக்கோழி', 'ஜோக்கர்' உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட படங்களில் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்தவருக்கு, முதன்முதலாக முதன்மை வேடம். இவரை விட்டால் இந்தக் கதாபாத்திரத்துக்கு வேறு யாரும் பொருத்தமாக இருக்க மாட்டார்கள் என இயக்குநர் நினைத்ததை உண்மையாக்கி இருக்கிறார் மு. இராமசாமி. பிள்ளைகள் தன்னைக் கருணைக்கொலை செய்ய நினைத்ததை எண்ணிக் கலங்குவதாகட்டும், தன்னுடைய ஆசைகள் நிறைவேறும்போது சின்னக் குழந்தை போல் மகிழ்ச்சியில் துள்ளிக் குதிப்பதாகட்டும், குட்டி தன்னைவிட்டுப் பிரி யப்போவதை நினைத்து அழுவதாகட்டும்... எல்லா இடங்களிலுமே நடிப்பில் அசத்துகிறார். சின்ன வயதிலேயே பெரிய மனிதரின் பக்குவத்தோடு குட்டி கதாபாத்திரத்தில் நடித்துள்ளார் நாகவிஷால். படத்தில் நடிக்கிறோம் என்ற உணர்வே இல்லாமல், வெகு இயல்பாக, அந்த வயதுக்கே உரிய துடுக்குத்தனங்க ளோடு தனது கதாபாத்திரத்தை வெளிப்படுத்தியுள்ளார். சிறு வயதிலேயே இறப்பைக்கூட இயல்பாக அணுகும் பக்குவத்தில் மிளிர்கிறார். வயதானவரின் ஆசைகளைத் தெரிந்துகொண்டு, அதை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வைக்கும் 8 வயது சிறுவனின் அன்பு மெய் சிலிர்க்க வைக்கிறது. காணாமல் போன கறுப்பு துரையைக் கண்டுபிடிக்கும் யோக் ஜேபியின் கதாபாத்திரத்தை அறிமுகப்படுத்தும்போது, அதற்கு அதிக முக்கியத்து வம் கொடுக்கின்றனர். ஆனால், எல்லோரையும் போல் சாதாரணமாகவே அவரும் தேடுகிறார். அதைத் தவிர்த்திருக்கலாம்.

**இசை, ஒளிப்பதிவு, காட்சித்தொகுப்பு**

கார்த்திகேயா மூர்த்தியின் இசையில், பாடல் முணுமுணுக்க வைக்கிறது. பின்னணி இசை, படத்துக்குச் ஸ்ருதி சேர்க்கிறது. மெய்யேந்திரன் கெம்புராஜ் ஒளிப்பதிவு, இந்தியாவின் நெல்லை மாவட்டத்தின் அழகை வெளிப்படுத்துகிறது.

**பலம்**

படத்தின் மிகப்பெரிய பலம், யதார்த்தம். ஒன்றிரண்டு இடங்களைத் தவிர சினிமாத்தனமில்லாத இயல்பான காட்சிகள், படத்துடன் பார்வையாளர்களை ஒன்றச் செய்கின்றன. யாருக்கும் பெரிதாக அறிமுகமில்லாத நடிகர்களின் தெரிவும் அதற்குத் துணை செய்கிறது. கறுப்பு துரையின் ஆசைகள் நிறைவேறும் பகுதிகள், குட்டியின் துடுக்குகள், காதலியைத் தேடி கறுப்பு துரை செல்வது... என படம் முழுவதும் ஹைக்கூ தொகுப்பைப் போல காட்சியளிக்கிறது. போரடிக்காமல், ஒரே மூச்சில் வாசித்து விடுகிற நாவலின் திருப்தியைத் தருகிறது படம்.



# சங்கத்தமிழன்

**கதை**

மருந்தமங்கலம் என்கிற கிராமத்தில் தாமிர உருக்கு ஆலை அமைப்பதற்காகத் துடிக்கிறது ஒரு நிறுவனம். அதனால் வரப்போகும் சூழல் மாசுபாட்டைக் கவனத்தில் கொண்டு அந்த ஆலையை அங்கு கட்டக் கூடாது என்று ஊர் மக்கள் வழக்குத் தொடுக்கின்றனர். இதற்கிடையே சென்னையில் சினிமாவில் நடிக்க முயன்றுவரும் முருகனுக்கும் (விஜய் சேதுபதி) உருக்கு ஆலைத் தலைவரின் மகளான கமாலினிக்கும் (ராஷி கன்னா) காதல் மலர்கிறது. மகளின் காதலனை நேரில் பார்க்கும் உருக்கு ஆலையின் தலைவர் அதிபர், "அது முருகன் அல்ல தமிழ்" என்று அலறுகிறார். அவர்கள் யார், உருக்கு ஆலை தொடங்கப்பட்டதா, இல்லையா என்பது போன்ற கேள்விகளுக்கு விடை தருகிறது மீதிக்கதை.

**பாத்திரங்கள்**

படம் முழுதும் சிறிதும் நம்பகத் தன்மை இல்லாமல் ஏராளமான பின்னடைவுகள். 'முருகனும், சங்கத்தமிழனும் ஒருவரே' என்று சின்னப்பிள்ளைகூட ஊகித்துக் கண்டுபிடித்துவிடக்கூடிய அளவுக்கு அந்த இரண்டு பாத்திரங்களும் பலவீனமாகக் காட்டமைக்கப்பட்டிருக்கின்ற. ஒன்றுக்கு இரண்டு நாயகிகள் இருந்தும், படத்தில் இரசிக்கத்தக்க காதல் காட்சிகளுக்கும் பஞ்சம்தான். நகரத்தில் ராஷி கன்னா உடனான காதலை ஒப்பிடும்போது, கிராமத்தில் நிவேதா பெத்துராஜ் உடனான காதல் தேறுகிறது. முருகன், தமிழ் என்னும் இரண்டு தோற்றங்களில் வருகிறார் விஜய் சேதுபதி. வழக்கம்போல, இதிலும் பேசிக்கொண்டே இருக்கிறார்.

விஜய் சேதுபதி எத்தனை முறை தனது கண்ணாடியைக் கழற்றி எறிகிறார் என்று போட்டியே வைக்கலாம். நகைச்சுவை செய்கிறேன் பேர்வழி எனச் சூரியுடன் அவர் சேர்ந்து செய்யும் அலப் பறைகள் சில இடங்களில் இலேசான சிரிப்பையும், பல இடங்களில் கடுப்பையும் ஏற்படுத்துகின்றன.

**ஒளிப்பதிவு, இசை**

வேல்ராஜ் ஒளிப்பதிவு கிராமத்தின் பசுமையைக் கண்ணுக்கு அழகாகக் காட்டுகிறது. இசை என்னும் பெயரில் விவேக் மெர்வின் ஆகியோர் பயமுறுத்தியுள்ளனர். அவ்வளவு சத்தம். முதல் காட்சியில் நுழைவது போல, படம் முழுவதுமே விஜய் சேதுபதி நுழைவது அபத்தம்.

**பலம் பலவீனம்**

சுற்றுச்சூழலுக்கும், மனிதர்களுக்கும் தீங்கு விளைவிக்கும் உருக்கு ஆலை பற்றிய விடயத்தை நகைச்சுவை கலந்து சொல்ல முயன்றிருக்கிறார் இயக்குநர் விஜய் சந்தர்.

படத்தின் முதல் பாதியில் அங்கொன்றும் இங்கொன்றுமாக என்னவெல்லாமோ நடைபெறுகிறது. அதற்கான காரணங்களை எல்லாம் படத்தின் பின்பாதியில் அறிய முடிகிறது.

விஜய்சேது பதியின் பங்கு இருந்தால் போதும்.. திரைக்கதை தேவையில்லை என்று இயக்குநர் நினைத்துவிட்டார் போல. கொட்டாவிகளைத் தவிர்க்க முடியவில்லை. முருகனை, தமிழாக ஆள்மாற்றி மருதமங்கலத்துக்கு அனுப்பி வைக்கிறார் வில்லன் சஞ்சய். ஆனால், தமிழ் போல முருகன் நடிப்பதாக ஒரு காட்சியைக்கூடக் காட்டாமல் இயக்குநர் ஏமாற்றுகிறார்.

வில்லன் மருதமங்கலத்துக்குத் தமிழை அனுப்பி வைக்கும்வரை அவர் ஏன் காத்திருக்க வேண்டும் என்ற கேள்விக்கு விடை இல்லை. சென்னையில் முருகனாக விஜய் சேதுபதி ஏன் நடிக்கிறார் என்பதற்கும் வலுவான காரணம் இல்லை.

விஜய் சேதுபதி, தமிழாக இருக்கும்போது, தேர்தலில் வென்று வந்ததும் கொல்லப்படுகிறார் நாசர். இடையில் விஜய் சேதுபதி முருகனாக நடித்து, பிறகு மீண்டும் மருதமங்கலத்துக்கு வந்து சங்கத்தமிழனாக நடிக்கும்வரை அந்த ஊரில் இடைத்தேர்தலே நடக்காமல் இருக்கிறது.

நிஜக் கதைக்கும் நிழல் கதைக்குமான காலத்தைச் சொல்லாமல் இருப்பது திரைக்கதையின் பெரும் ஓட்டைகளில் ஒன்று.

சமூகத்தை பாதிக்கும் தீவிரமான பிரச்சினையை அழுத்தமாக சுட்டிக் காட்ட வேண்டிய படம், மிதப்பும் மேம்போக்குமான சித்திரிப்பு காரணமாகச் மாபெரும் சொதப்பலாகியிருக்கிறது.


# ஃப்ரோஸன் 2



**கதை**

'நார்தல்ட்ரா' எனப்படும் மந்திர சக்திகள் நிரம்பிய ஒரு காட்டைப் பற்றிய கதையைக் குழந்தைகளாக இருக்கும் அன்னா மற்றும் எல்சாவிடம் அவர்களின் தந்தையும் அரெண்டெல் நகர அரசருமான அக்னார் சொல்கிறார். அந்தக் காட்டுக்கும் அரெண்டெல் நகரத்துக்கும் இருந்த நெருங்கிய நட்புப் பற்றியும், அந்தக் காட்டில் வசித்த மக்களுக்காக அக்னாரின் தந்தை கட்டிக்கொடுத்த பிரம்மாண்ட அணையைப் பற்றியும், பின்னர் அவர்களுக்குள் ஏற்பட்ட சண்டையால் 'நார்தல்ட்ரா' காடு மர்மப் புகையால் சூழப்பட்டிருப்பதாகவும் சொல்கிறார். அன்னா மற்றும் எல்சா இருவரும் பெரியவர்களாக வளர்கிறார்கள். எல்சாவுக்கு மர்மக்குரல் ஒன்று தொடர்ந்து கேட்டுக் கொண்டிருக்கிறது. அந்தக் குரலுக்குப் பதிலளிக்க முயலும் எல்சா, எதேச்சையாகப் பஞ்ச பூதங்களை எழுப்பி விடுகிறாள். அவை ஒன்று சேர்ந்து அங்கிருக்கும் மக்கள் அனைவரையும் வெளியேற்றுவதற்கான முயற்சியில் இறங்குகின்றன.

அன்னா, எல்சா, பனிமனிதன் ஒலாவ்ப், கிரிஸ்டாவ்ப், ஆகிய நால்வரும் இந்த இயற்கைச் சீற்றங்களைச் சரிசெய்வதற்காக அந்த மர்மக் குரலைப்பின்தொடர்ந்து செல்கின்றனர். நால்வரும் மர்மக் குரல் வரும் இடத்தைக் கண்டுபிடித்தார்களா? அந்தக் குரலுக்கும் படத்தின் ஆரம்பத்தின் அரசர் சொன்ன கதைக்கும் என்ன தொடர்பு? ஐம்பூதங்கள் கட்டுக்குள் கொண்டுவரப்பட்டனவா? என்பதே படத்தின் மீதிக் கதை.




**தொடர்ச்சிப் பாகம்**

'வ்ப்ரோஸன்' முதல் பாகத்துக்குப் பிறகு 6 ஆண்டுகள் கழித்து 'வ்ப்ரோஸன் 2' கதை தொடங்குகிறது. டிஸ்னி கலையகத்தின் படங்களில் இடம்பெறும் தத்ரூபமான அனிமேஷன், முதல் பாகத்தில் இருந்ததற்கும் இந்தப் படத்துக்கும் இடையிலான ஆண்டுகளைக் கணக்கிட்டு கதாபாத்திரங்களின் முகங்களில் தெரியும் முதிர்வு, இசை, பாடல்கள், வசனங்கள் என அனைத்தும் தரம். ஆனால், முதல் பாகத்தில் இருந்த விறுவிறுப்பான திரைக்கதை இதில் இல்லை. அனிமேஷன், இசை, மற்றைய தொழில்நுட்ப விடயங்களில் கவனம் செலுத்திவிட்டுத் திரைக்கதையை மிகவும் மேம்போக்காக அமைத்ததால் பல காட்சிகள் மனதில் ஒட்டாமல் செல்கின்றன. முதல் பாகத்தின் பலமே அதில் இருந்த உணர்வு பூர்வமான காட்சிகள்தான். அதுபோன்ற ஒரு காட்சி கூட இதில் இல்லாதது படத்தின் பெரிய பலவீனம்.

பனிமனிதன் ஓலாவ்ப் வரும் காட்சிகள் ரசிக்கும்படியாக இருந்தன. நகைச்சுவை வசனங்களுக்கும், முதல் பாகத்தின் கதையை சுருக்கமாக ஓலாவ்ப் சொல்லும் காட்சியிலும் நகைச்சுவை படர்கிறது. முதல் பாகத்தில் இருந்த இறுதிக் காட்சி போன்றே இதிலும் இருந்தாலும் அதில் இருந்த பரபரப்போ விறுவிறுப்போ இதில் இல்லை. பாடல்கள் கேட்பதற்கு நன்றாகவே இருந்தாலும் அவை நிமிடத்திற்கு ஒன்று வருவது இரசிக்கும்படியாக இல்லை.

# தி ஏரோநாட்ஸ்




19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வெப்பக் காற்று நிரப்பப்பட்ட பலூன்களை மையமாகக் கொண்டு நடைபெற்ற வானியல் ஆராய்ச்சிகள், அதையொட்டிய சாகசங்கள் அதிகமாகப் பதிவாகின. அதையொட்டிய கதை ஒன்றைத் திரைமொழியில் சொல்ல வருகிறது 'தி ஏரோநாட்ஸ்' திரைப்படம்.

**கதை**

பிரிட்டனைச் சேர்ந்த வானியல் ஆய்வாளர்கள் இரண்டு பேர் வெப்பக் காற்று நிரப்பப்பட்ட பலூனில் உயரேப் பறந்து பல்வேறு ஆராய்ச்சிகளை மேற்கொண்டனர். 1862ஆம் ஆண்டில் அவர்கள் மேற்கொண்ட வெப்பக்காற்று பலூன் சாகசப் பறத்தலில், சுமார் 39ஆயிரம் அடி உயரத்தை எட்டினர். இதே போன்று பிரெஞ்சு மண்ணில் பெண் ஆய்வாளர் ஒருவர் தீரம் மிக்க வானியல் ஆய்வுக்காகத் தனது உயிரைப் பறிகொடுத்தார். இந்த இரண்டு உண்மைச் சாகச சம்பவங்களையும் புனைவின் பின்னணியில் பிணைத்து இந்தத் திரைப்படம் உருவாகி உள்ளது. பிரிட்டன் சாகசத்தில் இரண்டு ஆண்கள் மட்டுமே ஈடுபட்டனர். அதில் ஓர் ஆணின் இடத்தைப் பிரெஞ்சு பெண் ஆய்வாளரின் பாதிப்பிலான கற்பனைக் கதாபாத்திரத்தைப் புகுத்தி 'தி ஏரோநாட்ஸ்' படமாகி உள்ளது.



**பாத்திரங்கள்**

வெப்பக்காற்று நிரப்பப்பட்ட பலூன்களில் பறந்து, கண்டறிந்து சொன்ன வானியல் ஆய்வு உண்மைகள், அதன் பின்னரான அறிவியல் ஆராய்ச்சிகள், வானூர்திக் கட்டமைத்தலில் பெரிதும் உதவின. வானியல் ஆய்வாளர் ஜேம்ஸ் கிளைசர் வேடத்தில் எட்டி ரெட்மெய்ன், அவருடன் பயணிக்கும் பெண் விமானியாக வ்பெலிசிடி ஜோன்ஸ் ஆகியோர் நடித்துள்ளனர்.

ஹிமேஷ் படேல், ரெபேகா வ்பிரண்ட் உள்ளிட்டோர் உடன் நடித்துள்ளனர். கதை, திரைக்கதை, தயாரிப்பில் இணைந்ததுடன், திரைப்படத்தை இயக்கியும் உள்ளார் டாம் ஹார்பர். பன்னாட்டுத் திரைப்பட விழா மேடைகள் பலவற்றை அலங்கரித்து வரும் 'இந்தப் படம், டிசெம்பர் மாதம் 6 ஆம் திகதி அன்று அமெரிக்கத் திரையரங்குகளில் வெளியாகிறது.



# சிறைக்கதவில் எத்தனை கம்பிகள்

■ தாஸ் மாஸ்ரர்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின்கீழ் கைது செய்து தடுத்து வைத்து ( சில வேளை 18 மாதங்கள் வரை) விசாரணை முழந்த பின் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்திக் கால வரையறை அற்ற தடுப்புக் காவல் உத்தரவைப் பிறப்பிக்கும்போது பொலிஸாரால் அந்தச் சந்தேக நபர் தொடர்பான விவரங்கள் நீதிபதியிடம் கையளிக்கப்படும். அதை 'டி றிப்போர்ட்' என்று அழைப்பர். குறித்த நபர் என்ன காரணத்துக்காகக் காலவரையறை அற்ற தடுப்புக் காவல் உத்தரவின் பேரில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார் என்ற விடயம் அதில் குறிப்பிடப்பட்டிருக்கும். அதாவது ஒருவர் கைதான தன்பின் அவரிடம் இருந்து பொலிஸாரால் பெறப்படுகின்ற குற்றச் சம்பவம் தொடர்பான அறிக்கையாக அது இருக்கும். ஆனால் சில நீதிபதிகள் அந்த அறிக்கையை அவ்வாறே ஏற்றுக் கொள்ளாது 6 மாத காலத் தவணை வழங்கிகுறித்தநபரைத் தடுப்புக் காவலில் வைப்பதற்கு உத்தரவிடுகின்றனர்.

> ஒரு நபர் சிறையில் அடைக்கப்பட்ட பின் அவர்மீது தொடுக்கப்படும் வழக்குகள் திரும்பப் பெறப்பட்ட பின்பும் கூட அவர் விடுதலையாகிவிட முடியாது. மேற்படி தடுத்து வைக்கும் வழக்கு காலாவதியான பின்பு தான் அவர் விடுதலை செய்யப்படுவார்.

6 மாத முடிவில் அவரது வழக்குத் தொடர்பில் பொலிஸார் உரிய நடவடிக்கை எடுத்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் அந்தச் சந்தேகநபருக்குப்பிணை வழங்க முடிகிறது. இது அநேகமாக வடக்குக் கிழக்கில் உள்ள நீதிமன்றங்களாலேயே வழங்கப்படுகின்றது. இந்த நடவடிக்கைகளால் குற்றம் சாட்டப்பட்டவர் 6 மாதங்களுக்கு மேல் சிறையில் இருப்பது தடுக்கப்படுகின்றது. 1995ஆம் ஆண்டுக்கும் 2000ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப்பகுதிக்குள் கைதான பலருக்கு 2 வருடங்களின் பின்பே வழக்குத் தவணை கொடுக்கப்பட்டது. அதுவரை எந்தக் கேள்வியும் இல்லாமல் ஏதோ ஒரு சிறைக்குள் வாட வேண்டிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டது. 2000ஆம் ஆண்டு காலப்பகுதி அடிப்படை மனித உரிமைகள் சார்ந்த நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டதால் அதுசார்ந்து விரைவில் வழக்குத் தவணை வழங்கும் நிலை ஏற்பட்டது.

இது அதுவரை இருந்த சூழலைச் சற்று மாற்றுவதாக இருந்தது. ஒருவரின் கைது சட்ட முரணானது அல்லது அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல் என்ற அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவரால் அல்லது அவரது மனைவி, பெற்றோரால் உயர் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

காலவரையறையற்ற தடுப்புக்காவல் உத்தரவு போடப்படுதலும் ஒரு வழக்காகவே கருதப்படுகிறது. இந்த வழக்குக்கும் வழக்கு இலக்கம் ஒன்று இருக்கும். இந்த உத்தரவு எந்த நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்டது எந்த ஆண்டில் பிறப்பிக்கப்பட்டது என்ற விவரங்கள் அதில் அடங்கும். இந்த வழக்குக்கான பத்திரமே கைதி குறித்துச் சிறைச்சாலைக்கு வழங்கப்படும் கொமிற்றலாக இருக்கும். (கொமிற்றல் என்பது ஒரு கைதியின் சுய விவரங்கள், விலாசம், தடுத்து வைக்கும் உத்தரவு பெறிக்கப்பட்ட கடிதம், வழக்கு ஆணை கடிதங்கள், மருத்துவ பரிசோதனைக்காக நீதிபதியால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவுகள் ஆகிய விவரங்களும் அடங்கியுள்ள கோவை) கொமிற்றலில் கைதியின் முழுப்பெயர், புலிச்சந் தேக நபராயின் அது குறித்த பதிவு, சிறப்புப் பாதுகாப்பு, சிறைச்சாலை இலக்கம், என்பன அந்தக் கோப்பின் முன்பக்க மட்டையில் சிவப்பு நிறப் பேனாவால் எழுதப்பட்டிருக்கும். குறித்த நபர்கள் மீது வேறு வழக்குகள் தாக்கல் செய்யப்படுவதற்கு முன்னரே இந்தத் தடுத்து வைக்கும் உத்தரவை ஒரு வழக்காக நீதிமன்றமும் சிறைச்சாலை நிர்வாகமும் ஏற்றுக்கொள்வதை நடைமுறையில் கண்டிருக்கிறோம்.

ஒரு நபர் சிறையில் அடைக்கப்பட்ட பின் அவர் மீது தொடுக்கப்படும் வழக்குகள் திரும்பப் பெறப்பட்ட பின்பும் கூட அவர் விடுதலையாகிவிட முடியாது. மேற்படி தடுத்து வைக்கும் வழக்கு காலாவதியான பின்பு தான் அவர் விடுதலை செய்யப்படுவார். இவ்வாறுதான் உரும்பிராயைச் சேர்ந்த சீலன் என்பவர் வழக்கு முடிந்த பின்பும் காலவரையறையற்ற தடுப்புக்காவல் உத்தரவை இல்லாது செய்வதற்கு 83 நாள்கள் வரை மேலதிகமாகச் சிறையில் கழித்தார்.

(தொடரும்)




■ சிவரம்யா

## உயிர் கொல்லி

உயிர்கொல்லியாம்
எய்ட்ஸ் --இது
ஒருவனுக்கு ஒருத்தி என
ஒழுக்கம் பேணின்
நோயை தவிர்த்து
நன்கு அமையலாம்

குருதியினுள் சேரும்
தொற்றுக் கிருமி
இறப்பைத் தரும்
கொடும் காலன்

கலாசார சீரழிவால்
காதல் கேளிக்கைகளால்
உறவு பிறழ்ந்து
மடமை கொண்டு
தாமும் அழுது
பிறரும் வாடி
சோகம் அடைந்து
ஆயுளை முடிக்கும்
பிணி வேண்டுமா?

குடும்பம் அமைதி கெட
இளமை ஏமாற
நாள்கள் வேதனை தர
வேண்டாம்
பாதுகாப்பற்ற வாழ்வு
நோயை தவிர்ப்போம்
ஆரோக்கியம் பேணுவோம்



க.சிவகரன்



# நரகாசூரன்

அவன் தொட்டுவிட்டால் நாங்கள் கெட்டுவிடுவோம். அவன் தொடாமல் இருப்பதற்கு நாங்கள் நன்றாகக் குளித்து முழுகிப் புத்தாடை அணிந்து இருக்க வேண்டுமாம். தீபாவளிப் பண்டிகை பற்றிச் சிறுவயதில் எங்களுக்குப் பாட்டி இப்படித்தான் கூறுவாள். நரகாசுரனா? அவன் சாத்தான் தானே? என்று றீற்றா கேட்பாள். அவள் சேர்ச்சுக்குத்தான் போவாள். நாங்கள் அவர்களை வேதக்காரர் என்போம். அவள் வேதமோ சைவமோ எனக்கு அது பிரச்சினை அல்ல. நான் பள்ளிக்கூடத்துக்குப் போகும் பொழுது கூடவே அவளும் வரு வர்ள். சிலகாலம் றீற்றா வரவில்லை. நான் தனியே போனேன். பின்பு அவள் வரும் பொழுது பொலிவுடன் காணப்பட்டாள். அவளின் கண்கள் முன்பைவிட அழகாயிருந்தன. அவை வெட்கம் என்பதை வெளியே காட்டின. முன்பு போல அதிகம் பேசுவதைக் குறைத்தாள். என்னுடன் பள்ளிக்கூடத்துக்கு வந்தாலும் அப்போதெல்லாம் எனக்குக் கிட்ட வாக நடந்து வந்தவள் பின்னர் எட்டவாக நடக்கலானாள். அவள் பெரியபிள்ளை ஆகி விட்டாள் என்பது தான் அத்றகுக் காரணம்.

தீபாவளிப் பண்டிகையும் நெருங்கி வந்தது. எனக்கு றீற்றாவுடன் எதாவது பேசவேண்டும் போலிருந்தது. அவள் சிரித்துச் சிரித்துப் பேசினாள் எனக்குப் பிரியமாக இருந்தது. நரகாசுரன் பற்றித்தான் இருவரும் பேசினோம். புராதன காலத்தில் மக்களை நல்வழிப்படுத்த இப்படியொரு கதையும் பண்டிகையும் தோன்றி இருக்க வேண்டும் என முடிவெடுத்தோம். சாத்தான் என்பதும் அப்படித்தான் கெட்ட குணங்கள் மனதில் எழும் பொழுது அதனைச் சாத்தான் எனக் கூறுவதாக முடிவெடுத்தோம்.

வகுப்பில் முன்புபோல் றீற்றா இல்லை. இப்பொழுது கூடியளவு மௌனமாகவேயிருந்தாள். கொஞ்ச நாள் பள்ளிக்கூடத்துக்கு வரவில்லை என்பதால் அவள் பாடங்களை கொஞ்சம் மறந்திருந்தாள். இப்பொழுது அவள் பாடங்களைப் பற்றி என்னிடம் பேசத் தொடங்கினாள். அவளின் உதடுகள் முன்பை விடவும் அழகாகவும் நளினமாகவும் பேசின. அவள் குட்டிப் பொம்மை போலவும் புனைக்குட்டி போலவும், பஞ்சுமிட்டாய் போலவும் மனதுக்கு இதமாகத் தென்பட்டாள். அவளுடைய வெள்ளைச் சட்டை முன்பை விடவும் அவளுக்கு இறுக்கமாகவும் எடுப்பாகவும் இருந்தது.

புளியடிப் பள்ளிக்கூடம் என எல்லோரும் சொல்லும் எங்கள் பாடசாலை ஒரு பழைய பாடசாலை. எங்கள் வகுப்பில் ஒன்பது பேர் தான் இருந்தோம். ஒன்பதாம் வகுப்பில் ஒன்பது பேர் பொருத்தமாகவேயிருந்தது. மற்ற வகுப்புக்களிலும் எங்களைப் போலத்தான் பத்துப்பேர், எட்டுப்பேர். பள்ளிக்கூடத்தில் நாங்கள் குறைவாக இருப்பதால் அதிபர் எங்கள் எல்லோரையும் எண்ணிக் கணக்கு வைத்துக் கொள்ளுவார். அது அவருக்குக் கடினமான வேலையாக இருக்க முடியாது தானே? நாங்கள் பள்ளிக்கூடத்துக்குப் போகவில்லையென்றால் அதிபர் விட்டை வந்து விடுவார். இதனால் பள்ளிக்கூடாத்தைத் தவிர்ப்பது கடினமான காரியமாகவே காணப்பட்டது. என்னை எல்லோரும் வகுப்பிலே கெட்டிக்காரன் என்று தான் எண்ணினார்கள். இந்தச் சின்னப்பள்ளியில் சின்னவகுப்பில் நான் கெட்டிக்காரன். மற்றபடி நான் பெரிய கெட்டிக்காரன் என்று கூறமாட்டேன். நான் பெரிய அறிவாளி என்றே றீற்றாவும் நம்பினாள். அவள் கொஞ்சக் காலம் பாடசாலைக்கு வரவில்லை என்பதால் பாடங்களில் பின்தங்கியிருந்தாள். என்னிடம் அடிக்கடி கேள்விகள் கேட்டாள். அவளுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும் என்பதற்காக நானும் கொஞ்சம் படிக்க வேண்டியிருந்தது. கணித பாடத்தில் நான் கொட்டிக்காரன். அவள் கணிதத்தில் மிகவும் மட்டமாகவே இருந்தாள். அவள் கணக்குப் பாடத்துடன் கஸ்ரப்படுவதை பார்க்கும் பொழுது எனக்குச் சங்கடமாகவே இருந்தது. கணிதபாடம் நடக்கும் பொழுது மட்டும் அவள் கவலையுடன் இருப்பாள். அவள் படிக்கின்றாளா என்பதை அடிக்கடி நான் கவனிப்பதுண்டு. கணக்கு வாத்தியாருக்குத் தெரியாமல் அவளும் என்னை அடிக்கடி பார்ப்பாள். நாங்கள் கண்களால் பேசிக் கொள்வது வழமையாகி விட்டது.

அடுத்த தீபாவளியும் வந்தது. இந்தத் தீபாவளி பற்றி றீற்றா என்னிடம் ஏதாவது கேட்பாள் என நான் நம்பினேன். அவள் கேட்டால் கூறவேண்டிய கதையை நான் ஆயத்தம் செய்தேன். பாடநூல்களிலும் வேறுசில புத்தகங்களிலும் அவற்றைத் தேடிப்படிப்பது என்பது ஒன்றும் கடினமான காரியமாக எனக்குப் படவில்லை. தீபாவளி என்பது தீப ஒளி என்பது தான். ஒளி என்பது வெற்றியின் அடையாளம் தீபாவளியின் தோற்றம் தொடர்பாகப் பல கதைகள் உண்டு. வான்மீகி இராமாயணத்தின் படி இராமன் இராவணணைக் கொன்றுவிட்டு வென்றுவிட்டு அயோத்திக்குத் திரும்பிய நாளன்று அயோத்தி நகரமக்கள் வீடுகள் தோறும் விளக்கேற்றிக் கொண்டாடினர். அந்த நாள் தீபாவளிப் பண்டிகை ஆனது என ஒரு கதையுண்டு. ஆனால், நராகசுரான் கதையே மிகவும் பொருத்தமான கதை என எனக்குப்பட்டது. மாகாவிஷ்ணு பன்றி அவதாரம் எடுத்துப் புமியைத் தோண்டியபொழுது அவரின் பரிசத்தால் பூமாதேவிக்கும் மகாவிஷ்ணுவுக்கும் பிறந்த மகனே நராகசுரன். அசுரர்களை வதம் செய்த காலத்தில் அவன் பிறந்தமையால் அவனிடம் அசுர குணங்கள் நிறையப்பெற்றன. மனித உருவம் உடையவன் ஆகவும் அசுரகுணம் படைத்தவன் ஆகவும் அவன் காணப்பட்டமையால் நர அசுரன் நரகாசுரன் எனப்பட்டான். அவன் தேவர்களுக்கும் மக்களுக்கும் பல கொடுமைகளைச் செய்தான். இதனால் மகாவிஷ்ணு அவ னைக் கொல்வதற்குப் ப்புறப்பட்டார். அவனோ தன் தாயைத் தவிர வேறு யாராலும் கொல்லப்பட முடியாதவன் எனும் வரத்தைப் பெற்றிருந்தான்.

அவனைப் போரிலே வெல்லமுடியாது என்பதைக் கண்ட மகாவிஷ்ணு ஒரு தந்திரம் செய்தார். அவனின் அம்புகளால் அடிபட்டு இறப்பது போல புமியிலே விழுந்தார். இதைப்பார்த்துக் கோபம் கொண்ட சத்தியபாமா கோபம் அடைந்து நரகாசுரனைப் போருக்கு அழைத்தார். சத்தியபாமா, பூமியின் அவதாரம் என்ப தையும் தன்னுடைய தாய் என்பதையம் உணராத நராகசுரான் பேர் புரியாலானான். அவன் அன்னையின் அம்புகட்கு இரையாகிச் சரிந்தான். அப்பொழுது அவனிற்குச் சத்தியபாமா. தன்னுடைய தாய் என்ற உண்மை விளங்கியது. அப்போ அவன் தன் அன்னையிடம் வரம் ஒன்றைக் கேட்டான்.

'அம்மா நான் மறைந்த இந்த நாள் மக்கள் மனங்களில் நிற்க வேண்டும் மக்கள் இந்த நாளைப் புத்தாடை அணிந்து இனியவை உண்டு ஒளி மயமாகக் கொண்டாட வேண்டும்' என்று. மகாவிஷ்ணுவும் சத்தியபாபவும் அவன் கேட்டதை அருளினர். அதன் பின்புதான் இந்தத் தீபாவளிப் பண்டிகை. இந்தக் கதை றிற்றா வுக்குப் பிடிக்குமோ பிடிக்கதோ எனக்குத் தெரியாது. இதை அவளிடம் கூறவேண்டும் என எண்ணிக்கொண்டேன்.

காலையில் றீற்றா பாடசாலைக்குவரும் பொழுது பெரிய மோட்டார் சைக்களில் சோமனும் பாபுவும் வந்தார்கள். அவர்கள் இருவரும் அடிக்கடி எங்கள் பாதையில் சுழட்டியடிப்பது வழக்கமாகி விட்டது. அப்படி அவர்கள் வேகமாக ஓடி வரும் பொழுது றிற்றா என்னுடன் ஓராமாக ஒட்டிக்கொள்வாள். அவள் மூச்சுக்காற்று என்மேற்படும். பாடசாலை முடிந்து வரும்பொழுது சோமனும் பாபுவும் ஒழுங்கையில் நின்றனர். றீற்றா என்னுடன் வரவில்லை. கணக்குப் பாடத்தில் மேலதிக வகுப்பு இருப்பதால் அவள் பாடசாலையிலேயே இருந்தாள். நான் சோமனையும் பாபுவையும் பயத்துடன் பார்த்துவிட்டு விட்டுச்சென்றேன். அவர்கள் ஒன்றும்; புதியவர்கள் கிடையாது.

(24ஆம் பக்கம் பார்க்க)



# நரகாசூரன்



*(23ஆம் பக்கத் தொடர்ச்சி)*


எங்கள் புளியடிப்பள்ளிக் கூடத்தில் படித்தவர்கள் தான். மேலே படிக்க முடியாது விடலையாக ஓடித்திரிபவர்கள். அப்படிப்பட்டவர்களுடன் பழகக்கூடாது என்று அடிக்கடி பாடசாலையிலே எங்களுக்குப் போதனை செய்வார்கள். நான் அவர்களிடம் எச்சரிக்கையாகவே நடந்து கொண்டேன்.

நரகாசுரன் பற்றிய கதையை இன்றும் நான் றீற்றாவிடம் கூறவில்லை. என்னையும் றிற்றாவையும் போசவிடாமல் மௌனமாகவே போகும்படி சோமனும் பாபுவும் அடிக்கடி ஓடி வந்தார்கள். நாங்கள் மௌனமாகவே தெருக்களில் நடந்து போவோம்.

இன்று திங்கள்கிழமை தீபாவளியும் முடிந்துவிட்டது. நான் பாடசாலைக்குப் புறப்பட்டத் தயாரானேன். புதிதாக வாங்கிய 'பெணியனையும்' போட்டுக்கொண்டேன் எனக்குப் புதியதோர் உற்சாகம் பிறந்தது. றீற்றாவைப் பார்க்க வேண்டும் பேச வேண்டும் போலிருந்தது. வாசலிலோ, வீதியிலோ றீற்றாவைக் காணவில்லை. நேரம்போய்விட்டதால் றீற்றா போயிருக்க வேண்டும். ஓட்டமும் நடையுமாக பாடசாலை நோக்கி ஒடுகின்றேன்.

பாடசாலையின் முன்பு கூட்டம். சோமனும் பாபுவும் அந்தக் கூட்டத்தில் நின்றனர். பொலிஸ் வாகனம் ஒன்று தூரத்தில் நின்றது. ஊர் மக்களில் பலபேர் நின்றனர். எங்கள் கோவில் ஐயாவும், நின்றார். சேர்ச்பாதரும் நின்றார். எல்லோரும் ஒன்றாக நின்றனர். ஏதோ விபரீதம் நடந்துவிட்டது என்பது மட்டும் எனக்குத் தெரிகின்றது. கூட்டத்தை எட்டிப்பார்த்தேன் எல்லோரும் கோபமாக கத்திக்கொண்டு நின்றனர். போராட்டம் நடப்பது போலிருந்தது. கல்விப்பணிப்பாளர் கூட்டத்தில் நிற்பதைக் கண்டேன். றீற்றாவின் மச்சான் டக்சன் எட்டாம் வகுப்பில் படிப்பவன். எனது கையைப் பிடித்தான் விக்கி விக்கி அழுதான். நேற்று நடந்த மேலதிக வகுப்பில் கணக்கு வாத்தியார் றீற்றாவிடம் சேஷ்டை செய்ததாகவும், அவளை மருத்துவமனையில் சேர்த்திருப்பதாகவும் கூறி அழுதான். கணக்கு வாத்தியாரைப் பொலிஸ்காரர்கள் இழுத்துக் கொண்டு போவதை நான் கண்டேன். நான் அழுதுகொண்டு வீட்டை-நோக்கிப் போகின்றேன். தனியே அந்தத் தெருவில் அழுதுகொண்டு போகின்றேன்.

## சொற்சிலம்பம் போட்டி இல: 597



அனுப்புபவர் பெயர்:.............................................
முழுமையான தபால் விலாசம்: ...............................
.............................................................
கையொப்பம்:..................................................

வாசகர்கள் மத்தியில், குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தி யில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப் போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

சொற்சிலம்பம் போட்டி இலக்கம் 594 இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**
(1) மகத்துவம் (6)துணி (7) ருசி (8) கல (9) சாதனம் (10) மடம் (11)ரம் (12)புதன் (17)நடிகர் (19)தகனம் (20)தமது (22) கரும்பு (23)திரு

**மேலிருந்து கீழ்**
(1)மதுசாரம் (2) கணிதம் (3) துரும்பு (4)வசி (5) புலம்பல் (8) கட (10) மன்னி (13) தகர் (14) கடினம் (16) தருமதி (17)நகரு (18) கம்பு (19)தக

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

**சொற்சிலம்பம் போட்டி**
**இல.597**
பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள் நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், (11.12.2019 ஆம் திகதிக்கு முன்னர்) கிடைக்கத் தக்கதாக, தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.597 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 15.12.2019 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்.
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

போட்டிகளில் வெற்றியீட்டியவர்களாக அறிவிக்கப்பட்டு, இதுவரை தமக்கான பரிசுக் காசோலைகள் கிடைக்கப்பெறாதவர்கள் வார நாள்களில் உதயன் அலுவலக நிதிப் பிரிவில், போட்டிக் கூப்பன்களில் தாம் குறிப்பிட்ட தமது பெயர், வதிவிட விவரங்களை உறுதிப்படுத்தி, தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள இயலும். போட்டியில் கலந்துகொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

## இடமிருந்து வலம்

1. மாணிக்க வாசகரின் பக்திப் பாடல் தொகுப்பு
6. உடலை நடுங்க வைக்கும் பயம்
7. மறை சூழ்ச்சி
9. கபடம்
10. பிரயாணம்
11. காலவேளை
12. மாடு இதனைத் தின்னும்
13. எல்லாச் சமயங்களும் இது அருந்துவதைத் தடை செய்கின்றன
15. உடலின் பகுதிகளில் கறுப்பு நிறமாகக் காணப்படும் புள்ளி
17. வதனம்
18. காவற்காரன்
20. அல்குர்ஆனின் மொழி
21. பொய்

## மேலிருந்து கீழ்

1. அர்ப்பணிப்பு
2. தர்க்கம் செய்தல்
3. பொறு
4. திருமணம்
5. நாற்காலி
8. மறைப்பு
12. கண்களுக்கு மேலாய் இருக்கும் மயிர் வரை
13. இராசிகளில் ஒன்று
14. கயிறு தயாரிப்பதற்கு உதவும் பொருள்
15. பெரிய மனிதன்
16. சிக்கலற்ற

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 595 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு**
ஞா.தேனிசை,
தரம் 5,
வ/விஞ்ஞானகுளம், நவரத்தினம் வித்தியாசாலை கனகராயன்குளம்.

**2 ஆம் பரிசு**
ந.வைகுந்தன்,
ஸ்ரீவாலாம்பிகா புத்தகசாலை
இல 422(614),காங்கேசன்துறை வீதி,
வண்ணார் பண்ணை.

**3 ஆம் பரிசு**
மு.குலசிங்கம்,
இல.69ஆனந்தநகர்,
கிளிநொச்சி.

**4 ஆம் பரிசு**
ஆ.ஆனந்தராஜா,
இல.99காரைநகர் வீதி,
வில்லூன்றி யாழ்ப்பாணம்..

**5 ஆம் பரிசு**
சு.தரண்யா,
யா/கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்


## பாராட்டுப் பெறுவோர்

செ.ரஞ்சன்,
இல 17/4 திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

ஏ.தேவஅருள்ராஜா,
முதலி கோவில்.2ஆம் ஒழுங்கை,
கொக்குவில்.

செ.விநாயகதாஸ்,
அந்தோனியார் வீதி.
மாதகல்.

சொற்சிலம்பம் போட்டி 595 இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக்கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.



# ரஜினிகாந்தின் 'தர்பார்' பட முதல் பாடல் வெளியீடு

ஏ.ஆர்.முருகதாஸ் இயக்கத்தில் ரஜினிகாந்த் நடித்துள்ள படம் 'தர்பார்'. படப்பிடிப்பு முடிந்து இறுதிக் கட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. அனிருத் இசையமைத்துள்ள இந்தப் படத்தின் பாடல் தற்போது வெளியாகியுள்ளது. 'தர்பார்' படத்தில் பாடலாசிரியர் விவேக் எழுதிய "சும்மா கிழி..." என்று தொடங்கும் அறிமுகப் பாடலை எஸ்.பி.பாலசுப்ரமணியம் பாடி உள்ளார். இந்தப் பாடலை தற்போது சமூக வலைத்தளத்தில் வெளியிட்டு உள்ளனர். பாடலில் "சும்மா கிழி நான்தாண்டா இனிமேலு, வந்து நின்னா தர்பாரு, உன்னோட கேங்குக்கும் நான்தாண்டா லீடு... நெருப்பு பேரோட நீ குடுத்த ஸ்டாரோட இன்னைக்கும் ராஜா நான் கேட்டுப்பாரு... பில்லா என் வரலாறு பார்த்தவன் நான் பலபேரு. உன்னோட பேட்டைக்கும் நான்தான்டா லாடு. கறுப்பு தோலோட சிங்கம் வரும் சீனோட எடமே பத்திக்கும் அந்தமாதிரி.." என்பன போன்ற வரிகள் பாடலில் இடம்பெற்றுள்ளன.

இந்தப் பாடல் வரிகள் ரஜினியின் அரசியல் பிரவேசத்தை பிரதிபலிப்பதாக உள்ளது என்று சமூக வலைத்தளத்தில் ரசிகர்கள் கொண்டாடி வருகிறார்கள்.

சப்பாணி@manipmp

கஷ்டம் எல்லாம் சுனாமி வேகத்தில வருது, சந்தோசமெல்லாம் போர்க்கால அடிப்படை உதவி மாதிரி மெதுவா வருது..!

amudu@amuduarattai

பணக்காரர்கள் கனவு மாளிகையிலும், ஏழைகள் மாளிகை கனவுகளுடனும் வாழ்கிறார்கள்.

mohanram.ko@mohanramko

பசிக்கு உணவில்லாத போது, டிவி யில் ருசிக்கு விளம்பரம் காட்டப்படும்

சப்பாணி @manipmp

ஒவ்வொருவர் இறப்பிலும் ஒவ்வொருவரும் தன்னுடைய இறப்பை நினைத்தே அழுகிறார்கள்.

# அரசியல் திருக்குறள்

- தோன்றின் வாரிசாக தோன்றுக அஃதிலார்
  அரசியலில் சேராமை நன்று..!
- எல்லா பல்பும் பல்பல்ல அரசியல்வாதிகள்
  கொடுக்கும் பல்பே பல்பு..!
- புறங்கூறி வாழ்வாரே அரசியலில் வாழ்வார்
  மற்றவரெல்லாம் மிதிபட்டு வீழ்வார்..!
- ஒழுக்கம் விழுப்பம் தரலான் அவ்வொழுக்க
  அரசியலில் அத்துமீறப் படும்...!
- அகர முதல எழுத்து எல்லாம்
  அரசியல்வாதியிடம் பார்த்துப் பழகு..!
- செயற்கரிய செய்வர் பெரியார் சிறியர்
  வாட்சப்பில் வதந்தி பரப்புவர்
- கொள்ளையடித்து வாழ்வோரே வாழ்வர்,
  மற்றோரெல்லாம் அடிமையாய் இருந்தே சாவர்.
- ஆட்சி மாறினால் காட்சி மாறும்
  என்பரெல்லாம் அரசியல் அறிவில்லார்.



சரி, சரிண்ணே
கோவிச்சுக்காதண்ணே...




நாம் வறுமையில் விழுந்த பின்பும் தெரிந்த நாய்கள் வாலாட்டத்தான் செய்கின்றன...



சில மனிதர்கள்தான் முகத்தை திருப்பி கொள்கின்றனர்..!

இந்த உலகிலுள்ள எல்லா உயிரினங்களையும் வேட்டையாடும் ஒரே மிருகம். மனிதம்




படித்ததில் பிடித்தது

# பேசாதே பேசாதே


- ஏழைக்கு முன்னால் நின்று கொண்டு உனது செல்வம் பற்றிப் பேசாதே.
- நோயாளிக்கு முன் நின்று கொண்டு உன் ஆரோக்கியத்தைப் பற்றிப் பேசாதே.
- பலவீனனுக்கு முன்னால் நின்று உனது பலம் பற்றிப் பேசாதே.
- மகிழ்ச்சியை இழந்தவனுக்கு முன்னிருந்து கொண்டு.சந்தோசம் பற்றிப் பேசாதே.
- அநாதைக்கு முன் நின்று கொண்டு உனது பெற்றோரைப் பற்றி பேசாதே.

ஏதோ அமைதி ஊர்வலம் மாதிரி உலக ஆண்கள் தினம் முடிஞ்சிடிச்சி



கொஞ்ச நாள் கழிஞ்சி உலக மகளிர் தினம்னு ஒன்னு வரும் பாருங்க, சமூகவலை தளமே கிழிஞ்சி தொங்கும்

வெட்ட வெட்ட எழச்சி பெறுவேன்
உனக்கு நிழலாக இருப்பதற்கு...




கஷ்டங்களுக்கு தான் என்ன ரொம்ப பிடிக்கும்...



ஏன்னா... அதுமட்டும் தான் இப்ப வரைக்கும் என் கூடவே இருக்கு...

# அறிவு உயிர் காக்கும்



பூங்காவனம் என்ற காட்டுக்கு ராஜாவாக சிங்கம் ஒன்று இருந்தது. அது தனக்கு ஆலோசனை சொல்வதற்கு மூன்று மந்திரிகளை நியமிக்க எண்ணியது.
அதன்படி கரடி, குரங்கு, நரி ஆகியோரை மந்திரிகளாக நியமித்தது.
அவை அனைத்தும் மந்திரியான சந்தோசத்தில் மகிழ்ச்சியாகக் காலம் கழித்தன.
ஒரு முறை காட்டில் பஞ்சம் ஏற்பட்டது. சிங்கத்துக்கு வேட்டைக்கு விலங்குகள் சரியாக அகப்படவில்லை. ஒருநாள் சிங்கத்துக்கு உண்ணபதற்கு இரை ஏதும் கிடைக்கவில்லை.
பசியால் வாடிய சிங்கத்தின் கண்களில் அதன் மந்திரிகளான கரடி, குரங்கு, நரி மூன்றும் தென்பட்டன.
மந்திரிகள் மூவரையும் கொன்று தின்ன சிங்கம் தீர்மானித்தது. காரணமில்லாமல் கொன்றால் மற்ற பிராணிகள் எதிர்காலத்தில் தன்னைச் சந்தேகித்து அருகில் நெருங்காது என்று நினைத்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் சிங்கத்தின் மனதில் ஒரு திட்டம் உதித்தது.
அதன்படி மூன்று மந்திரிகளையும் அழைத்து "நீங்கள் என்னிடம் எவ்வளவு உண்மையாக நடந்து கொள்கிறீர்கள் என்று இப்போது சோதிக்கப் போகிறேன்." என்றது.
மூன்று மந்திரிகளும் சிங்கம் கூறப்போவதை ஆவலுடன் எதிர்நோக்கின.
சிங்கம் தன்னுடைய வாயை அகலத் திறந்து "கரடியே, என்னுடைய வாயிலிருந்து எப்படிப்பட்ட வாசம் வீசுகிறது?" என்று கேட்டது.
உடனே கரடி "மாமிசம் சாப்பிடும் உங்களுடைய வாயில் மாமிச நாற்றம்தான் வீசுகிறது. அதுதான் உண்மை." என்றது.
"என்ன, என் வாயா நாறுகிறது? நான் ராஜா என்பதையும் மறந்து இப்படிக் கேவலமாகப் பேசிய உனக்கு மரணம்தான் சரியான தண்டனை." என்று கூறி கரடியைக் கொன்று தின்றது.
பிறகு குரங்கிடம் "என் வாயில் என்ன வாசம் வீசுகிறது?" என்று சிங்கம் கேட்டது.
கரடிக்கு நேர்ந்த கதியைப் பார்த்த குரங்கு "உம்முடைய வாயில் மல்லிகைப் பூ வாசம் வீசுகிறது." என்றது.
"நீ பெரிய அண்டப் புளுகனாக இருக்கிறாயே. மாமிசம் சாப்பிடும் பழக்கத்தைக் கொண்ட என்னுடைய வாயில் மல்லிகைப் பூ மணம் கமழ்வதாகச் சொல்கிறாயே. முகஸ்துதி என்பது ஒரு ஏமாற்று வேலை. உனக்கும் மரண தண்டனையே" என்று கூறி குரங்கைக் கடித்து தின்றது.
நடந்தவைகளை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்த நரி எப்படியாவது சிங்கத்திடம் இருந்து தப்பிக்க எண்ணியது.
அப்போது சிங்கம் நரியிடம் "என்னுடைய வாயில் என்ன வாசம் வீசுகிறது?" என்றது.
"அரசே எனக்கு இரண்டு நாட்களாக ஜலதோசம். ஆதலால் என்ன வாசம் என்று இப்போது சொல்ல இயலாது. பிறகு ஒரு நாள் சொல்கிறேன்." என்று கூறியது.
சிங்கமும் அதனை ஒன்றும் செய்யாமல் விட்டுவிட்டது.
இரவானதும் நரி தன்னுடைய இருப்பிடத்திற்கு சென்றுவிட்டது. மீண்டும் நரி சிங்கத்திடம் திரும்பி வரவே இல்லை.
கடினமான சூழ்நிலைகளில் நாம் அறிவைப் பயன்படுத்தி ஆபத்திலிருந்து தப்பிக்க வேண்டும்.



## எவரையும் ஏளனம் நீ செய்யாதே!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை
புனிதமான கடவுளை
பூசைசெய்ய உதவுதே!

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி மகிழ உதவுதே!


கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ
இன்பம் இன்பம் என்றுதாம்
இன்னும் கேட்க செய்யுதே!

விசத்தில் மிக்க பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்
அடடா அந்த இரத்தினம்
மனிதருக்கும் கிட்டுமோ?

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோசா மலருதே
வீசி நல்ல மணத்திலே
விரும்பி அணிய செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!


# வரைந்து பழகுவோம்




## பொது அறிவுத் தகவல்கள்

1. தீப்பெட்டியைக் கண்டுபிடித்தவர் யார் ?
   லேண்ட் டார்ம்
2. இத்தாலியின் தலை நகர் எது ?
   உரோம்
3. பாம்புகளே இல்லாத கடல் எது ?
   அட்லாண்டிக் கடல்,
4. பென்சில் தயாரிக்கப்பயன்படும் மூலப்பொருள்கள் எவை ?
அன்னார் காலஞ்சென்ற ஐயாத்துரை சங்கரப்பிள்ளை அவர்களது அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சுப்பையா தங்கப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், திரு. திருமதி ஐயாத்துரையின் மருமகளும், காலஞ்சென்ற பரமகுருநாதன் மற்றும் குகநேசன் (கனடா), காலஞ்சென்ற கருணாமூர்த்தி மற்றும் அன்பன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு தாயாரும், சிவமணி காலஞ்சென்ற செல்வராணி, சாந்தினி, சாந்தி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிறிவித்யா, சிறிவித்யன், பார்த்தி, அனுஷன், லசிகா, திவ்யா, விவேகா, பாரதி ஆகியோரின் அன்பு பேர்த்தியும், டிவினா, பவித்திரன் ஆகியோரின் ஆசை பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று **(01.12.2019)** ஞாயிற்றுக்கிழமை முற்பகல் **10.30** மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் குப்பிளான் தெற்கில் அமைந்துள்ள காடாகடம்பை இந்துமயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS/29607)(17)

குப்பிளான் தெற்கு,
குப்பிளான்.

தகவல்:
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்



பிறப்பு 03 . 10 . 1954

இறப்பு 29 . 11 . 2019

### திருமதி இராசகுமாரி (வேவி) ஜெயரத்தினம்

கைதடி தென்கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசகுமாரி ஜெயரத்தினம் (ஓய்வுபெற்ற தாதியர் - அரச முதியோர் இல்லம் - கைதடி) 29.11.2019 வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா மாரிமுத்து மற்றும் விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - கற்பகம் தம்பதிகளின் பாசமிகு மருமகளும், ஜெயரத்தினத்தின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், சுகாதார திணைக்களம் - சாவகச்சேரி) பாசமிகு மனைவியும், வசந்தகுமார், சபேசன் (ஆசிரியர் - முல்லைத்தீவு கோம்பாவில் விக்கினேஸ்வர வித்தியாலயம்), யதீசன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், சிவபாக்கியம், இராசலட்சுமி, காலஞ்சென்ற சுப்புலட்சுமி மற்றும் பரமேஸ்வரி, இரத்தினகுமாரி, மகாலிங்கம், சண்முகலிங்கம், மங்கையற்கரசி, பத்மாவதி, கனகலிங்கம், இராஜேஸ்வரி . வைகுந்தமாலா, யோகலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், நவரத்தினம், யோகரத்தினம், குணரத்தினம், புஸ்பகலா, கலாநிதி, அற்புதமலர், நற்குணநாயகி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கைதடி தென்கிழக்கு
செட்டியார் வளவு, கைதடி (CS/29630)(11,17)

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### கந்தையா கதிரிப்பிள்ளை



பிறப்பு 23.02.1931 இறப்பு 30.11.2019

சிறுப்பிட்டி தெற்கு செல்லப்பிள்ளையார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா கதிரிப்பிள்ளை நேற்று (30.11.2019) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - சேதுப்பிள்ளை (பொன்னம்மா) தம்பதிகளின் மகனும், காலஞ்சென்றவர்களான அருணாசலம் - வள்ளிப்பிள்ளை தம்பதிகளின் மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கதிரவேலு வள்ளிப்பிள்ளையின் அன்புச் சகோதரரும், திருநாவுக்கரசு, விஜயலக்சுமி ஆகியோரின் மைத்துனரும், கஜமுகதேவி, தவமணிதேவி, ஸ்ரீசத்தியகுமரன், காலஞ்சென்ற ஸ்ரீ நந்தகுமார் மற்றும் ஸ்ரீ கிருஸ்ண மேனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஸ்ரீதரன், சண்முகராஜா, சோமி, சுஜித்தா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சாருகா, சசீகன், இந்திரஜித், கிறுத்திகா, அஸ்மி, சிவானி, நந், கிரன், சாருஜன் ஆகியோரின் பாசமிகு பேரனும், இராசரத்தினத்தின் (VVR) மைத்துனரும், கௌரி, ரவி, ஜெகன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணியளவில் சிறுப்பிட்டி காளையன்புலம் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

மனைவி - 077 657 9391, மகன் (மேனன்) - 077 404 2528,
மகள் (கஜம்) - 0041 792 860 694,
மகள் (மணி) - 0044 780 267 7758,
மகன் (சக்தி) - 0041 793 530118

## SCIENCE GARDEN

***English Medium Science Group Classes***

**Grade 6 - Grade 11 (Only for Girl Students)**

*Learning Science Through*
- ***Practical Sessions***
- ***Videos***
- ***Chapter examinations***
- ***Questions and Answers.***

**By an experienced Female Teacher in Thirunelvely.**
**Contact No:- 070 310 1212** (CS/29609)(11.17)

*Give Your Daughter the best head Start*

## வேலை வாய்ப்பு (ஆண்)

எமது நிறுவனத்தில் சிட்டையின்படி சாமான்கள் எடுப்பதற்கு முன் அனுபவமுள்ள ஆண்பிள்ளைகள் தேவை.
சம்பளம் - மாதம் 18000/= மேலும் நாளொன்றுக்கு சாப்பாட்டிற்காக 150/= தரப்படும். சுயவிபரக் கோவை. கிராமசேவகரின் நற்சான்றிதழுடன் நேரில் வரவும்.
(திங்கள் - சனி வரை முற்பகல் 10.00 - மாலை 4.30 வரை)

**தொடர்பு : சிவா நறுமணப் பூங்கா**
**இல - 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**
**(சத்திரச்சந்திக்கு அருகாமையில்)**
**021 222 2567** (C 11828)(4.17)

## மரண அறிவித்தல்

### வேலாயுதபிள்ளை திசைவீரசிங்கம்



தென்மராட்சி மந்துவிலை பிறப்பிடமாகவும், சுவீடனை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை திசைவீரசிங்கம் நேற்று (30.11.2019) சனிக்கிழமை சுவீடனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை - ஆசையம்மா தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான மாணிக்கவாசகர் தம்பதியரின் மருமகனும் (நுணாவில்), வள்ளிநாயகியின் அன்புக் கணவரும் பிரபா, தனுஷன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பொன்னுத்துரை மற்றும் மகேஸ்வரி காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, தங்கரத்தினம் ( மல்லிகா), மற்றும் துரைராஜசிங்கம், ஜெயவீரசிங்கம் ஆகியோரின் சகோதரரும், இராஜேஸ்வரி, கணபதிப்பிள்ளை, செல்வரத்தினம், செல்வராணி, வனஜா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சுவீடனில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**மந்துவில்** **021 790 1200**
**தகவல்:-** **அக்கா, பெறாமகன்**

## சேவையில் உயர்ந்தோனே!



Congratulations **வாழ்த்துகிறோம்**

எமது அளவெட்டி அபிவிருத்தி மன்ற முன்னாள் தலைவர், சமூகசேவையாளர்
**வை. சுப்பிரமணியம்**
அவர்கள்
அகில இலங்கை **சமாதான நீதிவானாக**
**யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி**
**அ.பிறேம்சாங்கர் அவர்கள்**
**முன்னிலையில்**
**சத்தியப்பிரமாணம்**
**செய்துகொண்டுள்ளார்.** சேவைகள் தொடர உளமார வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துவோர்:**
**அளவெட்டி அபிவிருத்தி மன்றம்**
**அளவெட்டி.** (cs.29597)(13.17)

## மரண அறிவித்தல்
## நேரமாற்றம்

### ஆனந்தசிவராசா ரஜானந்தன்



வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் நோர்வேயை வதிவிடமாகவும் கொண்ட ஆனந்தசிவராசா ரஜானந்தன் கடந்த **(19.11.2019)** செவ்வாய்க்கிழமை நோர்வேயில் இறைபதமடைந்துவிட்டார்.

தவிர்க்க முடியாத காரணத்தால் அன்னாரின் பூதவுடல் நாளை **(02.12.2019)** திங்கட்கிழமை காலை இல.**04**, பாரதி வீதி, கச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிச்சடங்கு **(03.12.2019)** செவ்வாய்க்கிழமை அன்று அவரது இல்லத்தில் நடைபெற்று **11.00** மணியளவில் வேலணை அம்பலவி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**077 007 0001**
**077 959 1251**
**தகவல்:** **நாகராசா குடும்பத்தினர்**

## காணி விற்பனைக்கு

மருதனார்மடம்- உரும்பிராய் வீதியில் 20 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

**தொடர்பு:- 076 697 2287**

## Hottel வாடகைக்கு உண்டு

வெள்ளவத்தையில் 10 Rooms (A/C) உடன் இணைந்த குளியலறை தளபாட வசதியுடன் காலி வீதிக்கு முகப்பாக உடனடி வாடகைக்கு விடப்படும். (cs )(14.17)

**0777 96 7878**

## வான் விற்பனைக்கு

**Toyota KR42 Noah Townace**
வான் விற்பனைக்கு

**( Doctor Use Only) 078 733 6228**

## உடனடி வேலைவாய்ப்பு

பிரபல்யமான கம்பனிக்கு உதவியாளர்கள், பணியாளர்கள் தேவை.
O/L, ஆண், பெண்

**077 146 9540**

## கார் விற்பனைக்கு

நல்ல நிலையில் பாவனையில் உள்ள **'HILLMAN MINI'** கார் உடன் விற்பனைக்கு.

**விலை 790.000/-**

**077 078 7111**

## Home Visiting Classes

ஆங்கிலத்தில் தடையின்றி எழுத வாசிக்க இலக்கணப் பிழையின்றி அடிப்படையில் இருந்து கற்றுத் தரப்படும்.

**Call: 077 531 7063**

## சேவை விபரம்

ஓடியல் தூம்பு இல்லாமல் மாவாக்குதல், மிக்சர் தேவைக்குரிய கடலை பருப்பு, அப்பள தேவைக்குரிய உழுந்து, மஞ்சள் என்பன விசேட இயந்திரம் மூலம் அரைக்கப்படும். மேலும் பயறு வறுத்து கோது நீக்குதல், ஆயுர்வேத மருந்து பொருட்கள், மாசி, உப்பு, கோப்பி, சீயாக்காய், உறைப்பு இல்லாமல் சரக்குத்தூள், புண்ணாக்கு, கோழித்தீவனம் அரைத்தல், நல்லெண்ணை, இலுப்பெண்ணை, தேங்காய் எண்ணை (25/-)ஊற்றுதல் (மரச்செக்கு Or இயந்திரமூலம்) மேலும் அனைத்து வகையான அரைத்தல் வேலைகளையும் ஒரே இடத்தில் செய்து கொள்ள பிருந்தா மில்.

**179.சிவன் பண்ணை வீதி, யாழ்ப்பாணம்.**
Tele - **077 991 2304**
**தொகையான வேலைக்கு விசேட விலைக்கழிவு உண்டு**
**(வேலைக்கு பெண் வேலையாட்கள் தேவை)**

## ஆஞ்சநேயர் உபாசகர் யாழ் வருகை



மாந்தீரிகம் (செய்வினை), கிரகதோஷங்கள் சம்பந்தப்பட்ட பீடைகளால் (தொழில், திருமணம், நிலம், வெளிநாட்டுப்பய்ணம் தடை) முதலியன சிக்கி பயங்கர வேதனையில் தவிப்போருக்கு முழுமையான விடிவு வவுனியாவில் பிரசித்தி பெற்ற ஆஞ்சநேயர் கோவில் உபாசகர் அங்குவரும் யாழ் மக்களின் சிரமங்களை 100% குறைப்பதற்காக ஒவ்வொரு செவ்வாய். புதன் கிழமைகளிலும் யாழ்ப்பாணத்தில் கீழ்கண்ட முகவரிக்கு வருகை தரவுள்ளார். 'எக்காரணம் கொண்டும் தீயவிடயங்கள் செய்து தரப்படமாட்டார்.

**பார்வை நேரம்:- மு.ப. 8.30 டிசம்பர் 3,4ம் திகதிகளில்**
**இல.1091 (நாச்சிமார் கோயில் அருகாமை கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்)**
**தொலைபேசியில் முற்பதிவு செய்து சிரமங்களை குறைக்கவும்.**

**தொடர்பு:- 076 759 4147, 077 008 3662**

## மரண அறிவித்தல்

### சுப்பிரமணியம் பிறேமறீஜன் (நிறஞ்சன்)



**தோற்றம்** **08.01.1973** **மறைவு** **29.11.2019**

ஐந்து வேம்படி, தாவடி தெற்கு, கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் பிறேமறீஜன் கடந்த 29.11.2019 வெள்ளிக்கிழமை இறைபதமடைந்து விட்டார்.

அன்னார் சுப்பிரமணியம் தனேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் பிறேமராசன், மதிவதனன், மதிறஜினா, மதீஸ்வரன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற உலகநாதன் மற்றும் புஸ்பவதி தம்பதிகளின் அன்பு மருமகனும் தேனுகாவின் அன்புக் கணவரும் சங்கீதன், பிரதீபன், பார்த்தீபன், கம்சிகா ஆகியோரின் அன்புத் தந்தையும் சசிகரன் (பிரான்ஸ்), உருத்திரகுமார் (வெள்ளை), தில்லைநாதன் (குட்டி), ரூபகாந்தன் (வவுனியா) மற்றும் காலஞ்சென்ற பாலகுமார் ஆகியோரின் மைத்துனரும் சுஜிதன், டினோஜன் ஆகியோரின் தாய்மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வன்னியசிங்கம் வீதி,**
**தாவடி வடக்கு.** (CS 29632)(14.17)
**தகவல் :**
**குடும்பத்தினர்.**

**077 008 1274**

## கேள்வி அறிவித்தல்
## பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை
## சபை நிதி - 2019


01. தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.
02. விலைக் கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
03. பொது நிர்வாகச் சுற்றறிக்கை 4/2016(i) இற்கமைவாகவும் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப் படாதவராகவும். அட்டவணையில் காட்டியபடி பொருத்தமான தரத்தில் கட்டுமான அமைப்புக்கான சிடா (CIDA) பதிவு மேற்கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள் விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 04 (Section IV) இலும் .மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) இலும் உள்ளடக்கப்பட்டுள்ளது.
05. அக்கறை கொண்டுள்ள தகைமையுடைய விலைக் கேள்வியாளர்கள் பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை (தொலைபேசி 021-205-0037 . தொலைநகல் 021-205-0036 இல் இருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் அக்கறை கொண்டுள்ள விலைக்கேள்வியாளர் ஆங்கில மொழியிலான விலைக் கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதி ஒன்றை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் 02.12.2019 ஆம் திகதியிலிருந்து 13.12.2019 ஆம் திகதி வரை காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 16.00 மணி வரையும், 16.12.2019 ம் திகதி காலை 9.00 மணியிலிருந்து பிற்பகல் 14.00 மணிக்கும். இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு கேள்வி ஆவணத்திற்கும் ரூபா 2000.00 (VAT நீங்கலாக) செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.
06. விலைக்கேள்விகள் இரு பிரதிகளில் தயாரித்து தவிசாளர், உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு, பச்சிலைப்பள்ளி பிரதேச சபை, பளை எனும் முகவரிக்கு 16.12.2019ஆம் திகதி பிற்பகல் 14.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
07. கேள்வி தொடர்பான முதற்கூட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை என்னும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் 09.12.2019 ஆம் திகதியன்று பிற்பகல் 14.30 மணிக்கு நடைபெறும். இதில் ஆர்வமுள்ள ஒப்பந்தகாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ள முடியும்.
08. கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டவாறான கேள்விப் பிணைப் பொறுப்பு கேள்வியுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
09. சமர்பிக்கப்பட்ட கேள்விகளை நிராகரிக்கவோ அல்லது மீள்கேள்வி கோரவோ பெறுகைக்குழுத்தலைவருக்கு அதிகாரம் உண்டு.

| கேள்வி அடையாள இலக்கம் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை VAT நீங்கலாக (Rs Mn) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப் பிணை | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பிணைவைப்பு (Rs) | செல்லுபடியாகும் காலம் |
| NP/14/45(3)/PL/C.F/W/09/2019 | Construction of Library Building at Iththavil | 4.3 | 3 மாதம் | C8 and C7 (கட்டுமானம்) | 86,000.00 | 16.03.2020 |
| NP/14/45(3)/PL/C.F/W 11/2019 | Renovation of Ayurvedic Building, Pulloppalai. | 1.8 | 2 மாதம் | C9 and C8 (கட்டுமானம்) | 36,000.00 | 16.03.2020 |

**சுப்பிரமணியம் சுரேன்**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சிமன்ற பெறுகைக்குழு**
**பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை.**

# மரண அறிவித்தல்கள்

## விஸ்வகுலதிலகர் கந்தையா சகாதேவன்



தோற்றம் 23.05.1940 மறைவு 28.11.2019

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியை பிறப்பிடமாகவும் பருத்தித்துறை மாதனையை வசிப்பிடமாகவும்கொண்ட கந்தையா சகாதேவன் (இசை அமைப்பாளர்) அவர்கள் 2019.11.28ம் திகதி இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம் கந்தையா - பொன்னம்மா ஆகியோரின் அன்பு மகனும் கனகலிங்கம். நகுலேஸ்வரன் ஆகியோரின் சகோதரனும் முத்துக் குமாரு மகேஸ்வரி. இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புக்கணவரும் வ.சவிதா (லண்டன்). சு.சுரபி. அகிலன் (அவுஸ்ரேலியா). வி.பாரதி (லண்டன்) ஆகியோரின் அன்புத் தந்தையும் வ. விக்னராசா (லண்டன்). ந. சுகந்தன். வி. விஜயதர்சன். ஆகியோரின் மாமனாரும் செல்வி வ. நிருத்திகா. நிவேதா ஆகியோரின் பேரனும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் நாளை (02.12.2019)ம் திகதி திங்கட்கிழமை பி.ப. 1.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோரியடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**மாதனை, பருத்தித்துறை,**
**0778997957**
**0771556477**



## கந்தசாமி கமலாவதி

மட்டுவில் சந்திரபுரத்தைப் பிறப்பிடமாகவும் இலக்கம் 171. படித்த மகளிர் திட்டம். மிருசுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி கமலாவதி 30.11.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மட்டுவில் வைரமுத்து சின்னாச்சிப்பிள்ளை தம்பதியரின் புத்திரியும். காலஞ்சென்றவர்களான மந்துவில் செல்லத்துரை அருளம்மா தம்பதியரின் மருமகளும். காலஞ்சென்ற செல்லத்துரை கந்தசாமியின் அன்பு மனைவியும். குமரகுருபரன் (யுனைடெட் பெற்றோல் செட்-கிளிநொச்சி). நிரஞ்சினி (லண்டன்). குமுதினி (லண்டன்). தர்சினி (ஆசிரியை- யா/எழுது மட்டுவாள் சிறிகணேசா வித்தியாலயம்) ஆகியோரின் அருமைத் தாயாரும். சாந்தசோதி (ஆசிரியை-பழைய முருகண்டி அ.த.க. பாடசாலை). விமலன் (லண்டன்). சுதர்சன் (லண்டன்) சுவாமிநாதன் (ஆசிரியர்-யா/இந்துக் கல்லூரி) ஆகியோரின் அருமை மாமியாரும். நயனிகா. டஸ்பியா (லண்டன்). ஆருஷ் (லண்டன்). மானஷி (லண்டன்). மகிஷ் (லண்டன்). மதுஷி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும். காலஞ்சென்றவர்களான ஆச்சிப்பிள்ளை. சிவபாக்கியம். சபாபதிப்பிள்ளை. ராஜசிங்கம் மற்றும் கார்த்திகேசு (கோப்பாய்). இராசநாயகம் (விசுவமடு) ஆகியோரின் அருமைச் சகோதரியும். காலஞ்சென்ற தம்பிராஜா மற்றும் வைரமுத்து (மட்டுவில்). புனிதவதி. மங்களேஸ்வரி. அன்னலட்சுமி. ரோசம்மா (கனடா). சுப்பிரமணியம் (சுவிஸ்). நடராஜலிங்கம் (பிரான்ஸ்). தெய்வானைப்பிள்ளை (மிருசுவில்). நாகராசா (கனடா). கதிர்காமசேகரம் (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. நண்பகல் 12 மணிக்கு மிருசுவில் படித்த மகளிர் திட்ட இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**

**077 13[illegible] / 077 337 6360**

SOS CHILDREN'S VILLAGES

## எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம் - யாழ்ப்பாணம்

எஸ்ஓஎஸ் சிறுவர் கிராமம் யாழ்ப்பாணத்துடன் இணைந்த எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையத்தில் NVQ - Level 3 தரத்திலான கீழ்வரும் புதிய பயிற்சிநெறிகள் முற்றிலும் இலவசமாக ஆரம்பிக்கப்படவுள்ளன. இதற்கான பயிலுநர்களை இணைத்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**பயிற்சி நெறிகள் (6 மாதங்கள் - உள்ளகப்பயிற்சி, 6 மாதங்கள் - வெளியகப்பயிற்சி)**

1. கணினி பிரயோக உதவியாளர் (Computer Application Assistant)
2. ஆங்கிலக்கற்கை நெறி (English)
3. குளிரூட்டலும் வளிச்சீராக்கலும் (Ref & Air Condition Mechanic)
4. அழகுக்கலை/சிகை அலங்கரிப்பு (Beautician & Hair Dresser)

**பயிற்சி நெறி 2 இற்கான தகைமைகள்**

- க.பொ.த சா/தரத்தில் கணிதம். ஆங்கிலம் உட்பட 06 பாடங்களில் சாதாரண சித்தியைக் கொண்டிருத்தல்.

**பயிற்சி நெறி 1, 3, 4 இற்கான தகைமைகள்**

- க.பொ.த சா/தரம் வரை கற்றிருத்தல்.

மேற்குறிப்பிட்ட தகைமைகளைக் கொண்டுள்ள 17 – 30 வயதிற்குட்பட்ட ஆண். பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தங்களது தொலைபேசி இல. மற்றும் பயிற்சி நெறியினை தெளிவாக குறிப்பிடப்பட்டு 15.12.2019 இற்கு முன்னர் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள காரியாலய முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

**நேர்முகத்தேர்விற்கான அழைப்பு தொலைபேசி மூலம் அறியத்தரப்படும்.**

தொ.பே: 021-221-1342 / 077-7859308

தொடர்புகளுக்கு:
எஸ்ஓஎஸ் தொழிற்பயிற்சி நிலையம்,
219, நாயன்மார்கட்டு,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மின்னஞ்சல்: nanthakumar.mahenthiran@soscvsrilanka.org
jaffna@soscvsrilanka.org

# அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு



## அமரர் கந்தவனம் தேவசிகாமணி

தோற்றம் 14.09.1941 மறைவு 02.11.2019

கடந்த 02.11.2019 சனிக்கிழமை அன்று சிவபதமடைந்த எங்கள் குடும்பத்தலைவர் அமரர் கந்தவனம் தேவசிகாமணி அவர்களின் வீட்டுக்கிரியைகள் நாளை (02.12.2019) திங்கட்கிழமை 11.30க்கு அவரின் வீட்டில் இடம்பெறும்.

இவர் கந்தவனம் - சரஸ்வதி தம்பதியின் அன்பு புதல்வனும் சரஸ்வதியம்மாவின் அன்பு கணவரும் தங்கரத்தினம், இராசலிங்கம், அழகம்மா ஆகியோரின் அன்புச் சகோதரனும் சறோஜினிதேவி (நீதிமன்ற சுருக்கெழுத்தாளர், திருமலை), பழனிவதன் (கனடா), சுதாகரன் (கனடா), தயாளினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் சுகந்தி (கனடா), யூடி (கனடா), கலைச்செல்வன் (நீதிமன்ற உத்தியோகத்தர், சாவகச்சேரி) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரியதர்சினி- ரங்கன், பல்லவி-ஜனகன், பிரியங்கா, லியோஹரி, கணேசாலினி, ஹரிகரன், காவியாயினி ஆகியோரின் அன்பு பேரனும் பிரதீஸ், மைலேஸ், பிரணவன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

இந்த அழைப்பினை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.

கல்லூரி வீதி,
பருத்தித்துறை.

**தகவல்:– குடும்பத்தினர்**
**077 913 8996 (மகள்)**

# மரண அறிவித்தல்

## திருமதி வாலமனோன்மணி சதாசிவம்



நவாலி தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வாலமனோன்மணி சதாசிவம் 30.11.2019 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் சதாசிவத்தின் அன்பு மனைவியும். காலஞ்சென்றவர்களான கந்தையா - தவமணி தம்பதியரின் அன்பு மகளும். காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - தெய்வானைப் பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும். சதானந்தி (பதில் அதிபர் - தாதியர் பயிற்சி கல்லூரி. வவுனியா) சதானந்தன் (ஆசிரி யர்-யா/இணுவில் மத்திய கல்லூரி). சதாரூபி (பிரான்ஸ்). சதாரூபன் (தாதிய உத்தியோகத்தர் - ஆதார வைத்தியசாலை. சாவகச்சேரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும். வைத்திய கலாநிதி நந்தகுமாரன் (பணிப்பாளர்-மாவட்ட பொது வைத்திய சாலை. வவுனியா). சிவசுகந்தினி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-வலய கல்வி அலுவலகம். வலிகாமம்). கிருபாகரன் (பிரான்ஸ்). லாவண்யா (அபிவிருத்தி உத்தியோகத்தர்-மாவட்ட செயலகம். கிளிநொச்சி). ஆகி யோரின் பாசமிகு மாமியாரும். பிரணவன். தரண்யா. ரிசோபனா. சிவசுதன். கீதன். சதானா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும். காலஞ்சென்ற குகானந்தன் (லண்டன்). அருணகிரிநாதன் (சுவிஸ்). லோகாம்பிகை. சிவானந்தன் (ஆஸ்திரேலியா). ஸ்ரீதேவி (ஜேர்மனி). ஜோன்ராஜன் (சுவிஸ்). உதயகுமார் (லண்டன்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (01.12.2019) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் நவாலி தெற்கு கொத்துக்கட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார். உறவினர்கள். நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ரங்கூன் இல்லம்,**
**மாரியம்மன் வீதி,**
**நவாலி தெற்கு, மானிப்பாய்.**

**தகவல்: குடும்பத்தினர்.**

## தமிழர்...

இலங்கையில் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, சமாதானம், மதிப்பு ஆகியவை குறித்த வேணவாக்களை நிறைவேற்றும் நல்லிணக்க நடைமுறையை புதிய அரசு முன்னெடுக்கும் என்று தான் எதிர்பார்ப்பதாகவும், அதில் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்துவது மிகவும் அவசியம் என்றும் இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி புதுடில்லியில் இலங்கை அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச முன்னிலையில் நேற்றுமுன்தினம் தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நிலைப்பாடு என்னவென்று அதன் தலைவர் இரா.சம்பந்தனிடம் வினவியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகள் தொடர்பிலும், அதற்கான அரசியல் தீர்வு விடயம் குறித்தும் இந்தியா அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றது. அதாவது சுமார் 40 வருடங்களுக்கு மேலாக இலங்கைத் தமிழர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் விவகாரத்தில் இந்தியா நேரடியாகத் தலையிட்டு வருகின்றது. இதை இலங்கை வாழ் தமிழ் மக்கள் சார்பில் நாம் வரவேற்கின்றோம்- பெரிதும் மதிக்கின்றோம்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தம் முழுமையாக நிறைவேற்றப்பட வேண்டும் எனவும், அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் தமிழ் மக்களுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும் எனவும் இலங்கை அரசிடம் இந்திய அரசு தொடர்ச்சியாகக் கோரிக்கை விடுத்து வருகின்றது.

இந்தக் கோரிக்கையை வேண்டுகோளை நிறைவேற்றுவோம் என்று முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசால் இந்திய அரசுக்குப் பல தடவைகள் வாக்குறுதிகளும் வழங்கப்பட்டிருக்கின்றன. 1987ஆம் ஆண்டுக்குப் பின்னர் முன்னாள் அரச தலைவர்களான ரணசிங்க பிரேமதாச, சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மற்றும் மகிந்த ராஜபக்ச ஆகியோர் தலைமையிலான அரசுகளினால் அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த பல முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

இந்தநிலையில், அரச தலைவர் கோத்தபாய ராஜபக்ச தலைமையிலான புதிய அரசாவது இந்திய அரசின் தொடர் கோரிக்கையான அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்தியத் தலைமை அமைச்சர் நரேந்திர மோடி தலைமையிலான அரசு விரும்புகின்ற எதிர்பார்க்கின்ற இலங்கைத் தமிழ் மக்களின் சமத்துவம், நீதி, சமாதானம், மதிப்பு ஆகியவை குறித்த வேணவாக்களை நிறைவேற்றும் நல்லிணக்க நடைமுறையை அரச தலைவர் கோத்தபாய அரசு முன்னெடுக்க வேண்டும்.

பிளவுபடாத ஒருமித்த நாட்டுக்குள் அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வுடன் கூடிய அரசியல் தீர்வைக் காண்பதற்கான நடவடிக்கையில் கோத்தபாய அரசு இறங்கவேண்டும் எனவும், இதற்கு இந்திய அரசு சகல விதமான ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் எனவும் தமிழ் மக்கள் சார்பில் இந்தச் சந்தர்ப்பத்தில் விநயமாகக் கேட்டுக்கொள்கின்றோம் -என்றார். (ஒ.5,22)

## பிராந்திய...

இன்று பதவியேற்கவுள்ளார்.

முன்னதாக இவரை ஐ.நா. பொதுச்செயலர் அன்ரனியோ குரெரெஸ், ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்துக்கான உதவி செயலர் நாயகமாகவும், உதவி நிர்வாகியாகவும் நியமித்திருந்தார்.

கன்னி விக்னராஜா ஐ.நா. முறைமைகளில் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நீண்டகால அனுபவம் கொண்டவராவார்.

இவர் யுஎன்டிபியின் நாடு, பிராந்திய மற்றும் பன்னாட்டு அளவில் ஆசிய மற்றும் ஆபிரிக்க கண்டங்களில் பணியாற்றியுள்ளார்.

இலங்கையில் பிறந்த கன்னி விக்னராஜா பிறின்ஸ்ரென் பல்கலைக்கழகத்தில் பொது நிர்வாகத்துறையில் முதுமாணி பட்டம் பெற்றவர். அமெரிக்காவில் பொருளாதாரத் துறையில் இளமாணி பட்டம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## தூதரக...

ரணை நடத்தப்பட வேண்டும் என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

இந்தவிடயம் தொடர்பாகபதில்பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழு எழுதிய கடிதத்தில், சம்பவம் குறித்து முழுமையான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்துமாறு அதன் தலைவர் அறிவுறுத்தியுள்ளார்.

'சட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் பொதுமக்களின் நம்பிக்கையை வலுப்படுத்தவும், அச்சசூழ்நிலையை போக்கவும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடையவர்களை கண்டுபிடிப்பதற்கு விரைவான மற்றும் பக்கச்சார்பற்ற விசாரணையை நடத்த வேண்டும்' என்று ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் தீபிகா உடகம தெரிவித்தார்.

மேலும் கடத்தப்பட்ட இளம் பெண்ணின் சார்பாக நீதி பெறப்பட வேண்டும் என்பது மட்டுமல்லாமல், பொதுமக்களுக்கு உறுதியளிக்கும் தேவையும் பதில் பொலிஸ்மா அதிபருக்கு உண்டு என்று அவர் அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை தூதரகத்தின் அதிகாரி ஒருவர் கடத்தப்பட்டதாகக் கிடைத்த தகவல் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்களம் விசாரணைகளை ஆரம்பித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (ஒ.5)

## முல்லைத்தீவில்...

லைத்தீவு துணுக்காய் பிரதேச செயலகத்தில், வவுனிக்குளம் நீர்ப்பாசனத் திணைக்களத்தின் பிரிவுக்குட்பட்ட புத்துவெட்டுவான் மருதங்குளம் உடைப்பெடுக்கும் அபாயத்திலுள்ளது.

மருதங்குளமானது சுமார் 9.5அடி நீரை தேக்கிவைத்திருக்கக்கூடிய குளமாகும். அண்மைய நாள்களாக பெய்துவரும் கனமழை காரணமாக இந்தக் குளத்தில் நீர் நிரம்பிக் காணப்படுவதுடன், கலிங்கு கட்டுப் பகுதியில் பாரிய அளவில் நீர்க்கசிவும் ஏற்பட்டுள்ளது.

கலிங்கு கட்டுப் பகுதியில் ஏற்பட்டுள்ள பெரிய நீர்க்கசிவைத் தடுப்பதற்கான முயற்சியில் நீர்ப்பாசனத் திணைக்களத்தினர் மற்றும் பொதுமக்கள் ஈடுபட்டபோதும் அந்த முயற்சி பயனளிக்கவில்லை. நீர்க்கசிவு ஏற்படும் பகுதியில் ஆறு அடியளவில் நீர்தேங்கி நிற்பதால், நீர்க்கசிவை தடுக்கும் பணி கைவிடப்பட்டுள்ளது.

குளத்தின் வால்கட்டுப் பகுதியால், சுமார் இரண்டு அடியளவில் நீரை வெட்டி வெளியேற்றுவதற்கான செயற்பாடுகள் இடம்பெறுவருகின்றன. நீரை வெளியேற்றி, குளத்தில் நீரை குறைப்பதன் மூலம், நீர்க்சிவை தடுக்க முடியமென வவுனிக்குளம் நீர்ப்பாசனத்திணைக்கள தொழில்நுட்ப உத்தியோகத்தர் தெரிவித்தார்.

அதேவேளை இவ்வாறு வெட்டியகற்றப்படும் நீரானது, பாதுகாப்பாக அக்கராயன் குளத்தினைச் சென்றடையுமெனவும், இதனால் பொதுமக்களுக்கு எவ்வித பாதிப்புக்களும் இல்லை என்பதுடன், தாம் இது தொடர்பில் எச்சரிக்கையுடன் இருக்குமாறும் அப்பகுதி பொதுக்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாக முல்லைத்தீவு மாவட்ட இடர் முகாமைத்துவ உதவிப் பணிப்பாளர் தெரிவித்தார். (ஒ.5,246)

## இரணைமடு...

யுள்ளது. இந்தக் குளம் மறுசீரமைக்கப்பட்டு அதன் நீர்க் கொள்ளவு 36 அடியாக உயர்த்தப்பட்டது. கடந்த ஆண்டு கன மழை காரணமாக இந்தக் கொள்ளவை அடைந்ததுடன், மேலதிக நீர் வெளியேறப்பட்டு கிளிநொச்சி மாவட்டத்தில் பெரும் இடர் ஏற்பட்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு நேற்று மாலை வரையில் 21.3 அடி வரையிலேயே நீர் தேங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதனால், அடுத்த ஆண்டு சிறுபோக நெற்செய்கை பாதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ஒ.5,105)

## கடத்தல்...

சஜித் பிரேமதாச வலியுறுத்தியுள்ளார்.

அரச தலைவர் தேர்தல் தோல்வியின் பின்னர் மௌனம் காத்து வந்த சஜித், நேற்று அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிக்கையிலேயே அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

சுவிஸ் தூதரக அதிகாரியொருவர் கடத்தப்பட்டு விசாரிக்கப்பட்டமை, சில ஊடகவியலாளர்கள் மீதான தேவையற்ற அழுத்தங்கள் தொடர்பில் பக்கச்சார்ப்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று அந்த அறிக்கையில் சஜித் வலியுறுத்தியுள்ளார்.

சுவிஸ் தூதரக அதிகாரி கடத்தப்பட்டமை இராஜதந்திர உறவுகளின் வரலாற்றில் கறுப்பு நாள் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

'தகுதிவாய்ந்த மற்றும் அனுபவம் வாய்ந்த பொலிஸ் அதிகாரிகள் அரசியல் பழிவாங்கலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். பல ஊடகவியலாளர்கள் மிரட்டப்பட்டுள்ளனர். இது கருத்துச் சுதந்திரம் மற்றும் மக்களின் தகவல் அறியும் உரிமைக்கு எதிரான செயல்' என்றும் சஜித் கூறியுள்ளார்.

இவ்வாறான விடயங்களில் சிறப்புக் கவனம் செலுத்தி உடனடி நடவடிக்கை எடுக்குமாறும் அரச தலைவர் கோத்தபாய ராஜபக்சவிடம் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ஒ.5,22)

## சிறுமிக்கு...

னித்துள்ளனர். அது தொடர்பில் சிறுமியிடம் விசாரணை முன்னெடுத்துள்ளனர்.

ஆலயப் பூசகர் ஒருவரே அதனை வாங்கித் தந்ததாகத் தெரிவித்துள்ளார். சிறுமியின் தகவலையடுத்து பாடசாலை ஆசிரியர், சிறுவர் நன்னடத்தை உத்தியோகத்தருக்கு தகவல் வழங்கியுள்ளனர்.

அவர்கள் வல்வெட்டித்துறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்தனர். அத்துடன் சிறுமியிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

ஆலயப் பூசகர், வழிபாடுகள் முடிவடைந்த பின்னர் பிரசாதம் வழங்குவதற்காக தன்னை கைபேசி ஊடாக அழைப்பதாக சிறுமி பொலிஸ் முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார். ஆலய மடப்பள்ளியில் வைத்து சிறுமியை அங்கசேட்டை செய்வதாகவும் முறைப்பாட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று சித்தப்பா ஒருவரும் நடந்து கொள்கின்றார் என்று சிறுமி தனது வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ளார். மேலும்பிரசாதத்துடன் ஆலயப் பூசகர் பணம் வழங்குவதாகவும் தெரிவித்த சிறுமி, அதனைச் சேர்த்து வைத்துள்ளதாகவும் தெரிவித்து பொலிஸாருக்கு சான்றாதாரமாக வழங்கியுள்ளார்.

சிறுமியிடம் இருந்த கைபேசியின் சிம் அட்டை ஆலயப் பூசகரின் பெயரில் இருந்தமையைக் கண்டறிந்த பொலிஸார், 72 வயதான பூசகரையும், 50 வயதான சிறுமியின் சித்தப்பாவையும் கைது செய்து நீதிமன்றில் நேற்று முற்படுத்தினர். அவர்களை 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது. (ஒ.5,26)

## கிளிநொச்சியில்...

மாணவனான விக்னராசா சாரங்கன் (வயது-22) என்ற இளைஞனே உயிரிழந்துள்ளான். இந்தச் சம்பவம் நேற்றுக் காலை இடம்பெற்றுள்ளது.

சிவநகர் பகுதியில் அமைந்துள்ள உயிரிழந்த இளைஞனின் தந்தைக்குச் சொந்தமான அரிசி ஆலையில், வெள்ள நீர் காணப்பட்டுள்ளது. மோட்டர் ஊடாக அதனை வெளியேற்ற முற்பட்டபோது மின்சாரம் தாக்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இளைஞன் உடனடியாக மயங்கியுள்ளான். கிளிநொச்சி மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளான். மருத்துவர்கள் பரிசோதனை மேற்கொண்டு இளைஞன் உயிரிழந்ததாகத் தெரிவித்துள்ளனர். (ஒ.5,105)

## வடக்கிலிருந்து...

குணரத்ன அறிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு நேற்றுக் காலை சென்ற பாதுகாப்புச் செயலர் அதன் பின்னர் அஸ்கிரியபீட பதிவாளர் மெதகம தம்மானந்த தேரர் மற்றும் அஸ்கிரியபீட மகாநாயக்கர் திப்பட்டுவாவே சிறி சுமங்கல தேரர் ஆகியோரை சந்தித்து ஆசி பெற்றுக்கொண்டார்.

அதன் பின்னர், ஊடகங்களுக்குக் கருத்து வெளியிட்ட அவர், இம்முறை வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் எந்த வொரு சட்டவிரோத சம்பவங்களும் பதிவாகாததால் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கூறினார்.

இருந்த போதிலும் எதிர்காலத்தில் இந்தச் செயற்பாடுகள் குறித்து சிறப்பு வேலைத் திட்டமொன்றை முன்னெடுக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதேபோல வடக்கிலிருந்து எந்தக் காரணத்திற்காகவும் படை முகாம்களையோ அல்லது படையினரையோ அகற்ற நடவடிக்கை எடுக்கமாட்டோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ஒ.5,22)

## நீதிக்காகப்...

பால சிறிசேன தெரிவித்தார்.


பொலனறுவையில் மைத்திரிபால சிறிசேனவுக்கு அவரது சேவையைப் பாராட்டி மிகப் பெரும் நிகழ்வு நடத்தப்பட்டது. அதில் பங்கேற்று உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2014ஆம் ஆண்டு ராஜபக்சவை விட்டு நான் வெளியேறும்போது கருங்கல்லில் மோதினீர்கள் என்று எனது ஊரில் கூறினார்கள். ஆனால், எனக்கு அதைப்பற்றி கவலை, அச்சம் இருக்கவில்லை. இப்போதும் எனது பதவிக்காலம் முடிந்தவுடன் என் கதை முடிந்துவிட்டதாகச் சிலர் நினைக்கின்றனர். இல்லை நான் மீண்டும் அரசியலுக்கு வருவேன்.

கூடுதல் அவமானங்களைச் சந்தித்தவர் புத்தர். இயேசுவை சிலுவையில் அறைந்தனர். தாமரை மொட்டு கொடுத்து காந்தியைச் சுட்டார் கோட்சே. அநீதி செய்பவர்கள் வாழலாம். ஆனால், நீதிக்காகப் போராடும் ஒருவனாக நான் மீண்டும் வருவேன். எனது இறுதி மூச்சை சுவாசிக்கும்வரை நாட்டுக்கும் மக்களுக்கும் சேவையாற்றுவேன். அதை எவராலும் தடுக்கவே முடியாது -என்றார். (ஒ.5,22)





## உருளைப் பந்து அறிமுக நிகழ்வு

வவுனியா,டிசெ.1

வவுனியாவில் உருளைப் பந்து விளையாட்டு அறிமுக நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இலங்கை உருளைப் பந்து சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வு அதன் செயலரும், பயிற்றுவிப்பாளருமான நரேந்திரன் தலைமையில் இடம்பெற்றது.

முன்னதாக வவுனியா மாவட்டச் செயலகம், சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம், மற்றும் உருளைப் பந்து சம்மேளனம் ஆகியவை இணைந்து டெங்கு ஒழிப்பு விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்றை முன்னெடுத்தனர். குறித்த ஊர்வலம் வவுனியா மாவட்டச் செயலகத்தில் ஆரம்பித்து நகர் வழியாக நகரசபை நிகழ்வுகள் ஒழுங்குபடுத்தப்பட்டிருந்த தனியார் விருந்தினர் விடுதிக்கு சென்றிருந்தது. ஏனைய நிகழ்வுகள் அங்கு இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான் கலந்து கொண்டதுடன்,சிறப்பு விருந்தினர்களாக நகரசபை தலைவர் இ.கௌதமன்,பிராந்திய நோயியலாளர் வைத்தியர் லவன், சிங்கள பிரதேச செயலர் ஜானக, மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் பர்சூக் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

நிகழ்வில் உருளை பந்து விளையாட்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்டதுடன் ,அதன் பயன்கள் தொடர்பாகவும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு தெளிவூட்டப்பட்டது. (110)

## முத்துத்தம்பி மாணவன் கஜன் பதக்க வேட்டை



யாழ்ப்பாணம், டிசெ.1

கல்வி அமைச்சால் முதன்முறையாக நடத்தப்பட்ட தேசிய மட்ட விசேட கல்வி விளையாட்டு விழாவில் திருநெல்வேலி சைவச் சிறுவர் இல்லத்தைச் சேர்ந்தவரும், யா/முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவனுமான இராசேந்திரம் கஜன் தங்கப் பதக்கங்களைச் சுவீகரித்தார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற 20 வயதுப் பிரிவு ஆண்களுக்கான 100 மீற்றர், 75 மீற்றர், தட்டு எறிதல் ஆகிய போட்டிகளில் பங்குபற்றி அவர் தங்கப் பதக்கங்களைக் கைப்பற்றினார்.

## தட்டெறிதலில் யதுசனுக்கு 4ஆம் இடம்

யாழ்ப்பாணம், டிசெ.1

இலங்கை பாடசாலைகள் மெய் வன்மைச் சங்கம் நடத்தும் 50ஆவது கனிஸ்ர பிரிவினருக்கான சேர்.ஜோன் ரப்பட் மெய்வன்மைப் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் பி.யதுசன் வர்ணச் சான்றிதழோடு 4ஆம் இடத்தைப் பெற்றார்.

கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதல் போட்டியில் மானிப்பாய் இந்துக் கல்லூரி மாணவன் பி.யதுசன் 46.22 மீற்றர் தூரம் எறிந்து வர்ணச் சான்றிதளோடு 4ஆம் இடத்தைப் பெற்றுள்ளார். (23)



## முதலாவது இன்னிங்ஸில் இங்கிலாந்து தடுமாற்றம்




இங்கிலாந்து அணிக்கெதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியின் முதல் இன்னிங்சில் நியூசிலாந்து அணி 375 ஓட்டங்களைக் குவித்தது.

இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் டெஸ்ட் தொடரை நியூசிலாந்து அணி கைப்பற்றிய நிலையில், 2ஆவது டெஸ்ட் தொடர் நேற்றுமுன்தினம் ஹமில்ரனில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் நியூசிலாந்து அணியைத் துடுப்பெடுத் தாடுமாறு பணித்தது. களமிறங்கிய நியூசிலாந்து அணி முதல் நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 173 ஓட்டங்க [illegible] லாதம் 101 ஓட்டங்களுடனும், நிக்கோலஸ் 5 ஓட்டங்களுடனும் நேற்றைய நாளுக்காகக் களமிறங்கினர். லாதம் களமிறங்கிய நேற்றைய நாளில் 4 ஓட்டங்களைப் பெற்று மொத்தமாக 105 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தார். பின்னர் ஒரு சீரான இடைவெளிகளில் இலக்குகள் சரிந்தன. வற்லிங், மிட்சல் இணை நீண்ட நேரத்துக்குப் பின்னர் அணிக்கு நம்பிக்கையளித்தனர். வற்லிங் 55 ஓட்டங்களுடனும், மிட்செல் 73 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்க பின் வரிசை வீரர்கள் பெரிதும் சோபிக்காது போக அணி 375 ஓட்டங்களைப் பெற்று சகல இலக்குகளையும் இழந்தது. பந்து வீச்சில் ஸ்டூவர்ட் பிராட் 4 இலக்குகளையும், கிறிஸ் வோக்ஸ் 3 இலக்குகளையும், சாம் கரன் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

தனது முதலாவது இன்னிங்ஸுக்காகக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக பேர்ன்ஸ், டாம்சிம்லே களமிறங்கினர். அணி 11 ஓட்டங்களைப் பெற்ற போது டிம் சவூத்தியின் பந்து வீச்சில் முதலாவது இலக்குச் சரிக்கப்பட்டது. டாம் சிம்லே எல்.பி.டபிள்யு முறையில் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய டென்லியும் 4 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்ப அணி நேற்றைய நாள் முடிவில் 2 இலக்குகளை இழந்து 39 ஓட்டங்களைப் பெற்றது. பேர்ன்ஸ் 24 ஓட்டங்களுடனும், அணித்தலைவர் ரூட் 6 ஓட்டங்களுடனும் களத்திலுள்ளனர். பந்து வீச்சில் சவூத்தி ஹன்றி தலா ஒவ்வொரு இலக்கைக் கைப்பற்றினார்.


## ஹாட்லிக் கல்லூரி மாணவன் திருமாலுக்கு வர்ணச் சான்றிதழ்



யாழ்ப்பாணம், டிசெ.01

இலங்கை பாடசாலைகள் மெய்வன்மைச் சங்கம் நடத்தும் 50 ஆவது கனிஸ்ர பிரிவினருக்கான சேர். ஜோன் ரப்பட் மெய்வன்மைப் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ரி.திருமால் வர்ணச் சான்றிதழ் பெற்றார்.

கொழும்பு சுகததாசவிளையாட்டரங்கில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற 15வயதுப் பிரிவு ஆண்களுக்கான ஈட்டி எறிதல் போட்டியில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவன் ரி.திருமால் 8 ஆம் இடத்தைப் பெற்றதுடன் வர்ண விருதையும் கைப்பற்றினார். (23)



# டேவிட் வோர்னர் முச்சதம் விளாசல்

## அசைக்க முடியாத இடத்தில் ஆஸி.



டேவிட் வோர்னர் தனது முதல் முச்சத்தை அடித்து 83 ஆண்டுகளின் பின்னர் பிராட்மேனின் சாதனையை முறியடித்து அசத்த ஆஸ்திரேலியா அணி முதல் இன்னிங்ஸில் 3 இலக்குகளை இழந்து 589 ஓட்டங்களைக் குவித்தது. பாகிஸ்தான் அணி ஆஸ்திரேலியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. இரு அணிகளுக்குமிடையில் 2 போட்டிகள் கொண்ட தொடரில் முதல் போட்டியை ஆஸ்திரேலியா அணி 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியுள்ள நிலையில், இரண்டாவது போட்டித் தொடர் நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸ்திரேலியா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணி நேற்று முன்தின நாள் முடிவில் ஓர் இலக்கை மாத்திரம் இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றது. டேவிட் வோர்னர் 166 ஓட்டங்களுடனும், லாபஸ்சாக்னே 126 ஓட்டங்க்ளுடனும் நேற்றை இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். இருவரும் முதல் நாளில் சதம் கடந்த களிப்பில் நிதானமாக ஓட்டங்களை சேர்ப்பதில் கவனம் செலுத்தினர். லாபஸ்சாக்னே 162 ஓட்டங்கள் பெற்ற போது சான் அப்ரிடியின் பந்து வீச்சில் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் சிமித். அவர் வோர்னருடன் இணைந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தார். வோர்னர் மறுமுனையில் அதிரடி காட்டி முச்சதம் கடந்தார். சிமித் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். பின்னர் களமிறங்கிய வூட்டும் வோர்னருக்கு சிறந்த இணைப்பாட்டத்தைக் கொடுக்க, வோர்னரின் அதிரடி பலமாகியது. அவரின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே இருந்தது. அவர் 39 நான்கு ஓட்டங்கள் ஓர் ஆறு ஓட்டம் அடங்கலாக 335 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றிருந்தார். அப்போது போட்டியை இடைநிறுத்துவதாக ஆஸ்திரேலியா அணித் தலைவர் டிம் பெய்ன் அறிவித்தார். இது ரசிகர்களிடத்திலே பெரும் கேள்வியை எழுப்பியது. வோர்னர், பிரையன் லாராவின் ஓர் இன்னிங்ஸில் அதிகூடிய டெஸ்ட் ஓட்ட சாதனையை முறியடிப்பாரா என்று எதிர்பார்க்கப்பட்ட வேளையில், ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது பெரும் ஏமாற்றம் அளித்தது. இருந்தும் ஆஸ்திரேலிய



ஆஸ்திரேலியா அணி 3 இலக்குகளை இழந்து 589 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. அத்துடன் நேற்றைய நாளுக்கான ஜாம்பவான் பிராட்மேன் டெஸ்ட் போட்டியில் அதிக பட்சமாக பெற்ற 334 ஓட்டங்களை வோர்னர் முறியடித்தார்.

## பிராட்மேன் சாதனையை முறியடித்தார் வோர்னர்

அடிலெய்டில் நடந்து வரும் பாகிஸ்தானுக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டியில் ஆஸ்திரேரலிய வீரர் டேவிட் வோர்னர் முச்சதம் அடித்து பிராட்மேன் சாதனையை முறியடித்துள்ளார்.

ஆஸ்திரேலிய ஜாம்பவான் பிராட்மேன் டெஸ்ட்டில் அதிகபட்சமாக 334 ஓட்டங்களைப் பெற்றார். அதனை தற்போது டேவிட் வோர்னர் 335 ஓட்டங்கள் எடுத்து 83 வருடங்களின் பின்னர் பிராட்மேன் சாதனையை முறியடித்துள்ளார். வோர்னர் டெஸ்ட் போட்டியில் அடிக்கும் முதலாவது முச்சதம் இதுவாகும். கடந்த 2012ஆம் ஆண்டு மைக்கல் கிளார்க் 329 ஓட்டங்களை இந்தியாவுக்கு எதிராக அடித்திருந்தார். அதன்பின் 7 ஆண்டுகளுக்குப் பின்பு ஆஸ்திரேலிய அணி வீரர் வோர்னர் முச்சதம் அடித்துள்ளார். வோர்னரின் இந்த முச்சதம் ஆஸ்திரேலியாவின் 7ஆவது வீரர் அடிக்கும் முச்சதம் ஆகும்.

## ஸ்டீவ் சிமித் புதிய சாதனை

ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவ் சிமித் டெஸ்ட் போட்டியில் 73 ஆண்டுகளாக முறியடிக்காமல் இருந்த சாதனையை முறியடித்து புதிய வரலாறு படைத்தார்.

கிரிக்கெட் வரலாற்றில் மிக விரைவாக டெஸ்ட் போட்டியில் 7 ஆயிரம் ஓட்டங்களை எட்டி, 73 ஆண்டுகளாகத் தக்கவைத்திருந்த இங்கிலாந்து வீரர் வாலே ஹாமாண்ட் சாதனையை சிமித் முறியடித்தார். கடந்த 1946ஆம் ஆண்டில் இங்கிலாந்து வீரர் வாலே ஹாமாண்ட் தனது 131 இன்னங்ஸில் 7 ஆயிரம் ஓட்டங்களை அடித்தார். இதனை சிமித் தனது 126 இன்னிங்ஸில் 7 ஆயிரம் ஓட்டங்களை எட்டி அவரின் சாதனையை முறியடித்தார்.

அடிலெய்டில் பாகிஸ்தானுக்கு எதிரான பகலிரவு டெஸ்ட் போட்டி நடைபெற்று வருகின்றது. இதில் அவர் 34 ஓட்டங்களை எட்டிய போது ஸ்மித் இந்தச் சாதனையைப் படைத்தார். எனினும் அவர் 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்திருந்தார்.



**ALLIANCE FRANCAISE DE JAFFNA**
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்

af பிரெஞ்சு மொழி



- பிரெஞ்சு கற்பதற்கு வடமாகாணத்தில் **FRENCH EMBASSY** கீழ் இயங்கும் சர்வதேச நிறுவனம் **ALLIANCE FRANCAISE** மட்டுமே.
- அங்கீகரிக்கப்பட்ட **CERTIFICATES & INTERNATIONAL DIPLOMAS (DELF, DALF)**
- யாரும் படிக்கலாம்.

www.ambafrancelk.org

**021 222 8093** 17, Kandy Road, Jaffna

# ரியல் மட்ரிட் சிறப்பாட்டம்

ஐரோப்பிய கழகங்களுக்கிடையில் இடம்பெற்று வரும் லா லிகா தொடரில் நேற்று இடம்பெற்ற போட்டியொன்றில் ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கணக்கில் வெற்றி பெற்றது.

ரியல் மட்ரிட் - அல்வ்ஸ் அணிகள் மோதிய முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய போதிலும் முதல் பாதியில் அவர்களால் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பித்த 52ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் அணி வீரர் ராமோஸ் தனது அணிக்கான முதல் கோலைப் பதிவு செய்தார். ஆட்டத்தின் 69 ஆவது நிமிடத்தில் அல்வ்ஸ் அணிக்கு கிடைத்த பெனால்டி வாய்ப்பை அந்த அணி வீரர் லூகாஸ் பிரிஸ் கோலாக மாற்ற 1:1 என்ற கணக்கில் சமநிலையானது. எதிரணியினர் கோல் அடித்த 4ஆவது நிமிடத்தில் ரியல் மட்ரிட் வீரர் டானி ஹர்வயல் 69ஆவது நிமிடத்தில் கோல் ஒன்றைப் போட இறுதியில் ரியல் மட்ரிட் அணி 2:1 என்ற கணக்கில் அல்வ்ஸ் அணியை வீழ்த்தி வெற்றி பெற்றது.

**நத்தார் புதுவருடத்தை முன்னிட்டு**
**விசேட விலைக் கழிவு**

**$A^4$ போட்டோ கொப்பி இரண்டு பக்கங்களுக்கு ரூ. 2/=**

**அற்லஸ் அப்பியாசக் கொப்பிகள் விலைக்கழிவு 15%**
**வெஸ்ரேன் யூனியன்** மூலமாக அனுப்பப்படும். பாதுகாப்பாகவும் மற்றும் இலகுவாகவும் இங்கு பெற்றுக்கொள்ளலாம்.

**LUXON ENTERPRISE**
No.77B, Old Park Road Junction. Jaffna.
Tel: 021 222 5335 (பூங்காவிற்கு முன்பாக)

**Maths Classes**
தரம் 6 - 11
தமிழ் மொழி மூலம் ஆங்கிலமொழி மூலம்
**M.Asupathy**
ஆடியபாதம் வீதி, கொக்குவில் மேற்கு.
077 936 1728

**ICT வகுப்புக்கள்**
A/L, O/L, ICT வகுப்புக்கள்
தனிப்பட்ட வகுப்புக்களாகவோ. குழு வகுப்புக்களாகவோ கற்பிக்கப்படும்.
ஆசிரியர்: திரு. S. சத்தியன் (B.Sc) PGDE
இடம்: யாழ் நகர், சாவகச்சேரி
077 27[illegible] 8498

**விற்பனைக்கு**
ரியூட்டரி மேசை, வாங்குகள், கரும்பலகைகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 230 6653

**வேலையாள்கள் தேவை**
சைவ உணவகத்துக்கு அனுபவம் வாய்ந்த
1. றொட்டி வேலை,
2. Tea Maker,
3. Supplier,
4. சமையல்காரர் தேவை



தொடர்புகளுக்கு:-
076 000 1695

**பணிப்பெண் தேவை**
மானிப்பாயில் வசித்துவரும் வயோதிபப் பெண் ஒருவரை வீட்டில் தங்கியிருந்து பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.
077 045 6898

**MIS ICT COLLEGE**
Branch I : #74, Sabapathy Lane, Kokuvil, Jaffna
Branch II: Near Kondavil Junction
திரு. இ. குமரன்- B.Sc.

A/L ICT O/L ICT
Gr.10 ICT Gr.6-9 ICT
O/L வழைமையான நேரங்களில்

New Gr.10 Batches 17 years
Commences on (Introduction / admission)
02/12/2019 - 1.00 pm, Monday
**Tamil / English Medium**
Call: 077 6577359

**பிரத்தியேக வகுப்பு**
தமிழ்மொழியும் இலக்கியமும் ( 6 - 11)
தமிழ் இலக்கியம் (10,11)
ஆசிரியர் :- ரகுபதி பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
ஆரம்பம் :- 02.12.2019
077 938 9478

**NEW MATHS COLLEGE**
158, கன்னாதிட்டி யாழ்ப்பாணம் (Science Hall க்கு அருகாமையில்)
**புதிய கல்வியாண்டு - 2020**
தரம் 6-11
வரையிலான English Medium, தமிழ் மொழி மூலமான கணித பாட வகுப்புக்கள்.
ஆரம்பம் : இன்று 01.12.2019 ஞாயிற்றுக்கிழமை

| | | |
|---|---|---|
| தரம் – 6 | T.M / E.M மு.ப | 9.00 – 9.30 வரை |
| தரம் – 7,8 | T.M / E.M மு.ப. | 6.30 – 8.30 வரை |
| தரம் – 9,10,11 | T.M / E.M பி.ப. | 2.00 – 5.00 வரை |

தொடர்பு - 0777071961 ஆசிரியர் - K.உமாகரன்

**கடை வாடகைக்கு**
கொக்குவில் சந்திக்கும் பூநாறி மரத்தடிக்கும் இடையில் 27 அடி அகலமுடைய கடை வாடகைக்கு உண்டு.
077 334 2428, 076 765 1256

**விற்பனைக்கு உண்டு**
தெல்லிப்பளை K.K.S. வீதி. காசி விநாயகர் கோயில் அருகாமையில் 5½ பரப்புக் காணியில் கீழ்த்தளம், 3 கடை. மேல்தளம் (வீடு ஓரளவு கட்டிமுடிக்கப்பட்ட நிலை) 50 தென்னை மரங்களுடன் விற்பனைக்கு உண்டு.
(விலை பேசித் தீர்மானிக்கலாம்.)
077 428 1240

**காணி விற்பனைக்குண்டு**
பலாலி வீதி கோண்டாவில் டிப்போவிற்கு அருகில் 2¾ பரப்பு வெற்றுக் காணி விற்பனைக்குண்டு.
077 411 8851/077 220 8432

**New Science World**
Com Maths
Day Classes
- சட்டப்படல்
- மூட்டிய கோல்

ஆரம்பம் :- 02.12.2019 (திங்கள்)
Monday To Friday
7.30 am - 9.30 am
By:- K.ஐங்கரன் BSc



அகரம் உயர் நிலைக் கல்லூரி
AHARAM HIGH STANDARD COLLEGE
கொக்குவில் • மல்லாகம்
தமிழ், ஆங்கில மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய கல்வியாண்டு
2020
02.12.2019
திங்கட்கிழமை மாலை 3.30 மணி
குறிப்பு:
தரம்- 6 தொடக்கம் 11 வரையான அனைத்து வகுப்புக்களும் குறித்த நேரத்தில் ஆரம்பமாகும்
"அகரம் எம் தேசக்குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்"

**பணியாளர் தேவை**
பட்டா ரக வாகனத்தில் பொருள்கள் விநியோகிப்பதற்கு சாரதி தேவை.
தங்கும் விடுதியில் பணிபுரிவதற்குப் பராமரிப்பாளர் தேவை.
(முன்னனுபவம் விரும்பத்தக்கது)
077 538 0981

**பாமசிக்கு வேலை ஆள் தேவை**
குருநகரில் அமைந்துள்ள பாமசி ஒன்றிற்கு வேலையாள் தேவை. யாழ். மாநகர சபைக்குள் வசிப்பவரும், கணினி அறிவுள்ளவரும் பாமசியில் வேலை செய்த அனுபமுள்ளவரும் விரும்பத்தக்கது.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
077 791 7630, 077 666 9034

**வேலைக்கு ஆள்கள் தேவை**
Elcardo(Pvt)Ltd
- Marketing Sales Reps
- Driver

அவசரமாகத் தேவைப்படுகின்றார்கள்.
நல்ல சம்பளம்
076 215 4235
071 454 0968

**வேலை வாய்ப்பு**
யாழ் நகரில் இயங்கி வரும் பிரபல ஆய்வு கூடத்திற்கு தாதியர் தேவை. (Nurse)
அனுபவம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.
யாழ் நகருக்கு அண்மையிலுள்ளவர்கள் விரும்பத்தக்கது.
077 6685086/076 4130929

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 01.12.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.